
சிறுவர்களுக்கான
கந்தபுராணம்
கே. வி. குணசேகரம்

# என்னுரை

நான் எழுத்துலகில் புகுந்து 50 ஆண்டுகள் நிறைவடைவதன் காரணமாகவும், 1987ஆம் ஆண்டு தீபாவளியன்று இறந்த எனது தந்தையின் 30 ஆண்டு நினைவு காரணமாகவும் இந் நூலை வெளியிடுகிறேன். சிறுவர்கள் சமயதத்துவங்களை அறிய வேண்டும் என்பதற்காக இந்து சமய தத்துவங்களையும், நூல்களையும் ஆய்வு செய்து அவர்களுக்கு விளங்கும் படியாக எழுதி வருகிறேன். முருகனைப்பற்றி நான்கு நூல்கள் எழுதியுள்ளேன். அதில் முருகனைப் பற்றிய வரலாறு, மகிமைகள், பயன்கள் பற்றி விரிவாக எழுதியுள்ளேன். கந்த புராணம் யாழ்ப்பாணத்துக் கலாச்சார நூல் என்பது பல பெரியவர்களின் கூற்று, கந்தபுராணத்தைச் சிறுவர்கள் அறிந்து கொள்ளல் வேண்டும். கந்த புராணத்தைப் பலரும் செவி வழியாகத் தான் அறிந்துள்ளனர். இப்போது எழுதியமையால் தான் பல புதிய விடயங்களை அறிந்து கொள்ளமுடிந்தது. நான் படிக்கும் காலத்தில் யாராவது புழுகுவார்கள். அப்போது எனது நண்பர்கள் கூறுவார்கள் உந்தப் புழுகு கந்தபுராணத்தின் கடைசி ஒற்றையில் உள்ளது என்று இரண்டாயிரம் வருடங்களுக்கு முன்பு எழுதப்பட்ட கந்த புராணத்தை அடிப்படையாகக் கொண்டு தான் தற்போது ஆங்கிலப் படங்கள் தயராகிப் பெருவெற்றி பெறுகின்றன. நம்மவர் இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன் எழுதியதை பிறநாட்டார் நவீனயுக்திகளுடன் படமாகத் தயாரிக்க எம்மவர் அதை பார்த்து ரசிக்கின்றனர். அவர்கள் யாரும் கந்தபுராணத்தை வாசிக்கவில்லை. நான் சிறுவர்களுக்கென எழுதும் நூல்களைப் பெரியவர்கள் தான் அதிகம் வாசிக்கின்றனர். சமயதத்துவங்கள் முழுவதையும் சுமார்பத்தாயிரத்திற்கு மேற்பட்ட கதைகளாக எழுதியுள்ளேன். விளங்காமையால் அமிழ்ந்து கொண்டிருக்கும் நூல்களுக்கு நான் கதை வடிவம் கொடுத்து மறுவாழ்வளித்து வருகிறேன். எனக்குப் புகழோ, பரிசோ, பணமோ தேவையில்லை. அவை யாவும் வரும். பலவும் வந்து விட்டது.

இலக்கியத்துறையில் உலகில் உள்ள எவராலும் எனது சாதனைகளை முறியடிக்க முடியாதென்பதை WWW.GUNSEGARAM.COM பறை சாற்றிக் கொண்டிருக்கிறது. திருவருட்பயன், திருமந்திரம், திருக்குறள், பகவத்கீதையில் உள்ள முழுச்சுலோகங்களுக்கு யாரும் இதுவரைகதை எழுதவில்லை. இனி எழுதினால் தான் எனது சாதனை முறியடிக்கப்படும். இது உலகில் உள்ள இந்து சமயத்தவர்களுக்குச் சமர்ப்பணம். இது வரை எனது நூல்களை யாரும் விமர்சிக்காமையால் நானே என்னைப் பற்றிக் கூறவேண்டியதாக உள்ளது. எப்போதும் விருதுகள் கொடுக்கப்பட்ட நூல்களைக் காண முடியாது. எனக்கும் எந்த விருதும் கிடைக்கப்படவில்லை. ஆனால் எனது நூல்களை எப்போதும் எங்கும் பெறலாம்.

இந்நூலுக்கு மட்டுமல்ல நான் எழுதிய நூற்றுக்கு மேற்பட்ட நூல்களுக்கான அழகான அட்டைப்படங்களை வடிவமைத்துத்தந்த செல்வி ப.யாழினிக்கும், கணனிமயப்படுத்தியும் படங்களை வடிவமைத்துத் தந்த செல்வி க.கல்ப்பனாவிற்கும் நன்றி கூறிக் கொள்கின்றேன். இந்நூலை வெளியிடும் யூனிலங்காஸ் அதிபர் திரு வே. பாலேந்திராவுக்கு நன்றி கூறிக்கொள்கின்றேன்.

கே.வி. குணசேகரம்

**திருச்சிற்றம்பலம்**

**விநாயகர் காப்பு.**

திகடசக்கரச் செம்முகமைந்துளான்

சகடசக்கரத் தாமரை நாயக

னகடசக்கர வின்மணி யாவுறை

விகட சக்கரன் மெய்ப்பதம் போற்றுவாம்.

**சுப்பிரமணியர் காப்பு**

**வாழ்த்து**

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ்சுரக்க மன்னன்

கோன்முறை யரசு செய்ககுறைவிலா துயிர்கள் வாழ்க

நான் மறை யறங்கலோங்கநற்றவம் வேள்வி மல்க

மேன்மைகொள் சைவநீதிவிளங்குக வுலகமெல்லாம்.

## காப்பு

வேண்டும்போது வேண்டியதைத் தந்தருளும் வேதமுதல்வனே

உன் தம்பியின் அருட் செயலை எழுதிட அருள் செய்வாய்.

**திருச்சிற்றம்பலம்**

# சிறுவர்களுக்கான கந்தபுராணம்

# புராண வரலாறு

தமிழ் நாட்டிலுள்ள காஞ்சிபுரம் என்னும் நகரில் சிவபெருமான் திருவேகம்பநாதர் என்னும் திருப்பெயரோடு சிவலிங்கமூர்த்தியாக எழுந்தருளி இருந்தார். அப்போது உமாதேவியார் காமாட்சி என்னும் பெயரோடு காமக்கோட்டம் என்ற திருக்கோவிலில் தவம் செய்து கொண்டிருந்தார். அதற்கு அருகில் குமரகோட்டமென்ற ஆலயத்தில் குமரக்கடவுளான முருகன் எழுந்தருளியிருந்து அடியவர்களுக்கு வேண்டியவற்றை அருளிக் கொண்டிருந்தார்

இத்தகைய சிறப்புக்கள் மிக்க காஞ்சிபுரநகரத்தில் இருந்த கச்சபாலய என்னும் சிவத்தலத்தில் பிரமதேவர் தனது மனைவியான சரஸ்வதியுடன் சிவனை வழிபட்டுக்கொண்டிருந்தார். அப்போது சௌனகரும் வேறுபல முனிவர்களும் பிரமதேவரிடம் வந்து, அவரை வணங்கித் தாம் சிவனை நினைத்துத் தவம் செய்ய விரும்புவதாகவும், அதற்குத் தகுந்த இடத்தைத் தெரிவு செய்து தரும்படியும் இரந்து வேண்டினர். அதைக் கேட்ட பிரமதேவர் ஒரு தருப்பைப்புல்லை எடுத்து அதைச் சக்கரமாக்கி உருட்டி விட்டு,“இத்தருப்பைப்புல்லால் செய்த சக்கரத்தின்பின்னே செல்லுங்கள். அது தங்குமிடம் தான் நீங்கள் தவம் செய்ய ஏற்ற இடம்” என்று கூற முனிவர்கள் பிரமதேவரை வணங்கி விடை பெற்று அச்சக்கரத்தின் பின்னால் சென்றனர். அச்சக்கரம் உருண்டு சென்று ஒரு காட்டின் நடுவே தரித்தது. அதனால் அவ்விடம் நைமிசம் எனப்பெயர் பெற்றது. முனிவர்கள் பலகாலம் தவம் செய்து பின், யாகம் செய்து மெய்யுணர்வை அடைந்தனர்.

இது இவ்வாறிருக்க, வியாசமுனிவரது மாணாக்காரான சூதமுனிவர் நைமிசவனத்திற்கு வந்து முனிவர்களைச் சந்தித்தார். அவரைக்கண்டு மகிழ்ந்த முனிவர்கள் அவரை முறைப்படி வணங்கி,‘‘குருவே, உம்மைக்காண நாம் பெருந்தவம் செய்திருத்தல் வேண்டும். அதனால் தான் நீங்கள் எம்மைத் தேடி வந்தீர்கள். எமக்குச் சிவகுமாரனான முருகப்பெருமானின் சரித்திரத்தை அறிய விரும்பினோம். அதை முழுமையாக அறிந்த தாங்கள் நாம் உய்வதற்காக எமக்கு அதை உபதேசிக்க வேண்டும்’’ என்று இரந்தனர். அவர்களது கோரிக்கைக்கு உடன்பட்ட சூதமுனிவர் தனது குருவான வியாசரையும் முருகக்கடவுளையும் மனதில் இருத்தி முருகனது வரலாற்றைக் கூறத் தொடங்கினார்.

‘‘துவாபரயுகத்தில் ஆன்மாக்கள் ஆணவமயப்பட்டுச் செய்த தீமைகளினால் வேதங்கள் யாவும் அடிதலைமாறின. அதனால் மக்களும் முனிவர்களும் அரசர்களும் எவற்றைச் செய்வதென்று அறியாது சமணம், பௌத்தம் போன்ற அவைதீக சமயங்களைப் பின்பற்றியதோடு சைவசமயத்தை வெறுத்து ஒதுக்கினர். அதனால் மனம் வருந்திய விட்டுணுவும் பிரமாவும் நந்திதேவரைச் சந்தித்து, நிலைமையை விளக்குவதற்குச் சிவபெருமானைச் சந்திக்க வழிவகுக்கும் படி கேட்டனர். அதற்கிணங்க நந்திதேவர்அவர்களைச் சிவனிடம் அழைத்துச் சென்றார். சிவபெருமானை வணங்கிய பிரமாவும் விட்டுணுவும், முழுமுதற்பொருள் தாங்கள் என உணராது அரசர்களும் முனிவர்களும் புறச்சமயங்களைத் தழுவுவதால் மக்களும் அவர்களைப் பின்பற்றுகின்றனர். அவர்கள் புறச்சமயங்களான பௌத்தம், மீமாஞ்சை, பஞ்சராத்தினம், உலோகாயதம், போன்ற சமயங்களில் சேர்ந்து சைவசமயத்தாரைச் துன்புறுத்துகின்றனர். ஆகையால் புறச்சமயவாதிகளின் ஆணவத்தை அடக்கி மீண்டும் சைவசமயத்தைத் தழைக்கச் செய்வதோடு தாங்கள் தான் முழுமுதற்கடவுள் என்ற நிலையை உருவாக்க வேண்டும்’’ என்றனர்.

அதைக்கேட்ட சிவபெருமான் விட்டுணுவை நோக்கி,‘‘விட்டுனுவே, நீ பூமியில் வியாசன் என்ற பெயரில் அவதரித்து வேதமுறைப்படி வாழ்ந்து வேதக்கருத்துக்களை உனது மாணவர்களுக்கு உபதேசிப்பாயாக. அத்துடன் நான் முன்பு பதிணெண்புராணங்களையும் நந்திதேவருக்கு உபதேசித்தேன். அதை நந்திதேவர் தனது மாணவனாசனற்குமாரனுக்கு உபதேசித்தார். நீ அவற்றை அவரிடம் கேட்டு மக்களுக்கு உபதேசிப்பாயாக.’’ என்றார்.

அதன்படி விட்டுணுகங்கைக்கரையில் வாழ்ந்த பராசரமுனிவருக்கு மகனாக அவதரித்தார். பின் சிவபெருமானின் அருளால் வேதங்களை உணர்ந்த அவர்வேதங்களை நான்காக வகுத்தார். அதனால் அவருக்கு வேதவியாசர் என்ற பெயர் உண்டானது. அதன்பின் சனத்குமாரமுனிவரிடம் பதிணெண்புராணங்களையும் கேட்டறிந்தார். பின் தனது மாணவர்களான பைவர், வைகாம்பாயனர், சைமினி, சுமந்து என்போருக்கு உபதேசித்து அவற்றை நன் மாணக்கர்களுக்கு உபதேசிக்கும்படி கூறினார்.

‘‘சிவனின் கட்டளைப்படி வியாசமுனிவரால் நான்கு வேதங்களும், வேதாந்த சரத்திரமும் பதிணெண்புராணங்களும் மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட்டது. நானும் மாணவனாக இருந்து கற்றேன்’’

‘‘முருகனின் பெருமைகளை விரிவாகக் கூறுவது சிவரகசியம். அது உற்பத்திக்காண்டம், அசுரகாண்டம், யுத்தகாண்டம், தேவகாண்டம், தசகாண்டம், உபதேசகாண்டம் என ஏழு காண்டங்களை உடையது. அவற்றை உங்களுக்கு விரிவாகக் கூறுகிறேன்’’ என்று சூதமுனிவர் சொன்னார்.

# ஒன்று - உற்பத்திக்காண்டம்.

‘‘முழுமுதற்கடவுளாகிய சிவபெருமான், ஆன்மாக்களுக்கு அருள் செய்வதற்காகத் திருக்கைலாய மலையில் உமாதேவியாருடன் எழுந்தருளியிருந்தார். அப்போது பூதங்கள் வாத்தியங்களை இசைத்தன. கணநாதர்கள் தம்மை மறந்து சிவனை நினைத்து இன்பவெள்ளத்தில் மிதந்தனர். தேவர்களும் முனிவர்களும் சிவபெருமானது அற்புதக் கோலத்தைக் கண்டு மகிழ்ந்தனர்.

அப்போது உமாதேவியார் சிவபெருமானுக்கு மிகுந்த கவலையுடன் கூறினார்,‘‘நாதா,தங்களின் மகள் தாட்சாயினியாக வாழ்ந்த காலத்தையும், அப்பெயரையும், அவ்வுடலையும் நான் வெறுக்கின்றேன். அதனால் அவற்றை நீக்க விரும்புகிறேன்’’ என்றார்.

அதைக்கேட்ட சிவபெருமான் மகிழ்வுற்று ‘‘இமயமலை அரசன் உன்னை மகளாகப் பெறத் தவம் செய்கிறான். நீ அவனுக்கு மகளாகச் செல்வாய். உரிய வயது வந்ததும் நான் உன்னை வந்து மனைவியாக ஏற்பேன்’’ என்றார். அதைக்கேட்டு மகிழ்ந்த உமாதேவியார் மிக்க மகிழ்வடைந்து இமயமலையை நோக்கிச் சென்றார்.

இமயமலையில் உள்ள மனசவாவி யென்னும் குளக்கரையில் மலையாரசன் தவம் செய்து கொண்டிருந்தான். திடீரென்று ஒரு குழந்தையின் அழுகுரல் கேட்டது. மலையரசன் குரல் வந்த திசையைப் பார்த்தான். அக்குளத்தில் உள்ள தாமரைமலரொன்றில் ஒரு அழகான பெண் குழந்தை இருந்ததைக் கண்டு பெருமகிழ்வுடன் அதை எடுத்து அரண்மனைக்குக் கொண்டு சென்று தனது மனைவியான மேனையிடம் கொடுத்தான்.

ஐந்து வயது வந்ததும் உமாதேவியார் தந்தையிடம் அனுமதி பெற்றுக் காட்டுக்குச் சென்று பன்னசாலை அமைத்துத் தவம் செய்யத் தொடங்கினார். மலையரசன் அவனுக்குத் துணையாகப் பல பெண்களை அங்கு இருக்கச் செய்தான்.

உமாதேவியாரைப் பிரிந்த சிவபெருமான் யோகத்தில் இருந்தார். அதனால் உலகின் இயக்கம் மாறுபட்டது. தீயசெயல்களை மக்களும் அசுரர்களும் அச்சமின்றிச் செய்தனர். சூரபன்மன் தேவருலகம் சென்று தேவர்களைத் துன்புறுத்தியதோடு அவர்களை அடிமைப் படுத்தினான். அதனால் பயந்த இந்திரன் தனது மனைவியுடனும் தேவர்களுடனும் பூவுலகிற்குவந்தான். திருக்கைலாய மலையில் சிவபெருமானைக் காணாமையால் மேருமலையில் அவன் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தான். பலகாலம் தவம் செய்த இந்திரனுக்குச் சிவபெருமான் இடப வாகனத்தில் தோன்றினார். சிவபெருமானைக் கண்ட இந்திரன் மனம் மகிழ்ந்து,‘‘கருணாமூர்த்தியான பரம்பொருளே, சூரபதுமன் எம்மைத் துன்பப்படுத்திப்பல தேவர்களையும் எனது மகனான சயந்தனையும் சிறைப்படுத்தி விட்டான். சூரபத்மனின் கொடுமைகளைத் தாங்கமுடியாது தேவர்களும் மானிடர்களும் பெருந்துன்பப் படுகின்றனர். அவர்களைத் தாங்கள் காப்பாற்ற வேண்டும்’’ என்று இரந்தான்.

‘‘இந்திரா, தக்கன் யாகம் செய்த போது நீங்கள் எல்லோரும் என்னை மறந்து இகழ்ந்ததற்கான பலனைத் தற்போது அனுபவிக்கிறீர்கள். விரைவில் எனக்கொரு மகன் அவதரிப்பான். அவன் உங்கள் அனைவரினதும் குறைகளைத் தீர்ப்பான்’’ என்று அருளி மறைந்துபோனார்.



‘‘சிவபெருமான் திருக்கைலாயத்தில் யோக நிலையில் அமர்ந்திருக்கிறார். உமாதேவியார் இமயமலையில் தவம் செய்கிறார். அப்படியிருக்கச் சிவனுக்கு எப்படி மகன் பிறப்பானென நினைத்துத் துயரப்பட்ட இந்திரன் பிரம தேவரிடம் சென்று தனது குறையைச் சொன்னான்’’.

பிரம்ம தேவர் இந்திரனையும் கூட வந்த தேவர்களையும் அழைத்துக்கொண்டு வைகுண்டத்தை அடைந்தார். பின் தமக்குச் சூரபன்மனால் உண்டான துன்பங்களை விட்டுணுவுக்குவிளங்கிக் கூறினார். அதைக்கேட்ட விட்டுணு சிவபெருமானைக் காம வசப்படுத்தி உமாதேவியாரோடு சேரவைக்கக் கூடியவன் மன்மதனே. அவன் தான் காமத்திற்குரிய தெய்வம். அதனால் அவனைச் சென்று சந்திப்போம்’’. என்றார். அதைக்கேட்டு மகிழ்ந்த பிரமதேவரும் இந்திரனும் தேவர்களும் மன்மதனைச் சந்திக்க மனோவதி நகரத்திற்கு வந்தனர்.

மனோவதி நகரத்திற்கு வந்த பிரமதேவர், மன்மதனை நினைத்தார். அவர் நினைத்தவுடன் அங்கு வருகை தந்த மன்மதன் பிரமதேவரை வணங்கித் தன்னை நினைத்தற்கான காரணத்தைக் கேட்டான்.

‘‘மன்மதா. சிவபெருமான் திருக்கைலாய மலையில் யோக நிட்டையில் இருப்பதால் உலகத்தின் இயக்கம் மாறுபாடு அடைந்துள்ளது. தீமைகள் பெருகிவிட்டன. தேவர்கள் முன்னெப்பொழுதையும் விட அசுரர்களால் துன்பப்படுகின்றனர். என்னால் படைப்புத் தொழிலைச் சிவபெருமானின் அருளின்றி செய்ய முடியாது. அதனால் மனிதரின் பிறப்பு வீதம் குறைவடைந்து வருகிறது. அசுரர்கள் சிவபெருமானிடம் பெற்ற வரத்தின் மகிமையால் தேவருலகை அழிக்க

முற்பட்டுவிட்டார்கள். இவை தீர வேண்டுமானால் சிவபெருமான் யோகநிலையில் இருந்து விடுபட வேண்டும். அவர் யோகநிலையில் இருந்து மீண்டு உமாதேவியாரைத் திருக்கல்யாணஞ் செய்யவேண்டும். அது நடை பெறவேண்டுமானால், நீ திருக்கைலாய மலைக்குச் சென்று யோகநிட்டையில் இருக்கும் சிவபெருமானை உனது மலர் அம்புகளால் தாக்கி அவருக்குக் கல்யாண ஆசையை ஏற்படுத்த வேண்டும்'' என்றார்.

''சுவாமி, சிவபெருமானின் அருளைப் பெற்றதனால் தான் நான் காமத்தை மலர்ப்பாணங்களாக உருவகித்து தேவர்கள் மீதும் வேறு உயிர்கள் செலுத்தி அவர்களுக்குக் கல்யாண ஆசையை உண்டாக்குகிறேன். சிவபெருமான் முழுமுதற் கடவுள். அவரை எனது மலர்ப்பாணங்கள் எதுவும் செய்யாது அத்துடன் யோகநிட்டையில் இருப்பவரைக் குழப்பினால் பெரும்துன்பம். உண்டாகும். யோகநிட்டையில் இருக்கும் முனிவர்கள் அந்த நிலையைக் கலைத்தால் கலைத்தவனைச் சபிப்பர். மூலமுதல்வரான சிவபெருமானின் யோகநிலையைக் கலைத்தால் நான் அழிந்து விடுவேன். அதனால் இச் செயலைச் செய்ய நான் துணிய மாட்டேன்''. என்றான் மன்மதன். அதைக் கேட்ட பிரமதேவர் மிக்க கவலையுடன், கூறினார்,''மன்மதா, உன்னையன்றி இச்செயலைச் செய்ய வேறு யாராலும் முடியாது. நீதான் செய்தல் வேண்டும். தேவர்களின் துயரைப் போக்கவும் ஏனைய உயிர்களைக் காப்பாற்றவும் வேண்டுமானால் சிவபெருமானின் யோகநிலை கலையவேண்டும். அது கலையாவிட்டால் அசுரர்களின் ஆதிக்கம் வலுத்துத் தேவர்களும் ஏனைய உயிர்களும் சொல்லெனாத்துன்பத்தை அனுபவிப்பர். சிவபெருமான் கருணைக்கடல். அவருக்கு யாவும் தெரியும். அதனால் நீ அஞ்சத் தேவையில்லை'' என்றார்.

பிரமதேவர் அப்படிச் சொல்லியும் மன்மதனது மனம் அமைதியடைய வில்லை. ‘‘என்னால் மலராலான பாணங்களைச் செலுத்த முடியாது. வேண்டுமானால் மலர்களைத் தூவி வணங்குகிறேன்’’ என்றான்.

அதைக்கேட்ட பிரமதேவருக்கு அளவுக்கதிகமான கோபம் வந்தது,‘‘உன்னால் தான் சிவபெருமானின் யோகநிலையைக் கலைத்து உமாதேவியாரைத் திருமணம் செய்து வைக்கமுடியும். இது பற்றி விளக்கமாகக் கூறியும் நீ கேட்கிறாய் இல்லை. நிசத்தைப் புரியாத உனக்கு நான் சாபமிடுவேன்’’ என்று எச்சரித்தார்.

பிரமதேவரின் சாபத்திற்குப் பயந்த மன்மதன்தனது மனைவியிடம் சென்று விபரத்தைக் கூறிவிட்டு மலராலான அம்புகளையும் வில்லையும்கொண்டு திருக்கைலாய மலைக்குச் சென்றான். அங்கு காவலுக்கு நின்ற நந்திதேவரிடம் நடந்தவனற்றைக் கூறி அனுமதி பெற்றுக் கொண்டு தனது மனைவியான றதியுடன் சிவபெருமானுக்கு அருகில் சென்றான்.

மன்மதன் சென்றதும் அவனது செயல்களைக் கண்காணிக்கப் பிரமதேவரும், இந்திரனும், தேவர்களும் திருக்கைலாய மலைக்குச் சென்றனர். சிவபெருமானின் அருகே சென்ற மன்மதன் சிவபெருமானை வணங்கிவிட்டு,‘‘எல்லாம் உனது திருவிளையாடல்’’ என்று நினைத்து மலராலான பாணங்களை சிவபெருமான் மீது எய்தான்.

மலர்கள் பட்டவுடன் சிவபெருமானின் நெற்றிக்கண் திறபட்டது. அதிலிருந்து வெளிப்பட்ட அக்கினி மன்மதனை எரித்துச் சாம்பலாக்கியது. அதைக்கண்டுபெருந்துன்பப்பட்ட மன்மதனின் மனைவியான றதிதேவி சிவபெருமானிடம் சென்று நிலைமையைக் கூறிப் புலம்பச் சிவபெருமான்,‘‘றதிதேவியே அஞ்சாதே. என்னருளால் தான் யாவும் நடைபெற்றன. தேவர்கள் தக்கன் செய்த

யாகத்தின் போது அறியாமையால் செய்த தவறை உணர்த்தும் பொருட்டே இந்திருவிளையாடலை நடத்தினேன். அறியாமையால் பாவம் செய்தாலும் அதன் பயனை யாராக இருந்தாலும் அனுபவித்தே தீரவேண்டும் என்பதைத் தேவர்களும் மனிதர்களும் உணரவேண்டும். அதற்காகத் தான் இத்திருவிளையாடல் நிகழ்த்தப்பட்டது. நான் இமயமலைசென்று உமாதேவியாரைத் திருக்கல்யாணம் செய்யும்போது உனது கணவன் உயிர் பெறுவான்'' என்றார். அதைக் கேட்ட றதிதேவியும் இந்திரனும் பிரமதேவரும் தேவர்களும் அளவில்லாத மகிழ்வடைந்தனர்.

மன்மதன் எரித்து சாம்பலான பின்பும் சிவபெருமான் முன்பு போல யோக நிட்டையில் ஆழ்ந்தார். அதைக்கண்டு பதறிய திருமாலும் இந்திரனும் தேவர்களும் றதிதேவியும் கலங்கிச் சிவபெருமானே தஞ்சமென நினைத்து அவரது பாதங்களைத் தொட்டுத் தம்மைக் காப்பாற்றும்படி இரந்தனர். அதனைக் கண்டு இரங்கிய சிவபெருமான் உமாதேவியாரைத் திருமணம் செய்து தேவர்களது துன்பத்தைப் போக்குவதற்காக இமயமலையில் தவம் செய்யும் உமாதேவியாரைச் சந்திப்பதற்காகப் பிராமணவடிவமெடுத்த முதியவராகச் சென்றார்.

முதியவரான பிராமணரைக் கண்ட உமாதேவியாரின் தோழிகள் அவரது வரவை உமாதேவியாருக்குத் தெரிவித்தனர். அதற்கு உமாதேவியார்பிராமணரை''அழைத்து வா'' என்றாள்.

வந்த உமாதேவியாரின் தோழியான விசை என்பவள் அவரை ஆசனத்தில் அமரும்படி கூற அப்பிராமணர் ஆசனத்தில் அமர்ந்து உமாதேவியாரைக் காதல் பொங்கப் பார்த்து,''அழகான பெண்ணே, எதற்காக இச்சிறுவயதில் தவம் செய்கிறாய். அரசனின் மகளான நீ செல்வச் சிறப்புடன் வாழவேண்டியவள்.''என்று கூற உமாதேவியாரின் தோழியான விசை என்பாள்,''அரசனின் மகளான இவள் சிவபெருமானைத் திருமணம் செய்வதற்காகத் தவம் செய்கிறாள்'' என்றாள்.

பிராமணர் அதைக்கேட்டுக் கேலியாகச் சிரித்து விட்டு,“பிரமாவாலும், விட்டுணுவாலுமே அறியப்படாத சிவபெருமானை இவள் திருமணம் செய்யப்போகிறாளா….? அவ்வளவு வல்லமை பெற்றவளா இவள்…?”என்ற சிரித்து விட்டு,“விளையாட்டுத் தனத்தை விட்டு விட்டு அரசகுமாரியைப் போல நடந்து கொள்” என்றார்.

அதைக் கேட்ட உமாதேவியார்,“ஐயையோ, தெரியாத் தனமாக இவரை உள்ளே அழைத்து விட்டேன். முதிய பிராமணரான இவர் இப்படி எனது தவத்தைக் கேலி செய்யலாமா…? இத்தவத்தை நான் சிவபெருமானை அடையும் வரை கைவிட மாட்டேன். ஆகையால் முதியவரே எழும்பி வெளியே செல்லும்” என்று கோபத்துடன் சொன்னாள்.

அதைக்கேட்டு நகைத்த முதிய பிராமணர்,“ பெண்ணே நீ அரசகுமாரி. செல்வமும் வளமும் அழகும் இளமையும் உடையவள். ஆனால் அச்சிவன் தோலை ஆடையாக அணிபவன். பாம்பை ஆபரணமாகக் கொண்டவன். மண்டை ஓடுகளையும் எலும்புகளையும் கோர்த்து மாலையாக அணிபவன். மண்டை ஓட்டில் பிச்சை எடுப்பவன். அவன் பூசுவது சுடலைச்சாம்பலை” என்று கூறும்போது உமாதேவியார் கோபத்துடன் குறுக்கிட்டு,“தக்கனைப்போல பேசும் நீ அவன் அவரை இகழ்ந்தமையால் பட்ட துன்பங்களை அறியவில்லையா? அதைவிட மேலான துன்பத்தை நீ அடையப்போகிறாய். சிவனடியாரைப் போல வீபூதியும் உருத்திராக்கமும் தரித்துப் பிழைப்பு நடத்துகிறாயா…? வெளியே போ” என்றாள்.

“பெண்ணே, உன் மீது காதல் கொண்டு உன்னைத் தேடி ஆவலுடன் வந்த என்னை போகும் படி துரத்துகிறாயே” என்று சிவபெருமான் கூற

“ஐயகோ,இக்கிழவன் பேசும் பேச்சா இது? சிவனை நிந்திப்பதோடு என்னைத் திருமணம் செய்ய வந்தானாம்…” என அழுதவாறு தனது காதுகளைப் பொத்திக்கொண்டு அவ்விடத்தை விட்டுப்போக முயன்றாள் உமாதேவியார்.

அப்போது ஓர் அதிசயம் நிகழ்ந்தது. முதிய பிராமணர் இடப வாகனத்தில் தோன்றினார். அவரைக்கண்ட உமாதேவியார் மிக்க மகிழ்வுடன் தனது எண்ணம் நிறைவேறியமையை நினைத்துச் சிவபெருமானை வணங்கினார்.

அப்பொழுது அங்கே வந்த மலையரசன் மிக்க மகிழ்வுடன் சிவபெருமானை வணங்கித் தனது எண்ணத்தை நிறைவேற்றியமைக்காகச் சிவபெருமானுக்கு நன்றி தெரிவித்தான்.

அதன்பின் திருக்கைலாய மலைக்குச் சென்ற சிவபெருமான் ஏழு இருடிகளையும் அழைத்து,“அன்பர்களே, நீங்கள் ஏழுபேரும் இமயமலை அரசனிடம் சென்ற அவனது மகளான பார்வதி தேவியாரை இன்றே நமக்கு விவாகம் செய்து வைக்கும்படி கூறுங்கள்” என்றார்.

ஏழு இருடிகளும் மலையரசனைச் சந்தித்துத் தாம் வந்த விடயத்தைக் கூறினர். மலையரசன் மகிழ்வடைந்து உடனே சம்மதித்தான். இருடிகள் அதைக் கேட்டு மகிழ்வடைந்து மலையரசனிடம் விடைபெற்றுச் சென்று சிவபெருமானுக்கு அதைக் கூறினர்.

இருடிகள் சென்றதும் மலையரசன் தேவதச்சனை மனதுள் நினைத்தான். மறுகணம் தேவதச்சன் மலையரசனின் அரண்மனைக்கு வந்து அவனைப் பணிந்தான்,“தேவதச்சரே, எனது மகளான பார்வதிதேவியாரைச் சிவபெருமானுக்குத் திருமணம் செய்து கொடுக்கவுள்ளேன். அதனால் எனது நகரை இந்திரலோகம் போல அலங்கரித்தல் வேண்டும்” என்றான்.

தேவதச்சன் இமயமலையில் இருந்தமலையரசனின் நகரைப்பல்வேறு பட்ட இரத்தினங்களாலும் முத்துக்களாலும் மணிகளாலும் பல்வேறு அலங்காரப் பொருட்களாலும் இந்திரலோகத்தை விடச் சிறப்பாக அலங்கரித்தான்.

அதன்பின் மலையரசன் பிரமா, விட்டுணு, இந்திரன் போன்றவர்களுக்கும் முனிவர்களுக்கும் தனது மகளின் திருமணச் செய்தியைத் தூதுவர்கள் மூலம் அறிவித்தான். அவர்களெல்லோரையும் சிவபெருமான் முன்பே அழைத்திருந்தமையால் தாம் சிவபெருமானுடன் வருவதாக அவர்கள் அறிவித்தனர்.

பங்குனி உத்திரத்தன்று சிவபெருமானினதும் பார்வதி தேவியினதும் திருமணம் நடைபெற ஏற்பாடாகியிருந்தது.

சிவபெருமான் இமயமலைக்குப் புறப்பட்டபோது, தேவர்களும் முனிவர்களும், விநாயகரும், பூதகனங்களும், சூரியனும், சந்திரனும், வருணனும் சிவபெருமானைப் பின் தொடர்ந்து சென்றனர். உருத்திரர்களும், பிரமாவும், விட்டுணுவும், முனிவர்களும். பிறரும் தத்தமது வாகனங்களிற் சென்றனர். அப்போது இன்னிசை இசைக்கப்பட்டது. சாமகானம் பாடப்பட்டது. சங்குகள், கொம்புகள், பேரிகைகள், ஒலி எழுப்பின. வெண் கொற்றைக் குடையைச் சூரியனும், சந்திரனும் பிடிக்க இந்திரன் ஆலவட்டத்தைப் பிடிக்க, பூதங்கள் வாத்தியம் இசைக்க இடபவாகனத்தில் சிவபெருமான் இமயமலையை நோக்கிப் புறப்பட்டார்.

அதை அறிந்த மலையரசன் தனது படையனிகளோடும், சுற்றத்தினரோடும் சென்று சிவபெருமானை வணங்கி வரவேற்றுத் திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்றான். உலகத்தில் உள்ள அனைவரும் இமயமலையில் கூடியிருந்தமையால் அப்பாரத்தைத் தாங்கமுடியாது இமயமலை நடுநடுங்கியது. அதைக்கண்ட சிவபெருமான் அகத்தியர் முனிவரை அழைத்து,‘‘குறுமுனியே, எனது திருமணத்தைக் காண உலகில் உள்ள அனைவரும் இமயமலைக்கு வந்தமையால்

பூமியின் வடபகுதி தாழத் தென்பகுதி உயர்ந்து விட்டது. அதனால் நீர் உடனே தென்பகுதிக்குச் சென்று பொதிகை மலையில் இருக்கக் கடவாய்'' என்றார். உடனே அகத்தியர் சிவபெருமானை வணங்கிவிட்டுத் தெற்கே சென்று பொதிகை மலையில் அமர்ந்ததும் பூமி சமநிலைப்படுத்தப்பட்டது.

அதன் பின் பிரமதேவர் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணத்தை நடத்தி வைத்தார்.

அப்பொழுது மன்மதனின் மனைவியாக ரதிதேவிவந்து சிவபெருமானையும், உமாதேவியாரையும் வணங்கினாள். அப்போது சிவபெருமானின் பேரருளால் மன்மதன் உயிர்பெற்று அங்கு வந்து சிவபெருமானை வணங்கினான்,''மன்மதா, நீ உன் மனைவியின் கண்களுக்கு மட்டுமே தென்படுவாய், ஏனைய தேவர்களுக்கும் மனிதருக்கும் தெரியமாட்டாய். இவ்வுருவிலே இருந்து உனது கடமைகளைச்செய்'' என்றார்.

அதன்பின் சிவபெருமானும் உமாதேவியாரும் இடபவாகனத்தில் ஏறித்திருக்கைலாய மலையை அடைந்தார்.

சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணம் நடைபெற்றுப்பல மாதங்கள் சென்றும் அவர்களுக்குக் குழந்தை பிறக்காததால் கவலை கொண்ட பிரமாவும் விட்டுணுவும் வாயு தேவனை அழைத்துக் கொண்டு திருக்கைலாயம் சென்று, வாயுவைப் பார்த்து திருக்கைலாயத்தில் உள்ள நிலைமையை ஆராய்ந்து வருமாறு கூறினார்கள். முன்பு மன்மதன் சென்ற போது ஏற்பட்டதுபோன்ற நிலை தனக்கும் ஏற்பட்டுவிடும் என்று மறுத்த வாயுதேவன் பின் பிரமாவினதும் விட்டுணுவினதும் வற்புறுத்தலுக்காகப் பயந்து பயந்து திருக்கைலாய மலையை அடைந்தான். அங்கு அவனைக் கண்ட நந்திதேவர் அவனை உள்ளே செல்ல

அனுமதிக்காததால் அவன் அங்கிருந்து சென்று தனக்கேற்பட்ட நிலையைப் பிரமாவுக்கும் விட்டுணுவுக்கும் கூறினான்.

அதனால் மிக்க துயரங்கொண்ட பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் தாமே புறப்பட்டுச் சென்று நந்திதேவரின் துணையோடு சிவபெருமானைச் சந்தித்து,''சர்வேஸ்வரா, தங்களின் திருமணத்தின் பின் பெரும் வீரனான முருகன் தோன்றி எம்மைக் கொடுமைப்படுத்தும் அசுரர்களைப் பூண்டோடு அழித்து எம்மைக் காப்பான் என நினைத்தோம். அது இது வரை நிகழாததால் நாம் பெரும் துன்பத்துக்குள்ளாகியுள்ளோம். அசுரர்களின் கொடுமை வரவர அதிகரிக்கிறது. அதை எம்மால் தாங்கிக் கொள்ள முடியவில்லை'' என்று முறையிட்டனர்.



அவர்களின் துன்பத்தைப் போக்க நினைத்த சிவபெருமான் தனது நெற்றிக்கண்ணைத் திறந்தார். அதிலிருந்து ஆறு தீப்பொறிகள் வெளிப்பட்டுச் சரவணப்பொய்கையில் விழுந்தன. விழுந்தவுடன் அவை ஆறு குழந்தைகளாக மாறின. சிவபெருமானின் கட்டளைப்படி அங்குவந்த கார்த்திகைப் பெண்கள் ஆறு தாமரைப்பூக்களில் இருந்த அவ்வாறு குழந்தைகளையும் அணைத்துத் தூக்கி வந்து வளர்த்தனர்.

சிலகாலம் செல்ல சிவபெருமானும் உமாதேவியாரும் கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்த முருகனை இடபவாகனத்தில் சென்று திருக்கைலாய மலைக்கு அழைத்து வரச் சென்றனர். சரவணப் பொய்கைக்கரையில் கார்த்திகைப் பெண்களுடன் விளையாடிக் கொண்டிருந்த தமது ஆறு குழந்தைகளின் அழகையும்

வனப்பையும் கண்டு மகிழ்ந்த உமாதேவியார் அவ்வாறு குழந்தைகளையும் அன்புடன் அணைத்தார். அப்பொழுது அவ் ஆறு குழந்தைகளும் ஒன்றாகின. ஆறதிருமுகங்களையும் பன்னிருகைகளையும் கொண்ட அக்குழந்தை கந்தர் என்ற நாமத்தைப் பெற்றது. அதன்பின் சிவபெருமானும் உமாதேவியாரும் கந்தர் என்ற முருகனும் திருக்கைலாய மலைக்குச் சென்றனர்.

கைலாயத்திற்குச் சென்ற சிவபெருமான் உமாதேவியாருக்குச் சொன்னார்,“உமையே, நமது நெற்றிக் கண்ணில் இருந்து தோன்றிய எமது குமரன் சரவணப்பொய்கையில் தோன்றியமையால் காங்கேயன் எனவும் சரவணத்திலே தோன்றியமையால் சரவணபவன் எனவும் கார்த்திகை மகளால் வளர்க்கப்பட்டமையால் கார்த்திகேயன் எனவும் உன்னாலே ஆறுகுழந்தைகளும் ஒன்றாகியமையால் கந்தர் என்றும் பெயர்பெறுவான். நமக்கு ஆறுமுகங்கள் உண்டு. அவை கந்தரனுக்கு முகங்களாகின. தகரப் பிரம்மாகவுள்ள நமது ஆறு எழுத்தும் ஒன்றாகிச் சடாச்சரமாகி நமது குமாரனது மந்திரமாகும். அதனால் ஆறுமுகக் கடவுளான முருகன் நமக்குள்ள அனைத்துச் சக்திகளையும் அடக்கியவனாவான். அதனால் எமக்கும் அவனுக்கும் எந்த வேறுபாடுகளும் இல்லை. முற்றறிவுள்ள அவன் எல்லாப் பொருட்களையும் புலப்படக் காணும் சக்தியுள்ளவன். தன்னை அன்போடு வழிபடுபவர்களுக்கு வேண்டும் வரங்களைக் கொடுக்கும் தன்மை வாய்ந்தவன். காலகதியில் அவன் தேவர்களையும் மனிதர்களையும் மனிதர்களையும் கொடுமைப்படுத்தும் அசுரர்கள் அனைவரையும் அழித்து அவர்களைக் காப்பான்” என்றார்.

முருகன் சிறு பிள்ளையாக இருக்கும் போதே பல திரு விளையாடல்களை விளையாட்டாகச் செய்தார். அவைபல பிரமனுக்குத் தலையில் குட்டிச் சிறை வைத்தார். கடல்கள் அனைத்தையும் ஒன்றாக்குவார். மகாமேரு மலையைத் தனது

காலால் அழுத்திப் பாதாளத்திற்கு அனுப்புவார். கங்கை நதியைவற்றச் செய்வார். பாதாளத்தில் உள்ள எட்டு நாகங்களையும் பிடித்து வந்து மகாமேருமலையில் கட்டி வைப்பார். திக்கு யானைகளை முரண்படச் செய்து யுத்தம் செய்ய வைப்பார். வடவாமுகாக்கனியை ஆகாய கங்கை நீரால் அணைப்பார். கருடனையும் வாசுகியையும் சண்டையிலீடுபடுத்துவார். சூரியனைச் சந்திரனாக்குவார்., சந்திரனைச் சூரியனாக்குவார். இவ்வாறு செய்தற்கரிய பல செயல்களைச் செய்து விளையாடுவார்.

இவற்றைக் கண்ட அசுரர்கள் இத்தகைய மாயங்களைப் பூமியில் செய்ய வல்லவர் யார் என்று திகைத்தனர். இவற்றைக் கண்டு பயந்த தேவர்கள் தமது தலைவனாக இந்திரனிடம் சென்று அவற்றைப் பற்றிக் கூறினர். அவை எதையும் இந்திரன் அறிந்து கொள்ளாமையால் தேவர்கள் சொல்வதைக்கேட்டு அதிசயித்தான்.

அப்பொழுது முருகக்கடவுள் தேவர்கள் முன்தோன்றிப் பல அதிசயங்களைச் செய்ய இந்திரன் முருகனைத் தமக்குத் தீங்கு செய்ய வந்தவன் என்று எண்ணிப்போர் செய்தனர். இந்திரன் முதலிய தேவர்கள் விட்ட அம்புகள் யாவும் மலர் மாலைகளாக மாறி முருகனின் கழுத்தில் விழுந்தன. சந்திரன், சூரியன், யமன், பிரமா, விட்டுணு, இந்திரன் போன்றோர் விட்ட அம்புகள் எவையும் முருகனைத் தாக்கவில்லை. மாறாக முருகன் விட்ட அம்புகள் அவர்களைத் தாக்கிக் கொன்றது.

இதைக்கண்ட நாரத முனிவர் தேவகுருவாகிய பிரகஷ்பதியிடம் சென்று முறையிடப் பிரகஷ்பதி போர்க்களத்திற்குச் சென்று முருகனை வணங்கி,"முருகா, ஞானவடிவே, உன்னை யாரென்றும், உனது பெருமைகள் இன்னதென்றும் அறியாத இந்திரனும் தேவர்களும் உன்னோடு போர் புரிந்தனர். அதை மன்னித்துத் தேவர்களுக்கு அருள் புரிய வேண்டும்" என்றார்.



தமது தவறை உணர்ந்த தேவர்கள் முருகனை வணங்கினர்,‘‘முருகப் பெருமானே, நாம் அசுரர்களால் பெரும் துன்பப்படுகிறோம். அதனால் தங்களையும் எம்மைத் தாக்க வந்த அசுரனென நினைத்துவிட்டோம். எம்மை மன்னித்து எமக்கு உயிர் பிச்சை அளியுங்கள்’’ என்று இரந்தனர். அதைக்கேட்டு மகிழ்ந்த முருகக்கடவுள்,‘‘நீங்கள் தக்கனின் யாகத்திற்குச் சென்ற பழி இன்னும் நீங்காமையால் தான் இது நடைபெற்றது. இப்பொழுது என்னால் அது நீக்கப்பட்டது’’என்று கூறித் தனது விசுவரூபத்தைக் காட்டினார். அதைக் கண்டு அதிசயித்த தேவர்கள்,‘‘இனி எமக்கு அசுரர்களால் துன்பமேற்படாது’’ என்று நினைத்து மகிழ்ந்தனர்.

முருகன் திருக்கைலாய மலைக்கு வந்த பின்பு, நாரதர், சிவபெருமானுக்காக பூமியில் ஒரு யாகம் செய்தார். அந்த யாகக்குண்டத்தில் இருந்து ஓர் ஆட்டுக்கடா தோன்றியது. அவ்வாடு மிகுந்த சீற்றம் கொண்டு தேவர்களையும் மனிதர்களையும் துரத்தித் துரத்தித் தாக்கிப் பலரைக் கொன்றது. தேவர்களும் மனிதர்களும் உயிருக்கஞ்சித் தப்பி ஓடி சென்று திருக்கைலாய மலையை அடைந்தனர். அங்கே முருகன் தனது நண்பர்களுடன் விளையாடிக் கொண்டிருந்தான். தேவர்கள் பயந்து அச்சத்துடன் ஓடி வருவதைக் கண்ட முருகன்,‘‘ஏன் இப்படி ஓடி வருகிறீர்கள்’’ என்று கேட்க தேவர்கள் நடந்ததைக் கூறினர். அதைக் கேட்ட முருகன் வீரவாகு தேவரை அனுப்பி அவ்வாட்டைப் பிடித்து வரச் செய்து தனது வாகனமாக்கி கொண்டான். தேவர்கள் மிக்க மகிழ்வுடன் சென்று யாகத்தைப் பூர்த்தி செய்தனர்.

தினமும் காலையில் தேவர்கள் எல்லோரும் திருக்கைலாய மலைக்குச் சென்று சிவபெருமானை வணங்கி வந்தனர். அன்று எல்லோரும் சிவபெருமானை

வணங்கி விட்டு வரும் போது முருகன் வாசலில் நின்று இறுமாற்ப்புடன் முருகனை மதியாது சென்ற திருமாலை அழைத்து,‘‘நீர் யார்? என்ன தொழில் செய்கிறீர்?’’ என்று கேட்டார்.

‘‘அதற்குப் பிரமா படைத்தல் தொழிலைச் செய்யும் பிரம்ம தேவர் நான் தான்’’ என்றார்.

‘‘படைக்கும் போதுஎந்த மந்திரத்தைச் சொல்லி படைப்பீர்’’ என்று முருகன் கேட்க பிரம்மா,‘‘பிரணவ மந்திரத்தைச் சொல்லியே படைத்தல் தொழிலைச் செய்வேன்’’ என்றார். அப்படியா? நல்லது பிரணவ மந்திரத்தின் பொருளைக் கூறுங்கள’’ என்றான் முருகன்.

வெகு நேரம் சென்றும் பிரமாவல் அதன் பொருளைக் கூற முடியவில்லை. அதனால் பிரமனின் நான்கு தலைகளிலும் குட்டிய முருகன் பிரமாவை சிறையில் அடைத்து விட்டு பிரமா செய்த படைப்புத் தொழிலைத் தான் செய்து கொண்டிருந்தார்.

இதை அறிந்த விட்டுணு தேவர்கள் அனைவரையும் அழைத்துக் கொண்டு திருக் கைலாய மலையை அடைந்தார். அங்கு சிவபெருமான் உமாதேவியாரோடு வீற்றிருந்தார். அவர்கள் இருவரையும் தேவர்கள் வணங்கினார்கள். சிவபெருமானை வணங்கிய விட்டுணு,‘‘முழுமுதற் கடவுளே, தங்கள் குமாரனான முருகன் பிரமாவிடம் பிரணவ மந்திரத்தின் பொருளைக் கேட்டார். பிரமா அதைச் சொல்லாததால் குமரக் கடவுள் அவரது தலையில் குட்டி சிறையில் அடைத்து விட்டுத் தான் படைத்தல் தொழிலைச் செய்து கொண்டிருக்கிறார். தாங்கள் பிரமனைச் சிறை நீக்கி மீண்டும் படைத்தல் தொழிலைச் செய்ய அனுமதிக்க வேண்டும்’’ என்றார். அதைக் கேட்ட சிவபெருமான் நந்திதேவரைப் பார்த்து,‘‘நந்தி தேவரே உடனே எனது குமாரனான

முருகனைச் சந்தித்து நான் சொன்னதாகச் சொல்லி பிரமனை விடுவித்து என்னிடம் அழைத்து வாரும்.'' என்றார். சிவபெருமான் சொன்னதும் நந்திதேவர் முருகனிடம் சென்று சிவபெருமான் கூறியவற்றைக் கூறினார். முருகன் அதை ஏற்க மறுத்து அவரைக் கோபித்துத் திருப்பி அனுப்பினான். அதை நந்தி தேவர் சிபெருமானுக்குத் தெரிவித்தார். சிவபெருமான் முருகனைச் சந்திப்பதற்காக சென்ற போது தேவர்கள் எல்லோரும் அவரைப் பின் தொடர்ந்து சென்றனர். தேவர்கள் கூட்டத்துடன் சிவபெருமான் வருவதை அறிந்த முருகன் எழுந்து வணங்கினான்.

''மகனே பிரமாவைச் சிறையில் அடைத்து வைத்திருப்பது நியாயமல்ல அதனால் உடனே விடுதலை செய்.'' என்று சிவபெருமான் கூறினார்.

''தந்தையே பிரணவ மந்திரத்தின் பொருளை அறியாது எப்படி உங்களை வணங்க முடியும். அப்படியானவனுக்கு எப்படிப் படைத்தல் தொழிலைச் வழங்கினீர்கள். அவன் படைத்தல் தொழிலைச் செய்வதால் கர்வத்துடன் யாரையும் மதிப்பதில்லை. அதனால் அவனை விடுதலை செய்ய மாட்டேன்.'' என்று முருகன் கூறினான். ''மகனே தந்தையின் சொல்லைக் கேட்க வேண்டும். தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை. என்று உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டதும் முருகன் தந்தைக்காகப் பிரமனை விடுதலை செய்தான்.

பிரமன் தனதுதவறை உணர்ந்து முருகனிடம் மன்னிப்புக் கேட்டான். அதன் பின் சிவபெருமானின் கட்டளைப்படி பிரமன் படைப்புத் தொழிலைச் செய்யத் தொடங்கினான். பிரமன் விடுதலையானதும் தேவர்கள் எல்லோரும் சென்று விட சிவபெருமான் முருகனைத் தூக்கித் தனது மடியில் இருத்தி முத்தமிட்டார். பின்பு ''மகனே உனக்குப் பிரணவத்தின் பொருள் தெரியுமா எனக்குக் கூறு'' என்றார்.

அதற்கு முருகன் பிரணவ மந்திரப் பொருளை பிறர்கேட்கும்படியாகக் கூறக் கூடாது'' என்று கூறி அவரது காதில் இரகசியமாகக் கூறினான்.

சரவணப்பொய்கையின் அருகே விட்டுணுவின் புத்திரிகளான அமிர்தவல்லியும், சுந்தரவல்லியும் முருகனைக் கணவனாக அடையும் பொருட்டுக் கடுந்தவம் செய்தனர். இதை அறிந்த முருகன் சரவணப்பொய்கைக்கு வந்தார். அமிர்தவல்லியும் சுந்தரவல்லியும் முருகனைக் கண்டு மகிழ்வுற்றுத் தொழுது தமது எண்ணத்தை வெளியிட்டனர்.

அதைக்கேட்டு மகிழ்ந்த முருகன்,''அமுதவல்லியே, நீ இந்திரனுக்கு மகனாகப் பிறப்பாய். சுந்தரவல்லியே, நீ பூமியில் சிவமுனிக்கு புதல்வியாகப் பிறந்து வேடுவர்குலத் தலைவனின் அரண்மனையில் வளர்வாய். உரியவேளையில் நான் வந்து உங்களைத் திருமணம் செய்வேன்'' என்றார். இருவரும் மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

அமிர்தவல்லி குழந்தை வடிவமெடுத்து இந்திரனிடம் செல்ல, அவன் சகலதையும் உணர்ந்து அவளை மகளாக ஏற்றான். அதுபோலச்சுந்தரவல்லியும் குழந்தை வடிவமெடுத்து வள்ளி மலையிலே தவம் செய்து கொண்டிருந்த சிவமுனிக்கு மகளானாள்.

அவ்வேளையில் அசுரர்களில் வெறியாட்டம் அதிகரிக்கத் தேவர்கள் எல்லோரும் திருக்கைலாய மலைக்குச் சென்று நந்தி தேவரிடம் அனுமதி பெற்றுச் சிவபெருமானை சந்தித்தனர். தேவர்களின் தலைவனான இந்திரன் சிவபெருமானை வணங்கி,''முழுமுதற்கடவுளே, சூரனோடு சேர்ந்த அசுரர்களால் நாம் படும் துன்பங்களைச் சொல்லி முடிக்க முடியாது. எனது புதல்வனான சயந்தனையும் தேவர்களையும் அரம்பையர்களையும் அரக்கர்கள் சிறை பிடித்துச் சென்று

துன்பப்படுத்துகின்றனர். தேவலோகம் அரக்கர்களால் நாசமாக்கப்பட்டுவிட்டது. அசுரர்களை அழித்து எம்மைக் காப்பாற்றுங்கள்.'' என்றான். தேவர்களும் தமக்கு அசுரர்களால் செய்யப்படும் துன்பங்களை எடுத்துரைத்தனர்.

அவற்றைக் கேட்ட சிவபெருமான் ''குமரா, நீ சென்று தேவர்களுக்கு எண்ணிலடங்காத துன்பங்களைச் செய்யும் அசுரர்களை அழித்துத் தேவர்களைக் காத்து, வைதீக சமயங்களை நிலைபெறச் செய்து, இந்திரன் இழந்த அரசைப் பெற்றுக்கொடு'' என்றார். அதன்பின் பதினொரு உருத்திரர்களையும்,''அழைத்து நீங்கள் முருகனின் கைகளில் ஆயுதங்களாக இருங்கள்''. என்று சொல்லி அவர்களைப் படைக்கலங்களாக்கி முருகனிடத்தில் ஒப்படைத்தார். அதன் பின் ஒரு வேலாயுதத்தை வருவித்து உமாதேவியாரிடம் கொடுக்க உமாதேவியார் அதை முருகனிடம் கொடுத்தார். அதன் பின் முருகனின் ஏவலாளர்களாக இருந்தவர்களை நோக்கி,''நீங்கள் முருகன் அசுரர்களோடு யுத்தம் செய்யும் போது நீங்கள் போர்வீரர்களாக இருங்கள்'' என்று கூறி அவர்களுக்கு ஆயுதங்களைக் கொடுத்தருளினார். பின்பு கணநாதர்களை அழைத்து,''நீங்கள் உங்கள் பூதகணங்களோடு முருகனுக்குச் சேனாதிபதியாக இருங்கள்'' என்று கூறி அவர்களுக்கான ஆயுதங்களையும் கொடுத்தார். அத்துடன் பெரும்சக்தி வாய்ந்த தேரைச்சிருட்டித்து முருகனுக்குக் கொடுத்தார்.



அவற்றைப் பெற்றுக் கொண்ட முருகன் சிவபெருமானையும் உமாதேவியாரையும்

மும்முறைவலம் வந்து வணங்கி அவர்களது ஆசியைப் பெற்றார்.

தேர்வந்து நின்றதும் விட்டுணு வாயுதேவனை நோக்கி,''வாயுதேவா, முருகனது தேர் சாரதியாகப் பணியாற்று'' என்று கூற வாயுதேவன் தேரில் ஏறிமுருகனையும் ஏற்றிக் கொண்டு பூவுலகை நோக்கிச் சென்றார். தேருக்குப்பின்னால் சிவபெருமானால் கொடுக்கப்பட்ட படை வீரர்கள் சென்றனர். முருகனும் அவனது படை வீரர்களும் பூவுலகிற்குப் போகும் வழியில் கிரௌஞ்சமலை எதிர்ப்பட்டது. அதைக்கண்டதும் இந்திரன் முதலானதேவர்கள் பயத்தால் நடுநடுங்கினர். அப்போது அங்கு வந்த நாரதர் முருகனை வணங்கி விட்டுச் சொன்னார்,''எம்பெருமானே, இவ்வழியால் செல்வோரை இம்மலை மயக்கிக்கொல்லும் தன்மை வாய்ந்தது. இதன் மறுபக்கத்தில் சூரனின் தம்பியும் யானை முகத்தையுடைய தாரகன் என்றும் அசுரன் வாழ்கிறான். அவன் மாவீரன். விட்டுணுவின் சக்கரத்தைப் பதக்கமாகக் கோர்த்து அணிந்துள்ளான். அவனைக் கொன்றால் சூரனை இலகுவாகக் கொல்லலாம்'' என்றார்.

அதைக்கேட்ட முருகன் வீரவாகு தேவனைப் பார்த்து,''தேவரே, நீர் பூத கணங்களுடன் சென்று அவனது நகரத்தைத் தாக்கி அழியும். உன்னால் முடியாதெனில் என்னை அழைக்கவும்'' என்றார். அதைக்கேட்ட வீரவாகுதேவர் பூதகணங்களுடன் அந் நகரைச் சுற்றி வளைத்தார்.

அதைக்கண்ட அசுரவீரர்கள் வேகமாக ஓடிச்சென்று தாரகனுக்கு அறிவித்தனர். உடனே தாரகன் தனது வீரர்களை அழைத்து ''நகரைச் சுற்றி வளைத்திருக்கும் முருகனது சேனைகளை அழிக்கப்புறப்படுங்கள்'' என்ற கூறித் தானும் ஒருதேரில் புறப்பட்டான். தாரகன் மிகுந்த கோபத்துடன் பூத கணங்களைத் தாக்கினான். பூதகனங்கள் சிவபெருமானிடம் பெற்ற படைக்கலன்களை

ஏவ, அவை தாரகன் மீதுபட்டுச் சிதறி விழுந்தன. தாரகன் தனது வைரத்திலானான தண்டத்தை எடுத்து வீச,  பூதகணங்களும் தேவசேனாதிபதிகளும் நிலை குலைத்து நிலத்தில் வீழ்ந்தனர். அதைக்கண்டு ஆத்திரமுற்ற வீரவாகு தேவர் தாரகன் மீதுஅம்புகளைத் தொடுத்தார்.. அவ் அம்புகள் தாரகனின் உடல் மீதுபட்டதே தவிரத் தாக்கவில்லை.அதனால் கோபம் கொண்ட தாரகன் வீரவாகுதேவரை நோக்கி அம்பு மழை பொழிந்தான். அதை எதிர்த்து வீரவாகு தேவர் அம்புகளைத்  தொடுத்தார். அவை தாரகனின் வில்லை உடைத்தன. அதனால் கோபமுற்ற தாரகன் ஓர் சூலத்தை ஏவினான்.  அச்சூலம் வீரவாகு தேவரின்  மார்பில் பட்டதும் வீரவாகு தேவர் மயங்கினார். அதைக்கண்ட வீரவாகு தேவரின் தம்பிகள் தாரகனை எதிர்த்தனர். இருப்பினும் தாரகனது தாக்குதலைச் சமாளிக்கமுடியாது தப்பி ஓடினர். அதைக்கண்ட வீரவாகுதேவர் கோபத்துடன் தாரகனைத் தாக்கத்தொடங்கினார். இருவருக்கும் இடையில் உக்கிரமான போர் இடம் பெற்றது. தாரகன் அக்கினிப்படைக்கலத்தையும், வருணப்படைக்கலத்தையும், சூரியப்படைக்கலத்தையும், வாயுப்படைக்கலத்தையும், பிரமப்படைக்கலத்தையும் மாறி மாறி ஏவ அவற்றை வீரவாகு தேவர் தனது பாணங்களால் அழித்தார்.

வலிமைமிக்க படைக்கலங்களை ஏவியபோது அவற்றை அழித்த வீரவாகு தேவரின் பலத்தைக் கண்டு பயந்த தாரகன் மாய உருவெடுத்துப் பலதோற்றங்களில் வீரவாகுதேவருடன் சண்டையிட்டான். திரும்பிபக்கங்களெல்லாம் தாரகன்கள் நின்று போராடுவதைக்கண்ட தேவர்கள் பயத்தினால் நடுநடுங்கினர்.

அதைக்கண்ட வீரவாகுதேவர் வீரபத்திரப் படைக்கலத்தை எடுத்தார். அதை எடுத்தவுடன் தாரகனின் மாயத் தோற்றங்கள் யாவும் மறைந்தன. தேரில் அவன் தனித்து நின்றான் . தான் தோற்றுவிடுவேன் என்று உறுதியாக நம்பிய தாரகன் தேரில் இருந்து குதித்து ஓடிச் சென்று கிரௌஞ்ச மலையில் உள்ள ஒரு

குகைக்குள்ச் சென்று மறைந்திருந்தான். அவனைத் தேடக் குகைக்குள்ச் சென்ற வீரவாகுதேவரை அம் மலை மயக்கி அறிவை இழக்கச் செய்தது

வீரவாகுதேவர் தாரகனைத் தேடிக் கிரௌஞ்சமலையில் ஏறி வெகுநேரமாகியும் காணாமையால் அவருடைய சகோதரர்களும் பூதகணங்களும் அவரைத் தேடிமலை அடிவாரத்திற்கு வந்தபோது அவர்களும் தம் அறிவு கெட்டு மயங்கினர். அப்போது அங்கே வந்த தாரகன் தனது மாயச் செயல்களால் இவர்கள் இறந்து விட்டார்கள். என்று எண்ணி மகிழ்வுடன் மலையின் உச்சிக்குச் சென்று அம்புமழை பொழிந்தான். அதனால் தாக்குண்ட பூதகணங்கள் நாலா திசையும் சிதறி ஓடின.

அதைக்கண்டு கவலைப்பட்ட நாரதர் விரைந்து சென்று முருகனுக்கு நடைபெற்றவற்றைக் கூறி வீரவாகு தேவரையும் அவரது சகோதரர்களையும் பூதகணங்களையும் காப்பாற்றுமாறு கூறினார். அதைக்கேட்ட முருகன் வாயுதேவனைச் அழைத்துக் கிரௌஞ்ச மலையை அடைவாயாக என்றார்.

கிரௌஞ்சமலையடிவாரத்தில் நின்ற அசுரர்கள் முருகனை எதிர்க்க முடியாது. தப்பி ஓடினார்கள். அதைக்கண்டு கோபங்கொண்ட தாரகன் தனது சேனையோடு புறப்பட்டு முருகன் போர் செய்யும் இடத்திற்கு வந்தான். போர் செய்யும் முருகன் சிறுவன் என நினைத்து,‘‘குழந்தாய்,கருடனும், விட்டுணுவின் சக்கரமும் என்னை எதுவும் செய்யவில்லை. மாறாக விட்டுணுவின் சக்கரத்தை நான் மாலையாக அணிந்துள்ளேன். இது வரை என்னைப் போரில் வென்றவர் யாருமில்லை. உன்னோடு வந்த பலரைக் கொன்று விட்டேன். இவற்றையெல்லாம் சிறுவனான நீ அறியவில்லையா? பேசாமல் சென்றுவிடு’’ என்றான்.

‘‘ஆயுதங்களுக்கெல்லாம் ஆயுதமான எனது வேலை வெல்ல யாராலும் முடியாது எனது வேல் உன்னையும், கிரௌஞ்சு மலையையும் அழித்து எமது வீரரைக் காப்பாற்றும்’’என்று கூறி வில்லை. எடுத்து அம்புகளை விடத்

தொடங்கினான். முருகன் ஆயிரம் அம்புகள் விட்டால் தாரகன் பத்தாயிரம் அம்புகள் விட்டான். இலட்சக்கணக்கில் விட்டான். அவை யாவற்றையும் முருகனது பாகங்கள் அழிந்தொழிந்தன. கோபங்கொண்ட தாரகன் தேர்ச் சாரதியான வாயுதேவன் மீது அம்பை விட அது வாயுதேவனைத் தாக்கியது. அதனால் கோபங்கொண்ட முருகன் வெகுண்டெழுந்து தாரகன் மீது அம்பைச் செலுத்தத் தாரகன் நிலத்தில் மயங்கி விழுந்தான்.

அதைக்கண்ட அசுரர்கள் முருகனைச் சூழ்ந்து நின்று சூலம், சக்கரம். தாண்டம், முதலிய பல்வேறு விதமான ஆயுதங்களால் முருகனைத் தாக்கினார்கள். அவற்றையெல்லாம் தாக்கி பொடிபொடியாக்கிய முருகன் ஆயிரக்கணக்கான காண அம்புகளை ஒரே நேரத்தில் விட அசுரப்படைகள் மாண்டன. பலர் தப்பி ஓடினர். அப்போது மயக்கம் தெளிந்து எழுந்த தாரகன் தன் படைவீரரெல்லாம் மாண்டு போயிருப்பதைக் கண்டு அஞ்சி நடுங்கிப் பின் தெளிந்து விட்டுணுவின் படைக்கலத்தையும், பிரமப்படைக்கலத்தையும் விட்டான். அவை முருகனிடை அருகே வந்து அவனைவணங்கி அவனுடன் சேர்ந்தன. அதைக் கண்டு பயந்த தாரகன் சிவபடைக் கலத்தை ஏவினான். அதுநஞ்சையும்,அக்கினியையும் வெளிப்படுத்தியவாறு முருகனைத் தாக்க அருகில் வந்தது . முருகன் சிவனை நினைத்துக் கொண்டு தனது ஒருகையை நீட்ட அவ்வாயுதம் தனது சக்தியை இழந்து முருகனது வசமானது. அதைக்கண்டு பயந்த தாரகன் கிரௌஞ்சமலையின் துணையுடன் பலமாய வடிவங்களை எடுத்து முருகனுடன் போராடினான். அதைக்கண்ட முருகன் தனது வேலை எடுத்து,‘‘நீசென்று தாரகனைக் கொன்று விட்டுக் கிரௌஞ்சமலையைத் தகர்த்து விட்டு வீரவாகு தேவரையும் அவரது சகோதரர்களையும் மீட்டுவா’’ என்று ஏவினார். உடனே சென்ற வேல் தாரகனின் நெஞ்சைப் பிளந்து விட்டுப் அவனையும் தூக்கிச் சென்று கிரௌஞ்ச மலையைத் தாக்கி அழித்து விட்டு பூதகணங்களையும் வீரவாகு தேவரையும் அவரது

சகோதரர்களையும் மீட்டு விட்டு அப்படியே சென்று ஆகாய கங்கையில் நீராடி விட்டு முருகனிடம் வந்து சேர்ந்தது. இறந்த பூதகணங்களெல்லாம் உயிர் பெற்று எழுந்தன. அதைக்கண்ட தேவர்கள் மகிழ்வுடன் ஆடிப்பாடி மகிழ்ந்தனர்.



தாரகன் இறந்த செய்தியைக் கேட்ட அவனது மனைவியான சௌரி தனது தோழியர்களுடன் சென்று தாரகனின் பிணத்தின்மேல் விழுந்து,''சிவபெருமானிடமும், விட்டுணுவிடமும், இந்திரனிடமும் அரியபல வரங்களையும் ஆயுதங்களையும் பெற்ற உனக்கு எப்படி மரணம் வந்தது'' என்று பெருங்குரலெடுத்து அழுதாள். அவளோடு வந்த அசுரப் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுதனர். அப்பொழுது தாரகனின் மகனான அசுரேந்திரன் வந்து மிக்க துயரத்துடன் அழுதான். நடந்தவற்றைத் தாயான சௌரி சொல்ல அதைக் கேட்டுக் கோபம் கொண்ட அவன் தாரகனது உடலைச் சுடுகாட்டுக்குக் கொண்டு சென்று தகனம் செய்தான். அத்தீக்குள் சௌரியும் ஏனைய தாரகனின் மனைவிமாரும் விழுந்து உடன் கட்டையேறினர்.

அதன் பின்பு அசுரேந்திரன் மகேந்திரபுரிக்குச் சென்று நடந்தவற்றைத் தாரகனின் மூத்த சகோதரனான சூரபன்மனுக்கு கூறினான். முதலில் நம்பமறுத்த சூரபன்மன் பின்தேறி,''எனது தம்பியைக் கொன்ற முருகனை அழிப்பேன்'' என்று சபதமிட்டு அசுரவீரர்களுடன் போருக்குப் புறப்பட்டான். அப்போது அமோகன் என்ற அசுரவீரன் வந்து சூரபரமனை வணங்கிவிட்டுச் சொன்னான்,''அரசே, முருகனைச் சிறுவன் என்று நினைத்து அவசரப்பட்டுப் போர் தொடுக்காதீர்கள். அரச குலமுறைப்படி தூதுவர்களை அனுப்பி அச்சிறுவனைப் பற்றிய வரலாறு முழுவதையும் அறியுங்கள். அதன் பின்பு திட்டமிட்டுச் செயற்படுங்கள்''.

அதைக்கேட்ட சூரபன்மன் அவன் சொல்வதை ஏற்றுத் தனது தூதுவர்களை அழைத்து முருகனின் படைகளைப் பற்றிய தகவல்களை அறிந்து வருமாறு கூறினான்.

தாரகனை வதம் செய்த பின்பு முருகன் சிவபெருமானையும் உமாதேவியாரையும் தேவர்களுடன் சென்று சந்தித்து ஆசி பெற்ற பின்பு,காசியம்பதியைத் தரிசனம் செய்தார். அதன் பின்பு திருப்பருபதத்தையும், திருக்காளத்தி மலையையும், திருவாளங்காட்டையும், திருக்காஞ்சியையும், திருவண்ணா மலையையும், திருவெண்ணை நல்லூரையும், விருத்தாசலத்தையும், திருத்தில்லையையும் தரிசித்தார். இந் நகரங்களில் சிவபெருமானும் உமாதேவியாரும் வீற்றிருந்து அடியவர்களுக்கு அருள்பாலித்துக் கொண்டிருந்தனர். அதன் பின் காவிரி ஆற்றின் வடகரையில் இருக்கும் மண்ணியாற்றங்கரையை முருகன் அடைந்தார்.

மண்ணியாற்றங்கரையைஅடைந்தமுருகன் அதன் அழகில் மெய்மறந்து, தேவதச்சனை அழைத்துத் தாம் தங்குவதற்குச் சகல வசதிகளும் கொண்ட மண்டபம் ஒன்றை அமைக்குமாறு கூறத் தேவதச்சன் சகலவசதிகளும் கொண்ட மாழிகை ஒன்றை அமைத்தான். அதில் எல்லோரும் தங்கினர்.

மறுநாள்க்காலை மீண்டும் தேவதச்சனை வரவழைத்த முருகன் தான் வணங்குவதற்காக ஒரு சிவன் கோவிலை அமைக்குமாறு கூறினார். தேவதச்சன் உடனே ஒரு சிவன் கோவிலை அமைத்துச் சிவலிங்கத்தை ஸ்தாபித்தான். அதை முருகன் வணங்கிய போது உமாதேவியாரும் சிவபெருமானும் இடபவாகனத்தில் அவ்விடம் வந்தனர். தேவர்களும் பூதகனங்களும் பூக்களைச் சொரிந்து வழிபட்டனர். முருகன் அவர்களை மும்முறை வலம் வந்து வணங்கினான். அதனால் மகிழ்ந்த சிவபெருமான்,‘‘மகனே இது மிகவும் சக்தி வாய்ந்த உருத்திர பாசுபாதம் என்னும் படைக்கலமாகும். சூரனையும் அவனது ஏவலர்களையும் சங்கரிக்கும்

ஆயுதம் இது’’என்று கூறிக் கொடுத்தார். முருகன் அவரை வணங்கி அதைப் பெற்றுக் கொண்டான்.

பொழுது புலர்ந்ததும் முருகன் தேரின் மீதேறித் திருவாரூரை நோக்கிப் பயணமானார்.. பூதகணங்கள் அவரைப்பின் தொடர்ந்து சென்றன. வழியில் உள்ள பலசிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு வந்த முருகனும் படை வீரர்களும் திருவாதவூரை வந்தடைந்தனர். அவர்கள் அங்குள்ள சிவத்தலங்களைத் தரிசித்துக் கொண்டு கொடுமையான வெப்பம் மிகுந்த பாலைவனத்தினூடாகச் சென்ற போது பாலை வனம் சோலை வனமாயிற்று. அப்பாலை வனத்தைக் கடந்த போது பராசர முனிவரின் புதல்வர்கள் ஆறு பேரும் வந்து வணங்கினார்கள். அப்போதுஅங்கு வந்த இந்திரன் சொன்னான்,‘‘எம்பெருமானே இவர்கள் ஆறு பேரும் சிறுவர்களாக இருந்தபோது சரவணப்பொய்கையில் உள்ள மீன்களைப் பிடித்துக் கரையில் போட்டு விளையாடினார்கள். அப்போது அங்கு வந்த பராசர முனிவர் அவர்கள் தமது புத்திரர்கள் எனக் கருதாது,‘‘நீங்கள் ஆறுபேரும் மீன்களாகக் கடவீர்களென்று சாபமிட்டார். அவரது புதல்வர்கள் இச்சாபம் எப்போது நீங்கும் என்று கேட்டதற்கு முனிவர்‘‘சரவணப்பொய்கையில் முருகன் வந்துதிக்கும் போது உமாதேவியாரது முலைப்பால் வெள்ளம் போலப் பெருகும். அதை நீங்கள் குடிக்கும்போது பழைய உருவைப் பெறுவீர்கள்’’ என்றார். அவர்கள் சாபம் நீங்கப் பெற்று உங்களைத் தரிசிக்க வந்துள்ளனர்’’ என்று இந்திரன் கூற முருகன் அவ்வாறு பேரையும் தன்னுடன் அழைத்துச் சென்றான்.

பாலைவனத்தைக்கடந்து சென்ற முருகன் கடற்கரையில் உள்ள திருச்செந்தூரை அடைத்து ஒரு திருக்கோவில் அடைந்து பூதகணங்களுடன் உள்ளே சென்று ஒரு சிங்காசனம் அமைத்து அதில் ஏறி அமர்ந்திருந்து இந்திரனை அழைத்து ‘‘அசுரர்கள் உங்களுக்குச் செய்த கொடுமைகளைக்கூறு’’ என்று

சொல்லஇந்திரன் தனது குருவான பிரகஸ்பதியை அழைத்து வணங்கிக்,‘‘குருவே எமது துன்பங்களை நீரே எடுத்துக் கூறும்’’ என்றான். பிரகஸ்பதி முருகனை வணங்கி அசுரர்களால் ஏற்பட்ட துன்பங்களைச் சொல்லத் தொடங்கினார்.

**உற்பத்திக்காண்டம் முற்றிற்று.**

## இரண்டு - அசுரகாண்டம்.

அசுரர்களின் அரசனான அசுரேந்திரன் மங்கலகேசி என்னும் அரக்கப் பெண்ணை விவாகம் செய்தான். அவர்களுக்குச் சுரசை என்னும் மகள் பிறந்தாள். அவள் உரிய பருவத்தை அடைந்ததும் அவளுக்கு அசுரகுருவான சுக்கிரன் மாயா ஜாலங்களைக் கற்பித்து மாயை என்னும் பெயரைச்சூட்டி,‘‘மகளே, நீ மகாமேரு மலையின் வட திசையிலே காசிய முனிவர் தவம் செய்கிறார். அவர் பெரும் முனிவர். பேரழகியான நீ அவரை மயக்கித் திருமணம் செய்து அசுரர்கள் பலரைப் பெறுவாயாக’’ என்று கூறச் சுரசை அதைத் தனது தகப்பனிடம் கூறி அனுமதி பெற்றுக் கொண்டு காசிய முனிவர் தவம் செய்யுமிடத்திற்குச் சென்று மாயவித்தைகளால் அவரை மயக்கினாள். அவளது அழகில் மயங்கிய காசிபமுனிவர் அவள் இல்லாமல் தன்னால் வாழமுடியாதென்று அவளுக்குக் கூறி அவளின் பின்னே சென்றார். தனக்கு அவரின் மேல் விருப்பமில்லாதது போலக்காட்டிய அவள் மாயையின் உதவியால் மறைந்து நின்றாள். அவளைக் காணாத காசிய முனிவர் மிகுந்த துயரத்துடன் அவளைத்தேடினார். எனினும் அவரால் அவளைக் கண்டு பிடிக்க முடியவில்லை.

சுக்கிரனின் வேண்டுகோளுக்காகக் காசியமுனிவரைத் திருமணம் செய்யவந்த மாயா தனக்கு அவர்மீது விருப்பமில்லையென்று நடிக்கக் காசிபமுனிவர் மனம்

வருந்தி அவளைத் தன்னை விரும்பும்படி கெஞ்சினார்.. அதற்கிணங்கிய அவள் அவரைத் திருமணம் செய்ய ஒப்புக்கொண்டாள். அவர்களுக்குக் கர்ப்பம் மூலமாக இலட்சக்கணக்கான அசுரர்கள் பிறந்தனர். அவர்களின் வியர்வை மூலமாகவும் இலட்சக்கணக்கான அசுரர்கள் தோன்றினர். அவர்களின் கர்ப்பத்தில் முதலாவதாகப் பிறந்தவன் சூரபன்மன். இரண்டாம் சாமத்தில் சிங்கமுகாசூரனும் மூன்றாம் சாமத்தில் யானை முகத்தை உடைய தாரகாசுரனும் பிறந்தார்கள். நான்காவது சாமத்திலே ஆட்டுக்கடாவின் முகத்துடன் அசமுகி பிறந்தாள்.

காசிய முனிவர் தனது பிள்ளைகளான சூரபன்மன், சிங்கமுகாசுரன், தாரகாசுரன் ஆகிய மூவரையும் அழைத்து,‘‘நீங்கள் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்து அரிய பலவரங்களைப் பெறுங்கள்’’ என்று கூற அவர்கள் அதற்குச் சம்மதித்தனர். காசிபமுனிவர் சொன்னார்.

‘‘மக்கள் சிவபெருமானை நினைத்துப் பெருந்தவம் செய்த ஒருவரின் கதையைக் கூறுகிறேன்,கேளுங்கள்.‘‘கடகம் என்ற நாட்டிலே குச்சகர் என்றொரு பிராமணர் இருந்தார். அவருடைய புதல்வராகிய கௌசிகர் சிவபெருமானை நினைத்துக் காட்டிலுள்ள குளக்கரையில் தவமிருந்தார். சிவபெருமானையே நினைத்திருந்தால் அவர் உணர்வற்றிருந்தார். அதனால் காட்டு மிருகங்கள் அவரது உடலிலே உரசித் தமது உடல்வலியை நீக்கிச் செல்லும். அவரது தவத்தின் வலிமையை அறிந்த விட்டுணுதேவர்களுடன் வந்து அவரது உடலைத் தனது கையால் தடவி,‘‘முனிவனே, இனி உன்னை எல்லோரும் மிருகண்டு என அழைப்பார்கள். உன் குறைகள் யாவும் தீரும்’’ என்று வாழ்த்தினார். அதன் பின்பும் மிருகண்டு முனிவர் சிவனை நோக்கித் தவம் செய்தார். சிறிது காலத்தின் பின் மிருகண்டுவைத் திருமணம் செய்யுமாறு அவரது தந்தை வற்புறுத்தினார். முதலில் மறுத்த மிருகண்டு முனிவர் பின் தந்தையின் விருப்பத்திற்காக ஒப்புக் கொண்டாள்.

அதனால் மகிழ்ந்த குச்சக முனிவர், உசத்திய முனிவரின் மகளான விருத்தையைத் தனது மகனுக்குத் திருமணம் செய்வதெனத் தீர்மானித்தார்.''

''ஒருநாள் விருந்தையும் தோழியரும் கான் என்ற ஆற்றில் நீராடும் போது மதயானை ஒன்று எதிரே வர விருத்தையும் தோழியரும் நாலாதிசையும் சிதறி ஓடினார்கள். யானை சென்றபின் தோழியர்கள் விருத்தையைத் தேடிய போது அவளைக் காணவில்லை. செய்தியை அறிந்து வந்த உசத்திய முனிவர் விருத்தையை தேடியபோது அவள் ஒரு துரவுக்குள் இறந்து கிடந்தாள். அவளைத் தூக்கிக் கரையில் வைத்து உசத்திய முனிவரும் தோழியரும் அழுது புலம்பினர்.''

''அப்போது அங்குவந்த குச்ச முனிவர் உசத்திய முனிவரையும் விருத்தையின் தோழிகளையும் தேற்றிவிட்டு அங்கிருந்த குளத்தில் மூழ்கி நின்று யமனை நோக்கித் தவம் செய்தார். அப்போது முன்பு வந்த மதயானை குச்ச முனிவரைத் தனது துதிக்கையால் தூக்கிச் சுமத்து சென்றது. அப்போது யமன் அவர்முன் தோன்றி உசத்திய முனிவரது மகளான விருத்தையை உயிர்ப்பித்தான்.

குச்ச முனிவர் சுபவேளையில் மிருகண்டுவுக்கும் விருத்தைக்கும் திருமணம் செய்து வைத்தார். திருமணமாகிப் பல ஆண்டுகள் சென்றும் அவர்களுக்குக் குழந்தைகள் பிறக்கவில்லை. அதனால் மிருகண்டு முனிவரும் விருத்தையும் காசியை அடைந்து கங்கையில் ஸ்தானம் செய்து மணி கன்னிகை எனும் சிவத்தலத்திற்குச் சென்று சிவபெருமானை வணங்கித் தவம் செய்தனர். அப்பொழுது சிவபெருமான் அவர் முன் தோன்றி உனக்கு யாது வேண்டும் என்று கேட்க மிருகண்டு முனிவர் எம்பெருமானே எனக்குப் புத்திரப் பாக்கியம் வேண்டும் என்று கூறச் சிவபெருமான், சகல சௌபாக்கியங்களையும் உடைய பதினாறு வயது வரை வாழக் கூடிய சற்புத்திரனா இல்லை தீய குணங்களை உடைய நூறு வருடம் வாழக் கூடிய தீய புத்திரனா உமக்குத் தேவை…?'' என்று கேட்டார்;''எம்பெருமானே

வயது குறைந்த சற்புத்திரனே நமக்குத் தேவை'' என்று மிருகண்டு முனிவர் சொன்னார்.''

''காலப் போக்கில் விருத்தை கார்ப்பவதியானாள் பாத்தாவது மாதம் அவளுக்கு ஓர் ஆண் குழந்தை பிறந்தது  அதற்கு மார்க்கண்டேயர் என்று நாமம் சூட்டி மிருகண்டு முனிவர் அன்பாக வளர்த்து வந்தார். சிறு வயது முதல் மார்க்கண்டேயர் சிவனிடத்தில் பேரன்பு பூண்டவராக வாழ்ந்து வந்தார். இரவு பகல் பாராது மார்க்கண்டேயர் சிவனின் அருகே இருந்து சிவத் தொண்டு செய்து வந்தார். அவரின் பக்தியின் தன்மையை அறிந்து  வியந்த சிவபெருமான்,''அஞ்சாதே, அஞ்சாதே'' என அடிக்கடி கூறித்தனது திருவடிகள் இரண்டையும் தூக்கி மார்க்கண்டேயரது தலையில் வைப்பார். அதனால் மார்க்கண்டேயர் யம பயமின்றி வாழ்ந்து வந்தார்.''

''அன்று மார்க்கண்டேயர் சிவநினைவுடன் தன்னை முற்றாகச் சிவனிடம் ஒப்படைத்து விட்டுச் சிவபூசை செய்தார். அன்றுடன் அவருக்குப் பதினாறு வயது முடிவடைந்ததால் யமதூதர்கள் அவரைக் கவர்ந்து செல்ல வந்தனர். அவர்களால் சிவபூசை செய்து கொண்டிருந்த மார்க்கண்டேயரை நெருங்கமுடியவில்லை. அதனால் அவர்கள் சென்று யமனுக்கு அதை அறிவித்தனர்.

''அதைக்கேட்ட யமன் மிகுந்த கோபம் கொண்டு மார்க்கண்டேயர் சிவபூசை செய்யும் இடத்திற்கு வந்து,''சிவனின் ஆணைப்படி செயற்படும் நான் சிவபூசை செய்பவர்களையும் கவராமல் விடக் கூடாது'' என்று நினைத்து மார்க்கண்டேயரின் அருகே சென்று தனது பாசக்கயிற்றை வீசினான்.அக் கயிறு சிவலிங்கத்தின் மேல் விழுந்து. வெளியே நடப்பதை அறியாத மார்க்கண்டேயர் அன்புமிகுதியால் சிவலிங்கத்தின் அருகே சென்று அமர்ந்திருந்தார். அப்போது சிவபெருமான்

இடபவாகனத்தில் தோன்றித் தனது இடது காலால் யமனை உதைக்க அவன்பூமியில் விழுந்து இறந்தான். அவனுடன் வந்த சேனைகளும் அவனது வாகனமான எருமையும் நிலத்தில் விழுந்து மாண்டன. அதன் பின் பூமியில் எந்த உயிர்களும் இறக்காது பெருகின. அதனால் பாரம் தாங்கமுடியாத பூமாதேவி அதைவிட்டுணுவுக்குச் சொன்னாள். அதைக்கேட்ட விட்டுணு பிரமாவையும் இந்திரனையும் தேவர்களையும் திருக்கைலாய மலைக்கு அழைத்துச் சென்று,“முழுமுதற்கடவுளே இயமன் இறந்தமையால் பூமியில் உயிர் பெருகியமையால் பூமாதேவியால் அப்பாரத்தைச் சுமக்கமுடியவில்லை. இயமன் உங்கள் ஆணைப்படி நடக்கும் நேர்மையான ஒரு தொழிலாளி. அவன் நீங்கள் தனக்களித்த அதிகாரப்படி நடந்தான். அவனை மன்னித்து உயிர்பித்தால் தான் பூமியில் நீதி தவறாது” என்று சொல்லச் சிவபெருமான் இயமனை உயிர்ப்பித்தார். அவனுடன் வந்த சேனையும் அவனது வாகனமான எருமையும் உயிர்த்தெழுந்தன.”

“காசிபமுனிவர் தனது பிள்ளைகளுக்குத் தவத்தால் எதையும் செய்யலாம். அதனால் சிவபெருமானை நினைத்து தவம் செய்யுங்கள் என்று கூற அவர்களின் தாயான மாயை சொன்னாள்,“உயிர்களுக்கு என்றும் நன்மை அளிப்பது கல்வியும் செல்வமும். எனினும் செல்வமே சிறந்தது. கற்றவர்கள் செல்வரைப் பணித்து நிற்பர். அதனால் செல்வத்திலும் பார்க்கச் சிறந்தது உலகில் எதுவுமில்லை. ஒருவர் ஊக்கமாகச் செயற்பட்டால் பெரும் பொருளைத் தேடலாம். செல்வம் பல வகையான சிறப்புக்களையும் தரும். அதனால் சிறப்புக்களை உடைய செல்வத்தைத் தேடுங்கள். தேவர்களும் பிறரும் தங்கள் முயற்சியினால் தான் தலைமையைப் பெற்றனர். நீங்கள் அவர்களின் தலைமையைப் பெறல்வேண்டும். உத்தர பூமி அசுரர்கள் தவம் செய்வதற்கேற்ற இடமாகும். அங்கு சென்று பன்னசாலை அமைத்துக் கடுந்தவம் செய்யுங்கள். அப்போது சிவபெருமான்

வெளிப்பட்டு நீங்கள் கேட்கும் வரங்களைத் தருவார்’’ என்று கூற மூவரும் தாய் தந்தையரிடம் விடைபெற்று உத்தர பூமியை நோக்கிச் சென்றனர்.

அவர்களுடன் புறப்பட்ட மாயையைக் கண்ட காசிபமுனிவர் அவளின் பிரிவைத்தாங்க முடியாது. அவளின் பின்னே செல்ல அவள் மறைந்தாள். மாயையின் மீது காதல் வசப்பட்டுத் துன்பப்படும் தனது மகனான காசிபமுனிவரிடம் வந்த பிரமதேவன் சொன்னான்,‘‘மகனே, நீ தவம் செய்தலை விடுத்து மாயை மீது மோகம் கொண்டு எண்ணில்லாத அசுரரைத் தோற்றுவித்தாய். அதனால் பாவத்தைத் தேடிக்கொண்டாய். அதனால் அப்பாவம் தீரமீண்டும் தவம் செய்’’ என்று கூறிச் சென்றார்.

சூரபன்மன் தன் தம்பிகளோடு யாகம் செய்ய வடதிசை நோக்கிச் சென்றபோது அசுரகுருவாகிய சுக்கிராச்சாரியார் அவ்விடத்திற்கு வந்தார். அவரைச் சூரபன்மனும் அவனது தம்பிமாரும் வணங்கி வரவேற்றனர்,’’ சூரா, நீ தவம் செய்யும்போது அதைக் குழப்பப் பலர் முயல்வார்கள். அப்போது சிவனை நினைத்து இவ் மந்திரங்களை உச்சரித்தாயனால் உனக்கு வரும் இடர்கள் யாவும் நீங்கும்’’ என்று கூறிச் சிவமந்திரத்தை உபதேசித்து விட்டுச் சென்றார்.

சூரபன்மன் வடபகுதியில் உள்ள ஆலவனத்தை அடைந்து அங்கே யாககுண்டத்தை அமைத்துச் சிவபெருமானை நினைத்து யாகம் செய்யத் தொடங்கினான். அவன் செய்த யாகத்தில் இருந்து எழுந்த ஓமாக்கினி சுவாலித்து மேலெழுந்து எட்டுத்திசைகளையும் மேலுலகங்களையும் சுட்டது. அதனால் பிரமாவும் விட்டுணுவும், இந்திரனும் ஏனைய தேவர்களும் முனிவர்களும் பயத்தால் நடுநடுங்கினர்.

பலவருடங்கள் தொடர்ந்து யாகம் செய்த போதும் சிவபெருமான் வருகை தராததை உணர்ந்த சூரபன்மன் ஆகாயத்தில் அந்தரத்தில் நின்றவாறு தனது தசையை வெட்டி ஓமாக்கினியில் போட்டுக் கொண்டிருந்தான். அப்போதும் சிவபெருமான் வராமையினால் துன்பப்பட்ட சூரபன்மன் ஓமகுண்டலத்துள்க் குதித்து எரிந்து சாம்பலானான்.

அதைக்கண்ட சிங்கமுகாசுரனும் தாரகாசுரனும் அசுரர்களும் புலம்பினார்கள். அதைக்கண்ட இந்திரனும் தேவர்களும் அவ்விடத்திற்கு வந்து ஆகாயத்தில் நின்று மகிழ்ந்தனர். தமையன் இறந்ததை எண்ணிக்கவலைப்பட்ட சிங்கமுகனும் தாரகாசுரனும் தமது தலைகளை அறுத்து ஓம குண்டத்தில் இடஇட அந்தலைகள் மீண்டும் மீண்டும் தளிர்த்தன. அவற்றைக் கண்ட அசுரர்பலர் தம் தலைகளை வெட்டி ஓமாக்கினியில் போட்டனர். அப்போது சிங்கமுகன் ஆகாயத்தில் எழுந்து சென்று ஓமாக்கினியில் குதிக்கத் தாயாரனான்.

அப்பொழுது சிவபெருமான் பிராமண வேடத்தாங்கி வந்து சிங்கமுகனைப் பார்த்து,‘‘உனது வரலாற்றைச் சொல். என்னால் முடிந்த வரை உனக்குதவி செய்வேன்’’ என்றார். அதைக்கேட்டு மகிழ்ந்த சிங்கமுகன் நடந்தவற்றைக் கூறினான். அதைக்கேட்டு மனமிரங்கிய சிவபெருமான் சூரபன்மனை உயிர்ப்பித்தார். அதைக்கண்டு அசுரர்கள் மகிழ்ச்சியாரவாரம் செய்தனர். அப்போது சிவபெருமான் உமாதேவியரோடு இடபவாகனத்தில் எழுந்தருளி,‘‘உனது தவத்தைக் கண்டு மகிழ்வுற்றேன். அதனால் உனக்கு வரம் தருகிறேன். நீ விரும்பியதைக் கேள்’’ என்றார்.

‘‘அண்டங்கள் எல்லாவற்றிற்கும் நான் அரசனாதல்வேண்டும். நினைத்தவுடன் நான் அங்கு சென்று வரல்வேண்டும். என்றும் எவராலும் அழிக்க முடியாத உடம்பை எனக்குத்தரல்வேண்டும். பிரமா விட்டுணு இந்திரன் முதலியோர் போர் செய்தால்

அவர்களை வெல்லும் சக்தியை எனக்குத் தரல் வேண்டும். நினைத்தவுடன் நினைத்த இடத்திற்குச் செல்லும் தேரையும் தரல்வேண்டும்''. என்று சூரபன்மன் கேட்க,''அத்தனையையும் தந்தோம்'' என்று கூறிச் சிவபெருமான் மறைந்தார்.

''அரிய பல வளங்களைப் பெற்ற சூரபன்மன் தனது தம்பிமாரை அழைத்துக் கொண்டு தந்தையான காசிய முனிவரிடம் சென்று அவரை வணங்கித் தான் சிவபெருமானிடம் பெற்ற வரங்களைக் கூறினான். அதைக் கேட்டு மகிழ்ந்த காசிய முனிவர்,''இன்னும் பல நன்மைகளைப் பெற நீங்கள் உங்கள் குருவாகிய சுக்கிராச் சாரியாரிடம் செல்லுங்கள்'' என்று கூறினார்.

அதைக்கேட்ட சூரபன்மன் தனது தம்பிமாரோடு சுக்கிராச்சாரியரின் இருப்பிடத்தை அடைந்து, தாம் சிவபெருமானிடம் பெற்ற வரங்கள் பற்றிக்கூறி,''இனி என்ன செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

''விட்டுணு பிரமா இந்திரன் ஆகியோர் உன்னிலும் பார்க்கப் பெரியவர்களென்று எண்ணாதே. இன்றைய நிலையில் நீதான் பிரமம் என்று நம்பு. தேவர்கள் அனைவரும் உனக்குப் பகைவர்கள். அவர்களுடைய செல்வங்களையெல்லாம் கைப்பற்று. இந்திரன் கொடியவன். அவன் கணக்கிலடங்காத அசுரர்களை அழித்தவன். அவனை உடனே பிடித்துச் சிறையில் அடை. முனிவர்களையும், தேவர்களையும் அட்டதிக்குப் பாலகர்களையும் கைது செய்து உனது ஏவல்களைச் செய்வி. கொலை, களவு, காமம் என்பன பாவச் செயல்களல்ல. அவற்றை உனது நன்மைக்காகச் செய். அவற்றால் எப்பாவமும் வராது. இப்பொழுதே தேவர்களுக்குகெதிரான யுத்தத்தை ஆரம்பி'' என்றார்.

''குருவே, உங்களின் எண்ணப்படியே நடப்பேன். தேவைப்படும் போதெல்லாம் எனக்கு புத்திமதிகள் கூறி வழிகாட்ட வேண்டும். அத்துடன் சிவபெருமான்

எனக்குத்தந்த ஆயிரத்தெட்டு அண்டங்களைப் பற்றியும் அதன் பரப்பளவு, எல்லை, அங்கு வாழும் உயிர்களின் நிலை, வரலாறு என்பவற்றை எனக்குக் கூறுங்கள்'' என்று சூரபன்மன் கேட்க, சுக்கிராச்சாரியார் அவற்றைப் பற்றி விபரமாகக் கூறி அவற்றைச் சென்று பார்வையிடும்படி கட்டளையிட்டார்.

சூரபன்மன் தேவலோகத்தைத் தாக்கப்போவதை அறிந்த அவனது தாயான மாயை அவ்விடம் வந்து. ‘‘மகனே, சிவபெருமான் கொடுத்த மாபெரும் வரங்களை அறிந்து மகிழ்ந்தேன். நீங்கள் உடனே சென்று இந்திரன் முதலானோரை வென்று எல்லா உலகங்களை வென்று அரசாளுங்கள். அவ்வேளையில் மாயங்கள் புரிய வேண்டுமானால் என்னை அழையுங்கள்'' என்று கூறித்தமது புத்திரர்களை ஆசிர்வதித்து விட்டு மறைந்து போனாள்.

மாயை சென்றதும் சூரபதுமன் குபேரபுரியை நோக்கித் தனது படைகளைச் செல்லும்படி பணித்தான். பல்லாயிரக்கணக்கான அசுரர்கள் ஆயுதமேந்தியவாறு நடக்க, இலட்சக்கணக்கான யானைப் படையும் எண்ணிலடங்காத குதிரைப்படையும் முன்னே செல்ல சூரபன்மன் சிவபெருமான் கொடுத்த தேரில் ஏறி அவற்றை வழிநடத்தினான். அவனது தம்பிமார் இருவரும் இலட்சக்கணக்கான படை வீரர்களுடன் அவனைப் பின் தொடர்ந்தனர்.

சூரபன்மனது சேனைகள் விரைவாகச் சென்று குபேரபுரியைச் சுற்றி வளைத்தன. அதை அறிந்த குபேரன் பயத்தால் நடுநடுங்கி சிவபெருமான் கொடுத்த பலம்மிக்க ஆயுதங்களுடன் வரும் அசுர சேனையை வெல்ல முடியெதென்று நினைத்துத் தனது விமானத்தில் ஏறிச் சூரபன்மன் முன் இறங்கி அவனை வணங்கி,‘‘மாவீரனே, நான் உமக்கு அடியவன்'' என்று கூறி மீண்டும் மீண்டும் வணங்கினான். அதனால் அவனைத் தாக்காது கைது செய்த சூரபதுமன் குபேரபுரிக்குச் சென்று அங்கிருந்த பலகோடிக் கணக்கான பொன்னையும்

மணியையும் நவரத்தினங்களையும், ஆபரணங்களையும், யானைகள், குதிரைகள், ஆயுதங்கள் யாவற்றையும் கொள்ளையடித்தான். அதன்பின் தனது ஏவலாளர்களை அழைத்து,‘‘குபேரனை அழைத்துச் சென்று எமது வீரர் ஏவுவற்றைச் செய்வியுங்கள்’’ என்று கூறிவிட்டு இந்திரலோகம் சென்றான்.

சூரபன்மன் இந்திரலோகத்தை நோக்கி வருகிறான் என்பதை அறிந்த இந்திரன் அங்கிருந்து தப்பிச் சென்றான். இந்திரனைக் காணாத சூரபன்மன் இந்திரலோகம் முழுவதும் தேடியும் இந்திரன் அகப்படவில்லை. அதனால் கோபங்கொண்ட அவன் இந்திரலோகத்தைத் தீயிட்டுக் கொளுத்தினான். அதைக்கண்டு கோபமடைந்த அக்கினிதேவன் சூரபன்மனை எதிர்த்துப் போர் செய்தான். எனினும் சூரபன்மனின் தாக்குதலை அவனால் சமாளிக்க முடியவில்லை. அவ்வேளை தாரகன் வந்து அக்கினி தேவனைத் தாக்கத் தொடங்கினான். அவனின் தாக்குதலால் தேவர்கள் அனைவரும் அழித்து விடுவர் என்று நினைத்த அக்கினி தேவன், தாரகனைப்பணிந்து நின்றான். அதைக்கண்ட தாரகன் மகிழ்ந்து,‘‘நீ உன் நகரத்திற்குச் செல்’’ என்று கூறினான். பேரர் நடைபெறும் போது அசுரர்கள் அந்தந்த நகரில் உள்ள பொருட்களையெல்லாம் சூறையாடினார்.

அடுத்து சூரபன்மனது சேனைகள் யமனுடைய நகரத்தைச் சுற்றி வளைத்தன. அதைச் சேவர்கள் மூலம் அறிந்திருந்த யமன் சிவபெருமானிடம் எண்ணற்ற அரியவரங்களைப் பெற்ற சூரபன்மனை எதிர்க்க முடியாது. அக்கினி தேவனும் குபேரனும் சரணடைந்ததை எண்ணி யமனும் சூரனைச் சந்தித்து வணங்கினான் அதனால் மகிழ்ந்த சூரபன்மன்; யமனே நீ எமக்கு அடிமைப்பட்டாய். அதனால் எம் வீரர்கள் ஏவும் செயல்களைச் செய்து கொண்டிரு’’ என்று கூறினான். யமன் தன்னை எதிர்க்காது சரணந்தது அவனுக்குப் பெரும் மகிழ்ச்சியைக் கொடுத்தது.

அதையடுத்துச் சூரபன்மன் நிருதியின் மேல் படையெடுத்தான். அதை அறிந்த நிருதி தனது பரிவாரங்களுடன் சூரனை வணங்கி,“நான் உமது அடிமை” என்றான். அடுத்துத் தன்னிடம் தான் சூரபன்மன் வருவான் எனத் தெரிந்த வருணனும் வாயும் கடலிலும் இருண்ட பூமியிலும் மறைந்து கொண்டனர். அசுர படைகள் நகரைச் சூறையாடின. அடுத்துச் சூரபன்மன் பாதள லேகத்திற்கு சென்றான். பாதாள தேசத்து அரசனான ஆதிசேசன் கடுங் கோபமுற்று சூரபன்மனோடு போரிட்ட போதும் தோற்றான். சூரபதுமன் ஆதிசேசனின் சிங்காசனத்தில் அமர்ந்து தேவர்கள் ஆதிசேசனுக்குக் கொடுத்த அமுதத்தை எடுத்து தம்பிமாரோடு சேர்ந்து உண்டான். பின் விட்டுணு பள்ளி கொள்ளும் பாற்கடலை அடைந்தான். அசுரர்கள் பாற்கடலில் இறங்கி விட்டுணுவைத் தேடினார்கள். பாற்கடலைக் கலக்கும் போது சத்தம் பெரிதாகக் கேட்டது. அதைக் கேட்ட மகாலட்சுமி பயந்து விட்டுணுவைத் தழுவினார். விட்டுணு பயப் படாதே என்று கூறி கருடனில் ஏறி உக்கிரமாகச் சண்டை செய்தார். சூரபன்மன் விட்ட லட்சக் கணக்கான அம்புகளைத் தகர்த்த விட்டுணு நான்கு தினங்களாக கடும் போர் செய்தார். அசுரர்கள் ஆயிரக்கணக்கில் மடிந்தார்கள். அதைக் கண்டதராகன் வந்து விட்டுணு மீது லட்சக்கணக்காண அம்புகளை விட்டான். விட்டுணு விட்ட அம்பு தாரகனது தேர்ச் சாரதியைக் கொன்றதோடு தேரையும் உடைத்தது அதனால் கோபம் கொண்ட தாரகன் வேறொரு தேரில் ஏறி விட்டுணுவின் மீதும் கருடன் மீதும் எண்ணிலடங்காத அம்புகளை விட்டான். அதனால் கருடன் பலமிழந்து சோர்ந்து போனான். உடனே விட்டுணு பலவிதமான மாயத் தோற்றங்களை எடுத்து அவன் மீது அம்பு தொடுத்தார். அவ்வம்புகள் தாரகனின் தேரை உடைத்தன. தேரோட்டியும் இறந்தான். அதனால் தாரகன் ஒரு தண்டை எடுத்துத் தாக்கினான். அப்போது சிவபெருமான் கொடுத்த சக்கராயுதத்தை எடுத்து விட்டுணு தாரகன் மீது ஏவினார். அது பதக்கமாகித் தாரகனின் கழுத்தில் மாலையாக விழுந்தது. அதைக் கண்டு அதிசயித்து விட்டுணு சூரனை வெல்ல

யாருமில்லை என நினைத்து “நீ எனது சுற்றத்தவன்” என்று கூறத் தாரகன் அவ்விடம் விட்டு நீங்கிச் சூரபன்மனுக்கு அதைனைத் தெரிவித்து விட்டு சுவர்க்கத்தை நோக்கிச் சென்றான்.

சுவர்கத்துக்குச் சூரபன்மன் வருவதை ஒற்றர்கள் மூலம் அறிந்த இந்திரன் பயத்தால் நடுநடுங்கினான்,“அவனை யாராலும் வெல்ல முடியாது. அவன் என்னைச் சிறை பிடித்தால் கொடுமையாக நடந்து கொள்வான். என்று எண்ணி அவனும் அவனது மனைவியான இந்திராணியும் குயில்களாக மாறி வானத்தில் பறந்தனர். சுவர்க்கத்தில் இந்திரனைக் காணாத அசுரர்கள்சுவர்க்கத்தைக் கொள்ளையடித்து விட்டுத் தேவர்களைச் சிறை படுத்தினர்.

அதன் பின் சூரபன்மன் அளவில்லாத மகிழ்வுடன் மகலோகம்,சனலோகம் ஆகியவற்றைக் கைப்பற்றி அங்குள்ள பொருட்களையெல்லாம் கொள்ளையிட்டு விட்டு அங்குள்ளவர்களைச் சிறைப் படுத்தினான். பின்பு அவன் சந்திய உலகத்துக்குச் சென்றான்.

பிரமதேவர் அவனைக் கண்டு பயந்து; “சூரபன்மா நீ ஒப்பில்லாத வீரன் அத்துடன் எனது மகனான காசிய முனிவரின் மகன். அதனால் நீ எனக்குப் பேரன். உனது நலனைத் தான் நான் விரும்புகிறேன்.” என்று கூற சூரபன்மன் மிக்க மகிழ்ச்சியடைந்து பிரம்ம தேவரை வாழ்த்தினான். பிரம்ம தேவர் அவனுக்கு அழியாத வில்லையும் தேரையும் தனது படையையும் கொடுதார். அதன் பின்பு அவன் சிவலோகத்துக்குப் போனான். அங்கே நந்தி தேவரிடம் அனுமதி பெற்றுச் சிவனையும் உமாதேவியாரையும் வணங்கி விட்டு அண்ட கோளகைக்குச் சென்றான். அங்குள்ளவர்களையும் வென்று அவர்களின் பொருட்களை யெல்லாம் கவர்ந்தான். அதன் பின் அசுரர்களை அங்கே தனது அரசுரிமையை நிலை நாட்டும் பொருட்டு அரசர்களாக நியமித்து விட்டுச் சுவர்க்கத்திற்கு வந்தான்.

சூரபன்மன் திக்கு விசயத்தை முடித்துக் கொண்டு பாதாள தேசத்திற்குத் திரும்பினான். அதை அறிந்த விட்டுணுவும் தேவர்களும் சூரபன்மனைச் சந்தித்து வணங்கி அவனைப் புகழ்ந்தனர். அவர்களை ஆசீர்வதித்த சூரபன்மன்,“இவர்கள் யார்? சிவபெருமானைப் போன்று சாயலில் தோன்றும் இவர்கள் யார்?” என்று விட்டுணுவைக் கேட்டான்.

“மகாராஜாவே, பிரமன் படைப்புத் தொழிலைச் செய்வதால் தான் தான் முழுமுதற்கடவுள் என்று நினைத்துத் தான் விரும்பியபடி உயிர்களைப் படைக்கலானான் இதை அறிந்த சிவபெருமான் பிரமனின் படைப்புத் தொழிலைத் தடை செய்தார். அதனால் பிரமனால் படைக்க முடியவில்லை. அதனால் தனது தவறை உணர்ந்த பிரமன் சிவபெருமானை நோக்கிப் பல காலம் தவம் செய்தான். அதனால் சிவபெருமான் பதினொரு உருத்திரர்களைப் பிரமாவில் நெற்றியில் இருத்தி படைப்புத் தொழிலை மேற்கொள்ளும் படிசெய்தார். அதனால் அவர்கள் பதினொரு கோடி உருத்திரர்களைப் படைத்தனர்.அதைக் கண்ட சிவபெருமான் ஓர் உயிர் செய்த நல்வினை தீவினையின் பயனாகத் தான் படைக்கப் படல் வேண்டும். அதனால் பதினொரு கோடி உருத்திரர்களையும் தேவர்களோடு இருக்கும் படி பணித்தார். அவர்கள் தான் இவர்கள்” என்று விட்டுணு கூற சூரபன்மன் வியப்புற்றான்.

அதன்பின் சூரபன்மன் தேவதச்சனைப் பார்த்து,“எனக்கோர் அரண்மனையை உருவாக்கு. அவ்வரண்மனையைப்போன்ற பெருப்பமும், அழகும் வசதிகளும் எந்த உலகத்திலும் இருக்கக்கூடாது” என்றான். அவன் சொன்னபடி தேவதச்சன் மலைகளை அகற்றிச் சுவரமைத்து நான்கு கோபுரவாசல்களையும் அமைத்து பொன்மாடங்கள், நடனசாலைகள் கருத்தரங்கு மண்டபங்கள் யாக மண்டபங்கள் மந்திரி பிரதானிகளுக்கான மண்டபங்கள், பெண்களுக்குத் தனி

மண்டபங்கள்,பட்டத்தரசி,சூரபன்மனின் ஏனைய மனைவியர்க்கெனத் தனித்தனி மண்டபங்கள் அமைத்து அழகுபடுத்திச் சூரபன்மனிடம் கொடுத்தான். அங்கு குடியேறிய சூரபன்மன் அவ் அரண்மனையின் அழகைக் கண்டு மெய்சிலிர்த்தான்.

சூரபன்மனுக்குப் பட்டாபிசேகம் செய்யப்பட்டது. அவன் சிங்காசனத்தில் அமர்ந்திருந்து விட்டுணுவுக்குச் சொன்னான்,‘‘நீ எனது தந்தைக்குப் பாட்டன். அதனால் நான் அழைக்கும் போதெல்லாம் வரவேண்டும்’’ என்றும் பிரமாவை நோக்கி,‘‘நீ உனது புத்திரர்களோடு வந்து தினமும் பஞ்சாங்கம் பார்க்கவேண்டும்’’. என்றும், சூரியனை நோக்கி எந்நாளும் இளங்கதிரையே வெளிவிடல்வேண்டும்’’ என்றும் சந்திரனை நோக்கி,‘‘இனிமேல் நீ தேயாது எந்நாளும் முழு நிலவாய் இருக்கவேண்டும்’’. என்று கூறித் தேவர்களை அழைத்துத் தினமும் அவர்கள் என்னென்ன வேலைகள் செய்யவேண்டும் என்றும் கட்டளையிட்டான்.

அதன் பின் சூரபன்மன் தேவதச்சனின் மகளான பதும கோமளை என்பவளைச் சுக்கிராச்சாரியாயின் வேண்டுகோளின்படி திருமணம் செய்தான். அதன்பின் தனது தம்பியான சிங்கமுகனுக்கு யமனுடைய மகளாகிய விபுதையையும், அடுத்த தம்பியான தாரகனுக்கு நிருதியின் மகளாக சவுரியையும் திருமணம் செய்து வைத்தான்.

அன்று சூரபன்மன் பிரமாவையும் தேவர்களையும் அழைத்து,‘‘இன்றிலிருந்து நீங்கள் கடலுக்குச் சென்று மீன்களைப் பிடித்து வந்து கொடுங்கள்’’ என்றான். அதைக் கேட்டுத் துயரமடைந்த பிரமா செய்வதறியாது திகைத்துக் கதி கலங்கி மிக்க வருத்தத்துடன் வருணனை அழைத்து,‘‘நீ தானே சமுத்திரத்திற்கு அரசன் அதனால் மீன்களைப் பிடித்துக் கரையில் குவி’’ என்றான். அதைக்கேட்ட வருணன் மனம் வருந்திச் செய்வதறியாது திகைத்து பின் சூரபன்மனின் கட்டளைக்குப்

பணியாவிட்டால் கேடுகள் பலவும் வருமென நினைத்து மீன்களைப் பிடித்துக் கரையில் குவித்தான். அதைத்தேவர்கள் சுமந்து சென்றனர். அதைப்பார்த்த அசுரர்கள் வேடிக்கையாகப் பேசித்தேவர்களை அவமதித்தனர்.

சூரபன்மனுக்கு ஒரு ஆண்குழந்தை பிறந்தது. அதை தொட்டிலிலிட்டபோது சூரியனது ஒளி அவனது உதட்டில்பட்டது. உடனே அவன் ஆகாயத்தில் பறந்து சென்று சூரியனைப் பிடித்து வந்து தனது தொட்டில் காலில் கட்டினான். இதை அறிந்த பிரமாவும் இந்திரனும் தேவர்களும் சூரபன்மனிடம் சென்று இரக்க, அவன் தனது மகனிடம் செல்லுமாறு பணித்தான். அவர்கள் அவனிடம் சென்று இரந்தனர். அதற்கு அவன் உம்முடைய படைக்கலத்தை எனக்கு தந்தால் தான் சூரியனை விடுவிப்பேன் என்றான். பிரமா தனது படைக்கலத்தை கொடுத்துச் சூரியனை விடுவித்தான்.. அன்று அவனது வீரச்செயலைப் பாராட்டி அவனுக்குப் ‘‘பானுகோபன்’’ என்ற பெயரைச் சூரபன்மன் சூட்டி மகிழ்ந்தான். அதன்பின் சூரபன்மனுக்கு அக்கினி முகன், இரணியன்,வச்சிரவாகு என்ற மூன்று ஆண்பிள்ளைகள் பிறந்தன.

சிங்கமுகனுக்கு அதி சூரன் என்ற மகனும், தாரகனுக்கு அசுரேந்திரன் என்ற மகனும் பிறந்தனர். எனினும் அசுரேந்திரன் மிகவும் நல்லவனாகவும் ஒழுக்கமுள்ளவனாகவும், பலமுள்ளவனாகவும் இருந்தான்.

சூரனின் தங்கை அரசமுகி மிகவும் கெட்டவள். தேவர்களையும் அவர்களது மனைவிமாரையும் கொடுமைப்படுத்தி மகிழ்பவள். அவளைக் கண்டவர்கள் பயத்தால் நடுநடுங்குவர். அவள் நினைத்தவற்றை உடனே முடித்து விடும் திறமைவாய்ந்தவள். ஒருநாள் அவள் துருவாசகமுனிவர் தவம் செய்யும் காட்டுக்கு வந்து துருவாசக முனிவரைக் கண்டு காதல் கொண்டாள். துருவாசக முனிவர் மறுத்தும் கேளாது அவரை வற்புறுத்தித் திருமணம் செய்தாள். அவர்களுக்கு இரண்டு பிள்ளைகள் பிறந்தன. அவர்களுக்கு வில்லவலன் வாதாவியெனப்

பெயரிட்டாள். அவர்கள் இருவரும் துருவாசக முனிவரது தவப்பயனைத் தமக்குத் தரும் படி கேட்டனர். துருவாசக முனிவர் அதைக்கொடுத்ததும் அவரைக்கொல்ல முயன்றனர். அதை அறிந்த முனிவர்,"உங்களை அகத்திய முனிவர் கொல்வார்" என்று சபித்து விட்டு மறைந்தார்.

அதன் பின் வில்லவலன் அரியபலவரங்களைப் பெறும் நோக்கில் பலவருடங்கள் தவமிருந்தான். பிரமா வரவில்லை. அதனால் தன்தம்பியான வாதாவியைக் கொன்று ஓமஅக்கினியில் இட்டுத்தவம் செய்தான். அப்போது பிரமதேவர் அங்கு தோன்றி,"உனக்கு என்ன வரம்வேண்டும்?" என்று கேட்டார்."எனது தம்பியை உயிர்ப்பித்துத்தரல் வேண்டும்". அத்துடன் எனது தம்பி ஆட்டுருக்கொண்டு நான் அழைக்கும் வேளைவரவேண்டும்" என்றான். ஆவ்வரங்களைக் கொடுத்து விட்டுப் பிரமதேவர் மறைந்தார்.

அதன்பின் வாதாபியும் வில்வலனும் காட்டுக்குச் சென்று அங்கு தவம் செய்யும் முனிவர்களை அழைத்து வந்து உணவு கொடுப்பார்கள். அவ்வேளையில் வாதாபி ஆடாகமாறுவான். அதை வெட்டிக் கறிசமைத்து முனிவர்களுக்கு வில்வலன் கொடுப்பான். முனிவர்கள் உண்டு முடிந்ததும்,"தம்பி வாதாவி வெளியே வா"என்று வில்வலன் கூற வாதாவிஆட்டுக்கடாவடிவமெடுத்து முனிவர்களின் வயிற்றைக் கிழித்துக்கொண்டு வெளியே வருவான். இவ்வாறு ஆயிரக்கணக்கான முனிவர்களைக் கொண்டு உண்டனர்.

இந்திராணியின் அழகை அறிந்த சூரபன்மன் அவளின் மீது ஆசைப்பட்டு அவளையும் இந்திரனையும் அழைத்து வருமாறு அசுரர்களை அனுப்பினான். அதைக்கேள்விப்பட்ட இந்திரனும் இந்திராணியும் மாயஉருப்பெற்று மறைந்தனர். தந்தையைக் காணாது மிகுந்ததுயரத்துடன் தேடியலைந்த இந்திரனின் மகனானசயந்தன், நாரதமுனிவரிடம் சென்று தன்தந்தை இருக்குமிடத்தைக்

கேட்டான். அதற்கு நாரதர்,‘‘சயந்தா துன்பங்கள் ஒருபோதும் யாரையும் தானாகச் சென்றடைவதில்லை. ஒவ்வொருவரும் தாமே தேடிக்கொள்கிறார்கள். தக்கனது வேள்விக்குச் சென்றமையால் தான் இத்துயரம் தேவர்களுக்கு உண்டானது. அது விரைவில் தீரும். உனது தாயும் தந்தையும் சூரபன்மனுக்கு அஞ்சி உருமாறிப் பூவுலகில் வாழ்கிறார்கள். அதனால் கவலைப்படாதே’’ என்றார். அதைக்கேட்ட சயந்தன் அமைதியடைந்தான்.

இந்திரனும் மனைவியும் சீர்காழியை அடைந்து அங்கே வீற்றிருக்கும் சிவபெருமானை வணங்கிக் கொண்டிருந்தனர். அதற்காக ஒரு பூந்தோட்டம் அமைத்து அப்பூக்களால் சிவனை அர்ச்சித்துக் கொண்டிருந்தனர். அங்கே இந்திரனும் மனைவியும் மூங்கில் மரமாக நின்று தவம் செய்தனர். அங்கு வெகுநாட்களாக மழைபெய்யாததால் இந்திரனது பூமரங்கள் வாடின. அதனால் துயரங் கொண்ட இந்திரன் சிவபெருமானை மழை தரும்படி வேண்டினான். அப்போது,‘‘இந்திரா, வருந்தாதே. உனது பூந்தோட்டம் அழியாது. விரைவில் இத்தலத்திற்கு ஓர்ஆறுவரும்’’ என்று ஓர் அரசவீதி வாக்குக் கேட்டது. அதைக்கேட்ட இந்திரன் மனம் மகிழ்ந்தான். அது சிவபெருமானது வாக்கு என்று நினைத்தான்.

இமய மலையை விட நான் எல்லா வகையாலும் மேலானவன் என்று நினைத்த விந்தியமலை திடீரென்று வளர்ந்து தேவர்கள் சென்றவரும் ஆகாய வழியை அடைத்தது. அதனால் தேவர்கள் கவலை கொண்டனர். சூரியன் விந்தியமலையின் ஆணவத்தை அடக்கவல்லவர் அகத்திய முனிவரே என நினைத்து மனதுள் அவரை வணங்கினான். அதை மேரு மலையில் தவம் செய்து கொண்டிருந்த அகத்தியர் அறிந்து விந்திய மலைக்கு வந்து அதை அடக்க முயன்றார். முடியவில்லை. அதனால் சிவபெருமானை மனதுள் நினைத்து வணங்கச் சிவபெருமான் அவ்விடம் வந்து ‘‘அகத்தியா, என்னை நினைத்த காரணம்

யாது?’’என்று கேட்டார். ‘‘விந்தியமலை செருக்குற்று ஆகாயப்பாதையை அடைத்து வைத்துள்ளது. அதை அடக்கும் வல்லமையை எனக்குத்தரல் வேண்டும். பூமியில் நீர்நிலைகள் வற்றிவிட்டன அதனால் காவேரி ஆற்றைப் பூமியில் பாயச் செய்தல் வேண்டும்’’ என்றார்.

அதைக்கேட்ட சிவபெருமான் ‘‘உனக்கு அவ்வரங்களைத் தந்தேன். உனது கமண்டலத்தில் காவேரியை எடுத்துச்செல்’’ என்றார்.அகத்திய முனிவர் அதைக்கேட்டு மகிழ்ந்து சிவபெருமானை வணங்கிவிட்டுத் தென் திசையை நோக்கிச் சென்றார்.செல்லும் வழியில் தாரகாசுரனுடைய மாயாபுரி என்னும் நகரம் வந்தது. அகத்திய முனிவரைக்கண்ட கிரவுன்சன் என்ற அரக்கன் அகத்தியரை மாயையினால் ஏமாற்றி வழிதவறச் செய்தான். அகத்திய முனிவர் திக்குத்திசை தெரியாது சிலமணி நேரம் அவதிப்பட்டார். பின்பு கமண்டலத்தில் இருந்த நீரைத் தெளித்ததும் அவனது மாயங்கள் கலைந்தன. அவன் அவ்வழியால் செல்லும் வழிப்போக்கர்களை மயக்கித் துன்புறுத்துவான்,‘‘அரக்கனே, மிக விரைவில் சிவபுத்திரனது வேற்படை உனது உயிரைக் குடிக்கும்’’ என்று கூறிவிட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார் அகத்தியர்.

அவர் செல்லும் வழியில் விந்தியமலை குறுக்கிட்டது. ‘‘விந்தியமலையே, பாதையின் குறுக்கே நின்று எனது வழியைத் தடை செய்கிறாய். விலகிச்செல்’’ என்று அகத்தியர் கூற விந்தியமலை,‘‘விட்டுணு இவ்வழியால் செல்லவே நான் அனுமதித்தது இல்லை. மிகவும் குறுகிய உன்னை விடுவேனா…? திரும்பி வந்த வழியே செல்’’ என்றது.

அகத்தியர் கோபப்பட்டு சிவபெருமானை நினைத்து அதன் முடிமேல் தனது வலதுகாலை வைத்து அழுக்க அம்மலை பாதாளத்திற்குச் சென்றது. ஆதனால் கலக்கமடைந்த அம்மலை அகத்தியரை வணங்கித் தெரியாமல் செய்த பிழையை

மன்னிக்குமாறு வணங்கியது அதனால் இரக்கப்பட்ட அகத்தியர்,‘‘நான் சென்ற பின் உனது பழைய நிலையை அடைவாய்’’ என்று கூறிவிட்டுத் தென்திசை நோக்கிச் சென்றார்.

செல்லும் வழியில் வில்வனும் வாதாபியும் நின்று மகிழ்வுடன் அகத்தியரை வரவேற்றுத் தமது இருப்பிடத்திற்கு வந்து உணவு உண்டு விட்டுச் செல்லுமாறு இரந்தனர். அகத்திய முனிவர் அவர்களது எண்ணத்தை அறிந்து அவர்களுடன் சென்றார்.

வில்வலன் ஆட்டுக்கடா உருவில் நின்ற வாதாவியை வெட்டிப் பல்வேறு வகையான கறிகளைச் செய்து அகத்தியருக்குப் படைக்க, அகத்தியர் உண்டு முடித்தார். உடனே வில்லவன் ‘‘தம்பி வெளியே வா’’ என்று பலமுறை கூறியும் அவன் வெளிவரவில்லை.

‘‘அண்ணா, என்னால் வெளியே வரமுடியாதிருக்கிறது’’ என்று சொல்ல அகத்தியர் கையால் வயிற்றைத் தடவி ‘‘சமிக்கக்கடவாய்’’ என்றார். அதனால் கடுங்கோபம் கொண்ட வில்வலன் தண்டத்தை எடுத்துத் அகத்தியாரைத் தாக்கத் தொடங்கினான். அகத்தியார் ஒரு தர்ப்பைப்புல்லை எடுத்துச் சிவனை நினைத்து அவன் மீது ஏவ அது தண்டமாக மாறி அவனைக் கொன்றது.

அகத்தியர் கொங்கு தேசத்திற்குச் செல்லும் போது ஏற்கனவே கொல்லப்பட்ட வில்வலன், வாதாவி ஆகியோரது ஆவி அவரைப் பின் தொடர்ந்து பல தொல்லைகளைக் கொடுக்க அகத்தியர் மண்ணால் சிவலிங்கம் செய்து அவ் ஆவிகளை அழித்தார்.

இந்திரன் மூங்கில்வடிவில் தவம் செய்யுமிடத்திற்கு வந்த நாரதரை இந்திரன் வணங்கிய பின்,நீர் இல்லாததால் தனது நந்தவனம் வாடுவதாகக் கவலைப்பட்டான்.

‘‘இந்திரனே, நீ விநாயகப் பெருமானை வணங்கு எல்லாம் சரிவரும்’’ என்றார் நாரதர். அதைக்கேட்ட இந்திரன் மனம் மகிழ்ந்து விநாயகரைத்துதித்தான். அப்போது விநாயகர் அவன் முன் தோன்றி,‘‘என்ன வரம்வேண்டும்’’? என்று கேட்டார். அதற்கு இந்திரன்,‘‘எனது நந்தவனத்தில் உள்ள மலர்ச்செடிகள் நீரில்லாததால் வாடுகின்றன. பூக்கள் மலர்வதில்லை. அதனால் சிவபூசை செய்ய முடியவில்லை. அகத்திய முனிவரின் கமண்டலத்தில் காவேரி ஆறு உள்ளது. அதைக் கவிழ்ந்து விட்டால் உலகம் செழிக்கும்’’ என்றான்.

அதைக்கேட்ட விநாயகர் காகவடிவம் எடுத்து அகத்தியரின் கமண்டலத்தைக் கவிழ்ந்து விட்டார். அந்நீர் பெருக்கெடுத்து ஓடியது. அதைக்கண்டு கோபமுற்ற அகத்தியர் காகத்தைத் துரத்திய போது அக்காகம் ஒரு பிராமணச் சிறுவனானது. அதனால் கோபம் அதிகரிக்க அப்பிராமணச் சிறுவனைக் குட்டுவதற்காக அகத்தியர் துரத்தினார். அவன் ஓடி ஓடி மறைவதும் தோன்றுவதுமாக இருந்தான். பின் தனது வடிவத்தைக் காட்ட அகத்தியர் மனம் வருந்திப் பிள்ளையாரைக் குட்ட நினைத்தேனே என்று கவலைகொண்டு தனது தலையில் தானே குட்டினார். அதைக்கண்ட விநாயகர்,‘‘அகத்தியா, என் முன்குட்டிக்கும்பிடும் அடியவர்களின் குறைகள் யாவும் தீரும்’’ என்று கூறிமறைந்தார்.

சூரபன்மனால் கொடுமைப்படுத்தப்பட்ட தேவர்கள் இந்திரன் இருக்குமிடத்திற்கு வந்து தமது துன்பங்களைக் கூற, இந்திரன் திருக்கைலாய மலைக்குச் சென்று சிவபெருமானுக்கு முறையிடுவோம் என்றுகூறி அவர்களையும் அழைத்துக்கொண்டு அவனது மனைவியான இந்திராணியிடத்துச் சென்றான். இந்திரன் திருக்கைலாய மலைக்குச் செல்வதாகக் கூறியதும் இந்திராணி துயருற்று தன்னால் தனித்திருக்கமுடியாதென்று கூறித்தானும் திருக்கைலாய மலைக்கு வருவதாகக் கூறினாள். அதைக்கேட்ட இந்திரன்,‘‘இந்திராணியே வருந்தாதே இங்கே சிவனின்

புத்திரரான ஐயனார் இருக்கிறார். அவர் பெரும் வீரர். அவரை உனக்குக் காவலாக வைத்து விட்டுச் செல்கிறேன்'' என்றான். அதற்கு இந்திராணி உடன்பட்டாள்.

முன்பு தேவர்கள் சிவபெருமானை மதிக்காது திருப்பாற்கடலைக் கடைந்தனர்அப்போது அமிர்தத்திற்குப் பதிலாக நஞ்சு வந்து தேவர்ளை விரட்டியபோது அவர்கள் சிவபெருமானிடம் ஓடிச்சொன்று தம்மை மன்னிக்கும் படி கேட்டனர். சிவபெருமான் அதை ஏற்று மீண்டும் அமுதைக் கடையுமாறு கூறினார். மீண்டும் சென்று அமுதைக் கடைந்த போது பொற்குடத்தில் அமுதம் வந்தது. அதைக்கண்ட தேவர்களும் அசுரர்களும் தாம் கடைந்தமையால் தான் அமுதம் வந்ததெனக் கூறிச் சண்டையில் ஈடுபட்டனர். விட்டுணுசமாதானம் செய்தும் அச்சண்டை தீரவில்லை. அதனால் விட்டுணு ஒரு மோகினி வடிவமெடுத்து வரத் தேவர்களும் அசுரர்களும் சண்டையை விட்டு விட்டு அம்மோகினியின் பின் சென்றனர். உடனே மோகினி,''என்னைத் தேவையானோர் என்பின் வாருங்கள். அமுதம் தேவைப்படுவோர் அதை எடுத்துச் செல்லுங்கள்'' என்று சொல்லத் தேவர்கள் அமுதத்தை எடுத்துச் சென்றனர். அசுரர்கள் மோகினியின் பின்னால் சென்றனர். அவர்கள் மோகினிக்காக சண்டையிலீடுபட்டபோது,''உங்களில் பலசாலி யாரோ அவனைத்தான் நான் விரும்புவேன்'' என்று விட்டுணு கூற அசுரர்கள் யுத்தம் செய்து மாண்டு போயினர். அசுரரில் இருவர் சண்டை செய்யாது ஒதுங்கிச் சென்று தேவர்களோடு நின்றனர். மோகினி வடிவில் இருந்த விட்டுணு தேவர்களுக்கு அமிர்தத்தைக் கொடுத்த போது தேவர்களோடு நின்ற இரு அரக்கர்களும் அமுதை வாங்கி உண்டனர். அவர்கள் தேவர்கள் அல்ல அரக்கர்கள் என்று சூரியனும் சந்திரனும் விட்டுணுவுக்குச் சொல்ல, விட்டுணு அமிர்தத்தைக் கொடுத்த அகப்பையால் அவர்கள் இருவரையும் தாக்கினார். அதனால் அவர்களின் உடல்வேறு தலைவேறானது. அமிர்தம் உண்டடையால் தலைகள் இரண்டும்

உயிருடன் இருந்தன. உடல்கள் இரண்டும் அழுகி விட்டன. அதைக் கண்ட விட்டுணு,‘‘நீங்கள் இருவரும் கிரகங்கள் ஆகுங்கள்.’’ என்று பணித்தார். அவை இரண்டும் தான் ராகுவும் கேதுவுமாகும்.

அதன்பின் விட்டுணு மோகினி உருவில் பாற்கடலின் அருகே இருந்த போது அவ்வழியாக வந்த சிவபெருமானைக் கண்டு அவ் மோகினி மீது காதல் கொண்டார். அதனால் கரியமேனியும், சிவந்த சடாமுடியையும் கொண்ட உக்கிர தோற்றத்துடன் ஒரு மைந்தன் பிறந்தான். அவனுக்குச் சிவபெருமான் அரிகர புத்திரன் எனப் பெயரிட்டார். அது பின் ஐயனார் எனமருவியது. ஐயனாரை இந்திராணிக்குக் காவல் வைத்து விட்டு இந்திரனும் தேவர்களும், திருக்கைலாய மலைக்குச் சென்றனர். அவ்வேளை சிவபெருமான் சனகாதிமுனிவர்கள் நால்வருக்கு ஞானத்தை உபதேசித்துக் கொண்டிருந்ததால் இந்திரனால் சிவபெருமானைச் சந்திக்க முடியவில்லை. அதனால் பூவுலகிற்குச் செல்லப் பயந்து அங்கேயே தங்கினான்.

இந்திரன் சென்று பலநாளாகியும் வராமையால் கவலை கொண்ட இந்திராணி சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தாள். அவ்வேளை அரக்கியர்களுடன் அப்பூஞ்சோலைக்கு வந்த சூரபன்மனின் தங்கையான அசமுகி இந்திராணியைக் கண்டு வியப்புற்று சூரபன்மன் இவளை எங்கும் தேடியும் காணாது கவலை கொண்டுள்ளான். அதனால் இவளை அழைத்துச் சென்று அவனுக்கு மனைவியாக்க வேண்டும் என்று நினைத்தாள்.

அதன் பின் அவள் இந்திராணியின் கையைப் பிடித்து இழுத்துச் சென்றாள். இந்திராணி சுற்றவரப்பார்த்தாள் யாரும் இல்லை. அதனால் பெருங்குகுரலெடுத்து ஐயனாரை அழைத்தாள்.

இந்திராணியின் அலறல் சத்தத்தைக் கேட்ட ஐயனாரின் படைத்தளபதியான மகாகாளர் அவ்விடம் வந்து,‘‘அரக்கப் பெண்ணே இந்திராணியின் கையை விடு.

நான் ஐயானாரின் படைத்தலைவன். என்னை வெல்ல யாராலும் முடியாது'' என்று சொல்ல அசமுகி, துன்முகியிடம் இந்திராணியைக் கொடுத்து விட்டு சூலங்களை எடுத்து வீசினாள். வீரமகாகாளர் அவற்றைத் தூசி போலத்தட்டி விட்டு,''பெண் என்பதால் உன்னைத் தாக்கத் தயங்குகிறேன் . இந்திராணியை விடாவிட்டால் உனது கையைத் துண்டிப்பேன் என்று சொல்லியும் அவள் விடாததால் அவளது கையைத் துண்டித்தார். பின் நீயும் இந்திராணியின் கையைப்பிடித்தமையால் உனது கையையும் துண்டிக்கிறேன்'' என்று துன்முகியின் கையையும் துண்டித்தார்.

கையை இழந்த அசமுகிக்கு வேதனையாகவும், ஆத்திரமாகவும், சித்தப்பிரமை பிடித்தது போலவும் இருந்தது. பிறந்ததிலிருந்தே மற்றவர்களைக் கொடுமைப்படுத்தியும் கொன்றும் சித்திரவதை செய்தும் வந்த அவள் முதல் முறையாகத் தோல்வியடைந்ததையிட்டு ஆத்திரப்பட்டாள். எப்படியும் அவர்களை அழித்தே தீர வேண்டுமென்று சபதமெடுத்தாள்.

இந்திராணிக்கு நேர்ந்த துன்பங்களை நாரதர் சொல்லக் கேட்ட இந்திரன் மிக்க துயரடைந்து சிவபெருமானைச் சந்திக்காது பூமிக்குத் திரும்பிவந்து சீர்காழியை அடைந்து மேருமலையில் போய் மறைந்திருந்தான்.

அசமுகி சூரபன்மனிடம் வந்தபோது பல்லாயிரக் கணக்கான தேவர்கள் அடிமைவேலை செய்து கொண்டிருந்தனர். முனிவர்கள் துதிபாடிக்கொண்டிருந்தனர். அப்போது அசமுகி கைகளால் இரத்தம் வடிய கோரஉருவத்துடன் சென்று சூரபன்மனைச் சந்தித்தாள்.

கையில்லாது வந்த தங்கையையும் துன்முகியையும் கண்டு வெருண்டெழுந்த சூரபன்மன் ''யார் இதைச் செய்தது''? என்று கோபத்துடன் கேட்டான். அசமுகி ''இந்திரனது ஏவலன்'' என்று சொல்ல, பிரமாவாலும் விட்டுணுவாலும் இந்திரனாலும்

செய்ய முடியாததைச் செய்து விட்டுச் சென்றவனைத் தண்டிக்காது விட்டால் அசுரர்குலத்திற்கே இழுக்கு'' என்று சூரபன்மன் சொல்ல அவனது மகனான பாணுகோபன்,''இதை சிறிதென நினைத்துவிடலாகாது. உடனே அவனைக் கைது செய்து சித்திரவதை செய்யவேண்டும். அவனைப் பிடிக்க அனுமதி தாருங்கள்'' என்று கேட்டான். சூரபன்மன்,'' படையோடு சென்று பிடித்துவா'' என்றான்.

அதன்பின் பிரமாவை அழைத்த சூரபன்மன்,''எனது தங்கையினதும், துன்முகியினதும் கைகளை முன்போல் வரச்செய்'' என்று கூறப்பிரமன் அவர்களது கைகளை முன்போல வரச் செய்தான். அதன்பின் சூரியனையும் நட்சத்திரங்களையும் அழைத்த சூரபன்மன்,''எனது தங்கையின் கையையும், துன்முகியின் கையையும் துண்டித்தவன் யார்…? நீங்கள் ஆகாயத்திலிருந்து பார்த்திருப்பீர்கள் சொல்லுங்கள்''என்றான். சூரியனும் நட்சத்திரங்களும் தாம் காணவில்லை என்று சொல்லச் சூரபன்மன் அவர்களைச் சிறையில் அடைத்து விட்டு, வாயுவை, அழைத்துக் கேட்க வாயுவும் தான் காணவில்லை என்று சொன்னான். அதனால் அவனையும் சிறையில் அடைத்தான். அதன்பின் காவல் தெய்வங்களையும், பூமியில் உள்ள அரசர்களையும் அழைத்துக்கேட்டான். அவர்கள் தமக்குத்தெரியாது என்று கூற அவர்களது காது, மூக்கு, கை, போன்றவற்றை அறுக்கும்படி உத்தரவிட்டான்.

பானுகோபன் இலட்சக் கணக்கான அசுரசேனையுடன் புறப்பட்டுத் தனது சகோதரியின் கையைத் துண்டித்தவனைத் தேடினான். அவன் அகப்படவில்லை. அப்போது அங்கு வந்த இந்திரனின் மகனாக சயந்தன் அசுரசேனையோடு கடும் போர் செய்தான். அவன் ஏறிவந்த ஐராவதம் என்ற யானை தனது தும்பிக்கையாலும் வாலாலும் அடித்து ஆயிரக்கணக்கான அசுரர்களைக் கொன்றது. சயந்தன் மாயஉருப்பெற்றுப் பல்வேறு உருவங்களில் தோன்றி அசுரர்களுடன் கடுமையாகப்

போரிட்டான். சயந்தன் மாய உருவுடன் போர் செய்வதை உணர்ந்த பாணுகோபன் தானும் மாய உருவெடுத்துக் கடுமையாகச் சயந்தனைத் தாக்கினான். சயந்தன் ஆயிரம் அம்புகளை ஒரே தடவையில் விட்டுப் சயந்தனின் தேரை உடைத்தான். சுயந்தனது வில் நாணும் அறுந்தது. அம்புகள் சயந்தனது உடலைத்தாக்க அவன் மயங்கி ஐராவதத்தின் மீது சாய்ந்தான். பாணுகோபனின் கட்டளைப்படி சயந்தனை அசுரர்கள் சிறைப்படுத்தினர். அதன் பின் தேவர்கள் அனைவரையும் சிறைப்படுத்தி விட்டுத் தேவலோகத்தைக் கொழுத்தினார்கள். தேவர்களைச் சூரபன்மன் முன் கொண்டு வந்து நிறுத்தினார்கள். சூரபன்மன் அவர்களது அங்கங்களைத் துண்டிக்கத் துண்டிக்க அவை மீண்டும் பொருந்தின. அதைக்கண்டு அதிசயித்தசூரபன்மன்,“இவர்களைக் கொல்லமுடியாது. ஆதனால் பாதாளச் சிறையில் அடையுங்கள்” என்று கூறிவிட்டுச் சென்றான்.

பானுகோபனின் தாக்குதலால் அறிவிழந்த ஐராவதம் என்ற யானை மயக்கம் தெளிந்து எழுந்து திருவெண்காட்டுக்கு வந்து அங்கு கோவில் கொண்டிருந்த சிவபெருமானை வணங்கியது. அதனால் அதற்கேற்பட்ட வேதனையும் காயங்களும் மாறின. மகனைக் கைதுசெய்தமையால் கவலைப்பட்ட இந்திரனும் இந்திராணியும் மேருமலைக்குச் சென்று சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தனர்.

## மூன்று – மகேந்திர காண்டம்.

இந்திரன் முதலிய தேவர்களும் முனிவர்களும் திருச்செந்தூரில் சிங்காசனத்தில் வீற்றிருந்த முருகக் கடவுளை வணங்கித் தமக்கு அசுரர்களால் உண்டாகும் துன்பங்களை எடுத்துக்கூறி அத்துன்பங்கள் யாவும் முருகக்கடவுளால் தான் தீரும் என்று கூறி வழிபட்டனர்.

“சூரபன்மன் அசுரனானாலும் பிரம்மாவின் பேரன். தேவரின் உறவினன். அதனால் அவனை உடனே கொல்லாது நிலைமையை விளக்கி ஒரு தூதுவனை அனுப்புவோம் என்று இந்திரன் கூற,“யாரை அனுப்பலாம்”என்று முருகன் கேட்டான். அதற்கு இந்திரன்,“வீரவாகுதேவர் தான் இதற்குப் பொருத்தமானவர்” என்று கூறமுருகன் வீரவாகு தேவரை அழைத்து “நீ சூரபன்மனிடம் சென்று சிறைப்பிடித்த தேவர்களை விடுவிக்கும்படி சமாதனம் செய்துவா” என்று கூறி அவருக்குத் தனது அருளாசியைக் கொடுத்தார். அதை ஒப்புக்கொண்ட வீரவாகு தேவர் மகேந்திரபுரியை நோக்கிப் பயணமானார்.

வீரவாகு தேவர் கந்த மாருதம் என்ற மலையின் உச்சியில் ஏறி நின்றார். அவரது பாரத்தைத் தாங்க முடியாத அம்மலை பூமியில் தாழ்ந்தது. ஆதைமேலேழுப்பிய வீரவாகு தேவர் மகேந்திரபுரியை நோக்கிச் சென்றார். மகேந்திரபுரியின் வடக்கு வாசலை அடைந்த போது அவ் வாயிலின் காப்பாளனான வீரசிங்கன்,“யார் நீ. இங்கு இது வரையாரும் வந்ததில்லை. யாரென்ற சொல்லாவிட்டால் உன்னைக் கொல்வேன்” என்றான். அதைக் கேட்ட வீரவாகு தேவர்,“நீ பலசாலியானால் உனது பலத்தை வெளிப்படுத்து” என்றார். உடனே வீரசிங்கனோடு அங்கு நின்ற பல்லாயிரக்கணக்கான அசுரர்கள் வீரவாகு தேவரைச் சூழ்ந்து நின்றனர். வீரவாகுதேவர் அவர்களைக் கண்டு அஞ்சாது போரிட்டார். பல ஆயிரம் அசுரர்கள் உயிரழந்ததைக் கண்ட வீரசிங்கன் சூலத்தை ஏவ அதை வீரவாகுதேவர் பொடிப்பொடியாக்கினார். அதைக் கண்டவீரசிங்கன் தனது ஆயுதங்களில் சிறந்த ஆயுதமான குலிசத்தை வீசினான். அதைத் தனது வாளால் தடுத்த வீரவாகுதேரர் அவன் திருப்பித் தாக்கமுன் அவனது கைகயைத் துண்டித்தார். அதன்பின் இலங்கையின் மீது பாய்ந்தார். அவர் பாய்ந்ததும் இலங்கை குறுகிக் கடலுள் அமிழத்தொடங்கியது. அதைக்கண்ட அசுர வீரனான

அதிவீரன் என்ற அரக்கனும் அரக்கர்களும் அரக்கிகளும் திகைத்துத் திகிலடைந்தனர். கடலுள் அமிழ்ந்து கொண்டிருந்த அரக்கர்களையும் அரக்கிகளையும் மீன்கள் கடித்துக் குதறின.

அதைக்கண்ட அதிவீரன் மாய உருவெடுத்து வீரவாகு தேவரின் முன்னே சென்று அவரைப் பார்த்து வியந்து போனான். அப்பொழுது அதிவீரனுக்கு அருகில் வந்த அசுரர்கள் வீரவாகு தேவரைச் சூழ்ந்து நின்று போரிட்டு மாண்டனர். அதைக் கண்ட அதீவீரன், சூலங்களை ஏவ வீரவாகுதேவர் அவற்றை அழித்தார். வீரவாகு தேவரைச் சூழ்ந்து நின்ற அசுரர்கள் பலர் அவருடன் போரிட்டு மாண்டனர். அதைக் கண்ட அதிவீரன் முத்தலைச்சூலத்தை ஏவ அதையும் வீரவாகுதேவர் அழித்தார். அதனால் கோபம் கொண்ட அதிவீரன் பிரமன் கொடுத்த சக்திமிக்கவாளை எடுத்து வீசினான். அது பிரமதேவர் கொடுத்ததால் அதை யாராலும் தோற்கடிக்க முடியாது என்று அதிவீரன் நினைத்தான். ஆனால் அதை இலகுவாக விலக்கிய வீரவாகுதேவர் அதிவீரனது நெஞ்சில் தனது வாளைச் செலுத்த அவன் சுருண்டு விழுந்து மரணமானான்.

அதன்பின் வீரவாகு தேவர் மகேந்திரபுரியை அடைந்தார். மகேந்திரபுரியின் வடக்குவாசலில் கோரன், அதிகோரன் என்ற அசுரவீரர் இருவர் யானை, குதிரை தேர்ப்படையுடன் காவல்காத்தனர். போர்செய்யாது தந்திரமாகச் சென்று சூரபன்மனைச் சந்திக்க விரும்பிய வீரவாகுதேவர் கிழக்குவாசற்பக்கமாக உள்ளே செல்ல நினைத்தார். கிழக்குவாசலை மகிடாசுரன் வீரபாணு என்னும் அசுரர்கள் காவல் காத்து நின்றனர். அவர்களுக்குத் துணையாக அசுரசேனைகள் நின்றன. அதனால் வீரவாகு தேவர் தெற்கு வாசலை அடைந்தார். அதை ஆகாயத்தில் இருந்து கயமுகன் என்ற



அசுரன் காத்துக் கொண்டிருந்தான். அவன் வீரவாகு தேவரைக் கண்டதும் மிகுந்த கோபத்துடன் வந்து ஒரு மலையை அடியோடு பெயர்த்து வீரவாகுதேவர்மீது வீசினான். அம்மலை வீரவாகுதேவரின் தோளில் பட்டு உடைந்து பொடிப்பொடியானது. அதைக்கண்டு ஆச்சரியமும் கோபமும் கொண்ட கயமுகன் அங்குள்ள குன்றுகளைத் தூக்கி வீசினான். முருகனின் அருளால் அக்குன்றுகள் வீரவாகு தேவரைத் தாக்காது நிலத்தில் விழுந்தன. அதனால் கோபமுற்ற கயமுகன் மரங்களைப் பிடுங்கி வீரவாகு தேவரைத் தாக்க, வீரவாகு தேவர் அவற்றை வாளால் தடுத்து கயமுகனது யானைத்தலையையும் கைகளையும் வெட்டி விழுத்திவிட்டுக் காலால் அவனது நெஞ்சில் உதைய அவன் பதைபதைத்து நிலத்தில் விழுந்து இறந்தான். அதன்பின் போர் செய்து நாளைக் கடத்தாது முருகனை வேண்டித்தன் உருவத்தை யாரும் காணாதபடி மறைத்துக் கொண்டு கிழக்கு வாசலை அடைந்தார்.

பார்க்குமிடமெல்லாம் விழாக்கோலம் பூண்டிருந்ததது. இரத்தினங்களும், முத்துக்களும், மாணிக்கங்களும் தரையில் பதிக்கப்பட்டிருந்தன. இலட்சக்கணக்கான யானைகளும் குதிரைகளும் கட்டப்பட்டிருந்தன. இலச்சக்கணக்கான அசுரர்கள் சிவபெருமான் கொடுத்த ஆயுதங்களுடன் காவல் காத்துக்கொண்டிருந்தனர். நறுமணப்புகை மூக்கைத் துளைத்தது. எங்கும் பசும் சோலைகள். நந்தவனங்கள் இப்படியொரு நகரை எங்கும் காணமுடியாதென்று வீரவாகுதேவர் நினைத்தார். மாடமாடங்களில் அசுரர்களும் அரக்கிகளும் இருந்து மதுவைக் குடித்து விட்டு ஆடியும்பாடியும் சண்டை செய்தும் தம்பொழுதைப் போக்கிக் கொண்டிருந்தனர்.

ஒருபக்கத்தில் வருணன் அரிசியைக் கழுவிக் கொடுக்க அக்கினிபகவான் அதை இறைச்சி மீன் முதலியவற்றோடு சேர்த்துச் சமைத்துக் கொண்டிருந்தான். தேவமகளிரும் தேவர்களும் அவர்களுக்கு உதவி செய்தனர். மறுகரையில் தேவமகளிர் அசுரர்களுக்கு உணவு பரிமாறிக் கொண்டிருந்தனர். காதல் செய்வோர் எதுவிதக்கூச்சமும் இல்லாது காதல் செய்து கொண்டிருந்தனர். எல்லோரும் மதுமயக்கத்தில் இருந்தனர். அசுரக்குழந்தைகள் சூரியனது குதிரைகளுடன் விளையாடினர். சில குழந்தைகள் இடியையும் மின்னையும் நட்சத்திரங்களையும் கையில் பிடித்து விளையாடினர். இவற்றைப் பார்த்துக் கொண்டு ஆகாய வழியாகச் சென்ற வீரவாகு தேவர் பாணுகோபனது அரண்மனையை அடைந்து அதன் அழகை மெய்மறந்து சிலகணம் நின்று ரசித்து விட்டுச் சிறைச்சாலைப்பக்கம் சென்றார். அங்கே சயந்தன் முதலிய தேவர்கள் அடைபட்டுக் கிடந்தனர்.

சயந்தனின் கைகளிலும் கால்களிலும் விலங்கிடப்பட்டிருந்தது. அசுரர்கள் சுற்றிவரநின்றனர். அவர்கள் சயந்தனைக் கேலிசெய்து சிரித்தனர். ‘‘நீ இந்திரனின் மகனா….? உனது தாய் தந்தையர் எமக்குப் பயந்துமறைந்திருப்பது வெட்கமில்லையா…? வீரர் என்றால் உன்னை வந்து மீட்டிருப்பார்கள்’’ என்று கூறினர். அவர்கள் அளவுக்கதிகமாகக் கள்ளைக் குடித்திருந்தனர். சிறைக்காவலர்களான உதாவகன், கண்டகன், கராளன், மாயவன், சண்டகன் முதலிய அசுரர்கள்,‘‘உனது பெற்றோர் எங்கே?’’ என்று கேட்டுச் சயந்தனைத் தாக்கினார். அதனால் சயந்தன் மயக்கமடைந்து நிலத்தில் சாய்ந்தான். அவன் நித்திரையானதும் முருகப் பெருமான் அவனது கனவிலே ஆறு திருமுகங்களுடனும் பன்னிரு திருக்கரங்களுடனும் தோன்றி,‘‘சயந்தா, பயப்படாதே. எனது தூதுவராக வீரவாகுதேவர் வந்து மாயங்களைச் செய்கின்ற கிரௌஞ்ச மலையை அழித்து, தாரகன் என்ற கொடிய அரக்கனையும் கொன்றுவிட்டார். அடுத்துச் சூரபன்மனின்

மகனொருவனைக் கொன்று உன்னையும் தேவர்களையும் சிறை மீட்பார். கவலைப்படாதே'' என்றுகூறச்சயந்தன்,‘‘எம்பெருமானே எம்மைக் காப்பாற்றும். அசுரர்களால் நாம்பட்டவேதனைகள் சொல்லில் அடங்காதவை. நாம் அழைக்காமலே என கனவில் வந்து நல்ல செய்திகளைச் சொன்ன உமது பாதங்களை வணங்குகிறேன் என்றான். அதற்கு முருகன் ‘‘இப்போது வீரவாகு தேவர் உன்னை வந்து சந்திப்பார்'' என்று கூறி மறைந்தார்.

நித்திரையால் விழித்தெழுந்த சயந்தன் தனது கனவை எண்ணிமிக்க மகிழ்ச்சி கொண்டு தனக்கு அருகில் இருந்த தேவர்களுக்கு அதைச் சொன்னான். அதேவேளை முருகப் பெருமான் வேறுசிறைகளில் அடைக்கப்பட்டிருந்த தேவர்களின் கனவிலும் சயந்தனுக்குக் கூறியவற்றைக் கூறினார். தேவர்கள் எல்லோரும் தமக்கு விடிவுகாலம் வந்து விட்டது என்று எண்ணி மட்டற்ற மகிழ்ச்சியடைந்தனர்.

அங்கு மாய உருவில்வந்த வீரவாகு தேவர் அங்கு கூடியிருக்கும் அசுரர்கள் தன்னைக் காணாமலும், தனது பேச்சைக் கேளாமலும் தேவர்கள் தன்னைக் காணவும் அருள் செய்யுமாறு முருகனை வேண்ட, முருகன் அவ்வாறு செய்தார். தனக்கு முன்னால் வீரவாகு தேவர் வந்தமர்ந்ததும் சயந்தன் பயந்து அரக்கர்கள் ஏதோ மாயம் செய்கிறார்கள் என்று நினைத்துக் கலங்கினான். அப்போது வீரவாகு தேவர் சொன்னார்,‘‘பயப்படாதே சயந்தா. நான்முருகக் கடவுளின் தூதுவன்.. சூரபன்மனிடம் என்னை முருகன் தூதாக அனுப்பினார். முருகன் அசுரர்களை அழிக்கவென்றே சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து உதித்தவன். அசுரர்கள் அழியும் காலம் நெருங்கிவிட்டது. அதனால் கவலைப்படாமல் இரு'' என்று கூறச் சயந்தன் வீரவாகுதேவரை வணங்கி'',‘‘முருகக் கடவுள் கனவில் வந்து நீங்கள்

வந்து எம்மை மீட்பதாகக் கூறினார். அதன்படி வந்துவிட்டீர்கள். இனி எமக்குச் சிறை வாசம் இல்லை. தேவர்கள் தாம் செய்த தவறுகளை உணர்ந்து விட்டனர். எனது தந்தையும் தாயும் நாம் அசுரர்களிடம் அகப்பட முன்பே மறைந்து விட்டனர் அவர்களைப் பற்றி எதுவும் அறியாது துன்பப்படுகிறேன்'' என்றான்.

‘‘சயந்தா, சிவபெருமானதும் உமாதேவியாரினதும் சக்தியின் இருப்பிடம் தான் முருகன். அவன் அரக்கர்களைப் பூண்டோடு அழித்துத் தேவர்களைக் காப்பான். உனது பெற்றோர் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தவாறு மேருமலையில் இருக்கின்றனர். கவலை கொள்ளாதே.'' என்று கூறி அவ்விடத்தைவிட்டுப் புறப்பட்டார். தேவர்கள் எல்லோரும் சிவபுத்திரனான முருகக்கடவுள் தம்மை வந்து சிறைமீட்பார் என்று நினைத்து மகிழ்ந்தனர்.

சூரபன்மன் சிவபெருமானிடம் பெற்ற வரங்களின் மகிமையால் தனது நகரை இந்திரலோகத்தைவிட அழகாக அமைத்திருந்தான். அவற்றைக் கண்டு வியந்தவாறு சூரபன்மனின் அரண்மனைக்குச் சென்றபோது சூரபன்மனின் சிங்காசனத்தை விட அழகிய சிங்காசனம் ஒன்றுசூரபன்மனின் அரண்மனைக்கு வந்தது. அதை முருகன் அனுப்பியிருப்பார் என்று நினைத்த வீரவாகுதேவர் முருகனை வணங்கி விட்டு அதில் அமர்ந்தார். சூரபன்மனுக்குமுன் சிங்காசனத்தில் அமர்ந்திருப்பவர் யாராக இருக்கும் என்று அசுரர்கள் சிந்தித்தனர். அத்துடன் அசுரப்படையினரை வென்று வந்தானா? என்றும் சிலர் சந்தேகப்பட்டனர்.

தன்னெதிரே வீரவாகுதேவர் அச்சமின்றிக்கம்பீரமாக வீற்றிருப்பதைக் கண்ட சூரபன்மன் ‘‘சிவபெருமானைத் தவிர எனது அரண்மனைக்குள் யாரும் வரமுடியாது. அப்படி இருக்கையில் அனுமதியின்றி வந்ததுமல்லாமல் எனக்கு நிகரானசிங்காசனத்தில் அமர்ந்திருக்கும் நீ யார்''? என்று கேட்டான்.

‘‘சிவபெருமானது நெற்றிக்கண்ணிலிருந்து உதித்த முருகப் பெருமானின் தூதுவன் நான். எனதுபெயர் வீரவாகுதேவர் எம்பெருமான் என்னை உன்னிடம் தூதாக அனுப்பியதால் வந்தேன். இடையில் எனது வரவைத் தடை செய்த கிரௌஞ்சமலையை அழித்தேன். தாரகன் என்ற உனது தம்பியையும் கொன்றேன்’’. என்றார் வீரவாகுதேவர்.

‘‘அப்படியான வீரன் என்கிறாய். பிறகு ஏன் தூதுவனாக வந்தாய். அதைச்சொல்’’ அதட்டினான். சூரபன்மன்.

‘‘இந்திரனையும் இந்திராணியையும் துன்புறுத்தித் துரத்தினாய். இந்திரனது மகனான சயந்தனைச் சிறையில் அடைத்தாய். தேவர்களைச் சிறைப்படுத்தி அவர்களை அடிமையாக்கிச் செய்யத்தகாத செயல்களைச் செய்விக்கிறாய். அவற்றைத் தேவர்கள் வந்து முறையிட்டமையால் முருகப்பெருமான் என்னை அனுப்பினார். சிவபெருமானிடத்தில் அரியபல வரங்களைப் பெற்ற நீ அவற்றால் உனக்கும் உனது அரக்கர்களுக்கும் நன்மை செய்வதாக நினைத்துத் தேவர்களைத் துன்புறுத்திச் சிறைப்படுத்தியுள்ளாய். அவர்களை விடுதலை செய். இல்லாவிட்டால் பிரமனும் விட்டுணுவும் இந்திரனும் கோடான கோடி தேவர்களும் சிவபெருமானிடம் சென்று முறையிடச் சிவபெருமான் உன்னையும் அரக்கர் கூட்டத்தையும் பூண்டோடு அழிக்க முருகப்பெருமானை அவதரிக்கச் செய்துள்ளார். முருகன் வீரன். அவன் உன்னைக் கொல்லவரத்தேவையில்லை. நானே உன்னைக் கொல்வேன். ஆனால் முருகப்பெருமான் என்னைத் தூதுவனாக அனுப்பியதால் எதுவும் செய்யமுடியவில்லை. உனக்கு உயிரின் மேல்ஆசை இருந்தால் தேவர்களை விடுதலை செய்து விட்டு முருகனிடம் சரணடை’’ என்றார் வீரவாகுதேவர்.

‘‘ஓடிப்பிடித்து விளையாடும் சிறுவன் என்னைக் கொல்லப்போகிறானா? நீவந்த வேலை முடிந்து விட்டது. சென்றுவிடு. தூதுவன் என்ற படியால் உயிர் பிழைத்தாய். இனி அந்த விளையாட்டுப்பிள்ளையைப் பற்றி புகழ்ந்து கூறாதே. சிவபெருமானின் அருளால் அழியாத வரங்களையும் ஆயுதங்களையும் பெற்ற நான் விளையாட்டுப் பிள்ளைக்கு அஞ்சுவனா? பேசாமல் உயிர் தப்பிப்போ. இல்லாவிட்டால் சிறைப்படுத்தப்படுவாய்’’ என்று கோபத்துடன் கூறினான் சூரபன்மன். அப்போது அசுரர்கள் ஆயிரம்பேர் வீரவாகு தேவரைப் பிடிக்க வந்தனர். அவர்களைத் தாக்கி அழித்த வீரவாகுதேவர்,‘‘இனி உன்னை அழிக்க வேலோடு முருகன் வருவான்’’ என்று கூறி மறைந்தார்.

அதைக்கண்ட சூரபன்மன் சதமுகன் என்ற பலசாலியான அசுரனை அழைத்து,‘‘நீ சேனைகளுடன் சென்று என்னை அவமதித்து எமது வீரர் பலரைக் கொன்ற அச்சிறுவனது தூதுவனைப் பிடித்துவா. எக்காரணம் கொண்டும் தூதுவனைக் கொல்லக்கூடாது’’என்றான். அதைக்கேட்ட சதமுகன் பல்லாயிரம் அசுர வீரர்களோடு சென்று வீரவாகு தேவரைத் தேடினான். ‘‘வீரவாகு, நீபெரும் வீரனாக இருந்தால் வெளிப்பட்டு வந்து என்னுடன் சண்டையிடு’’ என்று அறைகூவல்விடுக்க வெளிப்பட்டுவீரவாகுதேவர் அவர்கள் அனைவரையும் கொன்று விட்டுத் தனது பாதத்தினால் சதமுகனை உதைக்க அவன் விழுந்து இறந்தான்.

சூரபன்மனின் அரண்மனையைக் காவல்செய்து கொண்டிருந்த இலட்சக்கணக்கான அசுரர்களையும், அவர்களது ஆயுதங்களையும், தேர், குதிரை, யானை, போன்ற படைகளையும் வீரவாகு தேவர் விசுவரூபம் எடுத்து அழிந்தார். வானளவு உயர்ந்து நின்ற அவரது கோர உருவத்தைக்கண்ட அசுரர்கள் ஓடித்தப்பினர். பலர் அவரது கால்களுக்குள் நசிபட்டு இறந்தனர். அடுத்து அங்குள்ள பெரும்பெரும் மண்டபங்களைக் காலால் உதைத்து அழிந்தார். அத்தாணி மண்டபம்

உடைந்து தகர்ந்தது. மாடங்கள், கோபுரங்கள், யாவும் தகர்ந்தன. கட்டப்பட்டிருந்த யானைகள், குதிரைகள் என்பன கட்டை அறுத்துக் கொண்டு ஓடின. அவற்றைப் பிடிக்க வென்று ஓடிய அசுரர்கள் வீரவாகு தேவரின் கர்ஜனையைக் கேட்டுப் பயந்து நடுநடுங்கி வேறு திசைகளால் ஓடினர். அசுரர்கள் பலர் யானைகளாலும் குதிரைகளாலும் மிதிபட்டு இறந்தனர். பெண்களும் முதியவர்களும் செய்வதறியாது சென்ற சென்ற இடங்களில் திகைத்துச் நின்றனர். தலைதெறிக்க ஓடிய பலர் கடலில் விழுந்து தத்தளித்தனர். பலர் இறந்து மிதந்தனர். வீரமகேந்திரபுரி தரைமட்டமானது.

சூரபன்மனோடு இருந்த சந்திர வாகுகள் வீரவாகுதேவர் அட்டகாசம் செய்யும் ஒலி கேட்டு வெளியே வந்தனர். அவர்களுக்கு ஆயிரம் கைகள் உண்டு. அவற்றில் பல ஆயுதங்கள் இருந்தன. பூமியைப்போன்ற பெரிய வயிறுகளையும் உடையவர்கள் அவர்கள். அவர்கள் வீரவாகு தேவரைச் சூழ்ந்து போரிட்டனர். அவர் கைகளாலும் கால்களாலும் ஆயுதங்களினாலும் மராமரத்தைப் பிடுங்கி அடித்தும் சந்திரவாகுகள் அனைவரையும் கொன்றார்.

வீரவாகுதேவர் சந்திரவாகுகளைக் கொன்ற செய்தியைக் கேட்ட சூரபன்மனின் மகன்,‘‘ இதோ ஒரு நொடியில் அவனைக் கட்டி இழுத்து வருகிறேன்’’ என்றுகூறி அசுரசேனையுடன் வீரவாகுதேவரைத் தேடிச்சென்றான். அசுரசேனைகள் வீரவாகுதேவரைச் சூழ்ந்து தாக்கத் தொடங்கின. யானைப்படை, குதிரைப்படை, காலாட்படை, தேர்ப்படைகளோடு வீரவாகுதேவர் மோதியபோது இடியோசையைப் போல நெடுநேரம் சத்தம் கேட்டது. சிலமணித்தியாலங்களுள் அசுரர்களின் படை அழிந்துவிட்டது. என்பதைக் கண்ட வச்சிரவாகுதேரில் ஏறி வீரவாகு தேவருக்கு அருகே சென்றான்,‘‘தூதுவனே, உன்னைக் கொல்லக் கூடாது என்பது எனது தந்தையின் கட்டளை. அதனால் உன்னைப் பிடித்துச் சென்று எனது தந்தையிடம்

ஒப்படைப்பேன்’’ என்று கூறி ஆர்ப்பரித்த போது வீரவாகு தேவர் அவனது தேரைக்காலால் உதைக்க அது ஆகாயத்தை நோக்கிச் சென்று மீண்டும் நிலத்திற்கு வந்தது. அதை வீரவாகு தேவர் மீண்டும் காலால் உதைக்க அது பொடிபொடியானது. தேரில் இருந்து குதித்த வச்சிரவாகு பல ஆயிரம் அம்புகளை விட அதை வீரவாகு தேவர் அழித்தார். அதனால் அவன் வாளைத்தூக்கியவாறு அவரின் அருகே வர வீரவாகுதேவர் தனது வாளால் அவனது பத்துத் தலைகளையும் துண்டித்தார்.

வச்சிரவாகு இறந்தும் வீரவாகுதேவர் இலங்கையை அடைந்தார். அப்போது இலங்கையைக் காவல் செய்து கொண்டிருந்த யாளிமுகன் என்ற அரக்கன், தனது மகனான அதிவீரனை வீரவாகு தேவர் கொன்றதைக் கேள்விப்பட்டு மிகுந்த கோபங் கொண்டான். அவனுக்கு ஆயிரம் முகங்கள். இரண்டாயிரம் கைகள். அந்த இரண்டாயிரம் கைகளிலும் ஆயுதங்களை ஏந்தியவாறு வீரவாகுதேவரைக் கொல்ல வந்தான். அசுரர்கள் பல்வேறு விதமான படைக்கலன்களை ஏவினர். அதைக்கண்ட வீரவாகுதேவர் அவ் அசுரர் கூட்டத்துள்ப் புகுந்து தன்மீது படைக்கலன்களை வீசியவர்களையெல்லாம் கொன்று குவித்தார். அதைக்கண்ட யாளிமுகன் தனது ஆயிரங்கைகளிலும் கூரிய ஆயுதங்களை ஏந்தியவாறு வந்தான். யாளி முகனை எதிர்த்து அவனது ஆயிரம் கைகளையும் வீரவாகு தேவர் வெட்டி விழுத்தினார். அதன் பின் அவனது ஆயிரம் தலைகளையும் வெட்டி விழுத்தினார்.

அதன்பின் வீரவாகுதேவர் மகேந்திரபுரியை விட்டுச் சென்று திருச்செந்தூரை அடைந்து முருகப்பெருமானை வணங்கி நடந்தவற்றைக் கூறினார். அதைக்கேட்டு மகிழ்ந்த முருகப் பெருமான் அவருக்கு அருள்புரிந்து வாழ்த்திவிட்டு பிரமாவையும், இந்திரனைப் பார்த்து,‘‘வீரவாகு தேவரை அனுப்பிச் சூரபன்மன் சிறைப் படுத்திய தேவர்களை விடுதலை செய்யும்படி கூற அவன் மறுத்து விட்டான். அதனால் நாளை

நாம் அவனுக்கெதிராகப் போர் தொடுக்கிறோம். அஞ்சாமல் இருங்கள்'' என்று கூறத்தேவர்கள் மகிழ்ச்சி ஆரவாரம் செய்து முருகனைத் துதித்தனர்.

மகனைக் கொன்றதோடல்லாமல் தனது நகரை அழித்துச் சின்னாபின்னமாக்கிய வீரவாகுதேவர் மீது சூரபன்மனுக்கு அளவில்லாத கோபம் உண்டாயிற்று,''வந்தவன் தூதுவனென்றால் என்மகனையும் தம்பியையும் பல்லாயிரம் படைகளையும் அழிக்கலாமா?'' என்றுகோபத்துடன் கத்திய சூரபன்மன்,''உடனடியாகச் சென்று அவனைப் பிடித்து வாருங்கள்'' என்று சொல்லத் தரும கோபன் என்ற மந்திரி சொன்னான்,''அவன் வான வழியாகத் தப்பிச்சென்றுவிட்டான்'' என்று அதைக்கேட்டுக் கோபமடைந்த சூரபன்மன்,''உடனடியாகப் பிரமாவை அழைத்து வாருங்கள்'' என்றான். பிரமா வந்ததும்,''அழிந்த மகேந்திராபுரியை முன்பு இருந்ததைப் போலக் கட்டி எழுப்பு'' என்றான். அதற்குப் பிரமா சம்மதித்தான். உடனே மகேந்திரபுரி முன்போலானது. அதனால் மகிழ்ச்சியடைந்த சூரபன்மன்,''பிரமா, நீ உன்னுடைய அண்டத்திற்குச் சென்று படைத்தல் தொழிலைச் செய்'' என்றான். பிரமா தான் இருக்கும் சத்தியவுலகத்தை அடைந்தார்.

சூரபன்மனின் அரண்மனைக்குவந்த, சூரபன்மன் வேவுபார்க்க அனுப்பிய தூதுவன் அவனை வணங்கிய பின்பு சொன்னான்,''அரசே, சிவபெருமானின் புத்திரனான முருகன் பலகோடிக்கணக்கான பூதசேனைகளோடு திருச் செந்தூரில் வந்து முகாமிட்டிருக்கிறார். எப்போது வேண்டுமானாலும் படையெடுப்பு நிகழும்'' என்றான். அதைக்கேட்ட சூரபன்மன் தனது தம்பியான சிங்க முகனையும்,மந்திமார்களையும் சேனாதிபதிகளையும் அழைத்து ஆலோசனை நடத்தினான். படைகளைப்போருக்குத் தயாராகும்படி கூறினான். நானும் எனது தம்பி மாரும் புதல்வர்களும் சிறுவனான முருகனுக்குப் பயந்து ஓடித் தப்பமுடியுமா.

வெக்கக்கேடான செயலைச் செய்ததாகப் பலரும் கேலி செய்வர். அதனால் வரும் போரை எதிர்கொள்வோம்.’’ என்றனர். அவர்களின் முடிவை ஏற்ற சூரபன்மன் அவர்களைப் பாராட்டி அனுப்பி வைத்தான்.

## மகேந்திரகாண்டம் முற்றிற்று.

## நான்கு – யுத்தகாண்டம்.



திருச்செந்தூருக்கு வந்த முருகன் வீரவாகு தேவரை அழைத்து,“தேவர்களின் துயர் தீர்க்க இப்பொழுதே சூரபன்மனின் நகரான வீரமகேந்திரபுரிக்குச் செல்லுதல் வேண்டும். அதனால் தேரை கொண்டு வருக’’ என்றார். அதைக்கேட்ட இந்திரன் முதலிய தேவர்கள் பெருமகிழ்ச்சி,“கொண்டு இனி எமக்கு விடிவு காலம் பிறக்கப் போகிறது’’ என்று மகிழ்ந்தனர். அப்போது வீரவாகு தேவர் தேரைக் கொண்டுவந்து முருகனின் முன்னே நிறுத்தினார். தேவர்களும் பூதகணங்களும் தேரைச்சுற்றி நின்றன.“சூரபன்மனைச் சங்கரிக்கும் நேரம் வந்து விட்டது. அதனால் என்பின் உங்களது வாகனங்களில் புறப்பட்டு வீரமகேந்திர புரியை நோக்கி வாருங்கள்’’ என்றதும் பிரமா அன்னத்திலும், விட்டுணு கருடனிலும், இந்திரன் விமானத்திலும், ஏனைய தேவர்கள் தத்தமது வாகனங்களிலும் வீரவாகு தேவர் தேரிலும் ஏறி முருகப் பெருமானைப் பின் தொடர்ந்தனர். படைத்தலைவர்கள் நூற்றிஎட்டுப்பேரும் முருகனைப் பின் தொடர்ந்தனர். அவர்களோடு இலட்சக்கணக்கான பூதகனங்களும் முருகனைப் பின் தொடர்ந்தன. அப்போது தேவர்கள் பூ மழை பொழிந்தனர். முனிவர்கள் வாழ்த்தினர். பூதர்கள் பல்வேறு விதமான

இசைக்கருவிகளை இசைத்தனர். பேரிகைகள் முழங்க முருகப்பெருமானும் அவரது படைகளும் இலங்கையைக் கடந்து வீரமகேந்திரபுரியை அடைந்தனர். அப்போது பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் முருகக் கடவுளருகே வந்து அவரைப்பணித்து,''நாம் வீரமகேந்திரபுரிக்கு அப்பால் பாசறை அமைப்பது தான் நல்லது'' என்று கூறமுருகன்,''அவ்வாறே செய்வோம்.'' என்று கூறித் தேவதச்சனை அழைத்து உடனே பாசறை ஒன்று அமைக்குமாறு கட்டளையிட்டார்.

அப்போது சூரபன்மனின் அரசசபைக்கு வந்த நாரதர் சூரபன்மனை வணங்கினார்,''எல்லா அண்டங்களையும் வென்று வீராதிவீரனாகி அரசு செய்யும் மாமன்னரே, உம்மை வெல்லயாராலும் முடியாது. பிரமா விட்டுணு இந்திரன்கூடத் தோற்று ஓடியவர்கள். இப்போ சிவபெருமானின் நெற்றிக் கண்ணிலிருந்து உதித்த முருகன் உன்னோடு போர் செய்ய வந்து பாடி வீடு அமைத்துள்ளான். அவன் பெரும் வீரன் பிரமாவும் விட்டுணுவும் இந்திரனும் பிற தேவர்களும் நீ மக்களுச் செய்யும் துன்பங்களைக் கூற அவன் உன்னை அழிப்பேன் என்று கூறி வந்துள்ளான். எதற்கும் ஒரு முறை சமாதானம் பேசுவதால் உனது மதிப்புக் குறையாது'' என்றார்.



''அதைக்கேட்ட சூரபன்மன் மிக்க கோபம்கொண்டு,''விளையாட்டுப்பிள்ளையான அவன் என்னோடு போர் செய்ய வந்திருக்கிறான் என்று சொல்ல உமக்கு வெக்கமாக இல்லையா….? விட்டுணு பிரமன் இந்திரன் போன்றோர் எனது பெயரைக் கேட்டால் நடுநடுங்குவர். அத்துடன் ஆயிரம் கோடி அண்டங்களில் வாழ்வோர் என்று பெயரைக் கேட்டாலே அஞ்சுவர். அப்படி இருக்க ஒரு சிறு பாலகன் என்னை

வெல்வானோ?'' என்ற சூரபன்மன் கோரன்,உத்திரகோரன் என்ற ஒற்றர்களை அழைத்து,''உடனே சமுத்திர ராஜனை அழைத்து வாருங்கள்'' என்றான்.

சமுத்திரராசானைக் கண்ட சூரபன்மன் கடுங்கோபங்கொண்டு,''உனது காவலில் உள்ள சமுத்திரத்தைத் தாண்டி எப்படி முருகனும் பூதகணங்களும் வந்தன?'' என்று கேட்டான். சமுத்திர ராஜன் நடுநடுங்கி,''பிரபு, அவர்கள் ஆகாய மார்க்கமாக வந்தனர்'' என்றான். அப்போது அங்கே வந்த தூதுவன் ஒருவன்,''மகாராசாவே, முருகன் பெருஞ்சேனைகளுடன் வந்து மகேந்திரபுரிக்கு வடக்கே பாடிவீடமைத்துப் போருக்காயுத்தம் செய்கிறான்'' என்றான். அதைக் கேட்ட சூரபன்மன் கொதித்தெழுந்து,''உடனே பாணுகோபனை அழைத்து வாருங்கள்''எனத் தூதுவர்களுக்கு ஆணையிட்டான்.

பாணுகோபன் வந்து சொன்னான்,''அஞ்ச வேண்டாம் தந்தையே, நான் படைகளுடன் சென்று முருகனது சேனைகள் முழுவதையும் அழித்து முருகனைச் சிறைப்படுத்தி வந்து தங்களிடம் ஒப்படைப்பேன்'' என்றான்.

அதைக்கேட்டு மகிழ்ந்த சூரபன்மன், ''சேனைகளுடன் சென்று முருகனது படைகளை அழித்து அவனைச் சிறைப்பிடித்துவா'' என்றான்.

பாணுகோபன் படைகளுடன் புறப்பட்டான். அதைக்கண்ட முருகப் பெருமான் வீரவாகு தேவரை அழைத்து ''வீரவாகு, இங்கு நாம் வந்த செய்தியை அறிந்த சூரபன்மன் எம்மைத் தாக்குவதற்காகத் தனது மகனைச் சேனைகளோடு அனுப்பியுள்ளான். அதனால் எமது சேனைகளோடு சென்று அவனோடு போர்செய்''என்றார். பாணுகோபனுக்கு எதிரே வந்த வீரவாகுதேவர் தனது வில்லை எடுத்து வளைத்து ஆயிரக்கணக்கான பாணங்களை விட்டார். அவை அசுரர்கள்

பலரைத் துண்டு துண்டாக்கின. அசுரர்கள் விட்ட பாணங்கள் பூத சேனையைத் தாக்க பல பூதகணங்கள் இறந்தன. பிணங்கள் நிலமெங்கும் சிதறிக் கிடக்க இருபகுதியினருக்கும் இடையே கடுமையானபோர் நடைபெற்றது. அசுரர்கள் பலர் கொல்லப்படுவதைக் கண்ட அனலி என்ற அசுரப் படைத் தலைவன் கடுங் கோபத்துடன் தனது வில்லை எடுத்து நாணேற்றினான். அந்த ஓசையின் ஒலி அப்பிரதேசத்தில் பயங்கரமாக ஒலிக்கப்பூதப்படையும், தேவர்களும் அஞ்சி நடுநடுங்கினர். அதைக்கண்ட சிங்கர் என்ற பூதத் தலைவர் தனது வில்லில் பாணங்களைப் பூட்டி அனலியின் மீது ஏவிவிட்டுத் தனதுகையால் தேரையும் குதிரைகளையும் தாக்கத்தேர் உடைந்தது. குதிரைகள் இறந்தன. அதைக் கண்டு வெருண்ட அனலி தண்டை எடுத்துச் சிங்கரின் தலையில் அடிக்க அதைத் தடுத்த சிங்கர் அவனைத் தூக்கி நிலத்தில் அடித்துக் கொன்றார். அனலிக்கு உதவியாக வந்த மாயன் என்ற அசுரனையும் சிங்கர் கொன்றார். அதன்பின் சண்டன் என்ற அசுரனுக்கும் சிங்கருக்கும் கடும் போர் நடைபெற்றது. ஈற்றில் சண்டனைச் சிங்கர் தண்டாயுதத்தினால் தாக்கிக் கொன்றார். அதைக்கண்ட அசமுகன் என்ற அசுர சேனாதிபதி சிங்கரை எதிர்க்க சிங்கர் மராமரத்தைப் பிடுங்கி அவன் விட்ட பாணங்களைத் தடுத்தார். பின் மராமரத்தால் அடித்து அவனைக் கொன்றார்.

இலட்சக்கணக்கான அசுரவீரர்களும் சேனைத்தலைவர்களும் இறந்ததைக் கண்ட பானுகோபன் துயரம்கொண்டு தானே போருக்குச் சென்றான். தான் பூதப்படையை வெல்லாமென நினைத்துத் தேரில் ஏறிப் பூதப்படைக்குள் நுழைந்து இலட்சக்கணக்கான பாணங்களைத் தொடுத்தான். அதனால் பூதப்படையில் பல இறந்தனர். மிகுதியானோர் தப்பி ஓடி வீரவாகு தேவரை அடைந்தனர். இதைக்கண்ட உக்கிரன் என்னும் பூதப்படைத் தலைவன் தண்டாயுதத்தை எடுத்துப் பானுகோபனை எதிர்த்தான். பானுகோபன் உக்கிரன் மீது இலட்சக்கணக்கான பாணங்களைத் தொடுத்த போதும் அவை உக்கிரனைத் தாக்கவில்லை. எனினும் உக்கிரன்

மயங்கினான். அதைக்கண்ட தண்டி என்ற பூதத்தலைவன் ஒரு மலையை பெயர்ந்து பாணுகோபன்மீது வீச அதைப் பாணுகோபன் தனது அம்புகளால் தகர்த்தான். அப்போது அங்கு வந்த வீரகேசரி என்ற பூதப் படைத்தலைவன் பாணுகோபனை எதிர்த்து அம்புகளை எய்தான். அவனோடு வீரராந்தகர், வீரமாமகேச்சுரர், வீரதீரர் போன்றோர் சேர்ந்து ஆயிரக்கணக்கான பாணங்களை விட்டனர்.

அப்போது அங்கு வந்த வீரவாகுதேவர் பாணுகோபனை எதிர்த்தார். இருவருக்குமிடையில் கடும்போர் நடைபெற்றது. வீரவாகு தேவர் ஆயிரம் பாணங்களை விட சூரபன்மன் இலட்சம் பாணங்களை விட்டான். அவற்றையெல்லாம், வீரவாகுதேவர் அழித்தார். அவர் அழிக்க அழிக்கப் பாணுகோபன் இலட்சக்கணக்கான பாணங்களை விட்டான். அவற்றை அழித்த வீரவாகு தேவர் முருகனை நினைத்துக்கொண்டு பாணங்களை விடுக்க அவை சென்று பாணுகோபனைத் தாக்கின. அதனால் அவன்நிலை குலைந்தான். அதைக்கண்ட அசுரர்கள் பாணுகோபனைச் சூழ்ந்து நின்றனர். சிறிது நேரத்தில் தன்னைத்திடப்படுத்திய பாணுகோபன் வீரவாகுதேவரோடு உக்கிரமாகப்போர் செய்தான். அப்போது வீரவாகு தேவர் விட்ட அம்பு ஒன்று பாணுகோபனின் வில் நாணை அறுத்தது. அடுத்தடுத்து வந்த பாணங்கள் பாணுகோபனைக் களைப்படைய வைத்தது. அதனால் அவன் மாயமாக மறைத்து விட்டான். அவன் தனது அரண்மனைக்குச் சென்று அவமானம் தாங்கமுடியாது மறைந்திருந்தான். தூதுவர்கள் சூரபன்மனிடம் சென்று பாணுகோபன் வீரவாகு தேவரின் தாக்குதலைச் சமாளிக்க முடியாது. மாய உருக் கொண்டு மறைந்ததைச் சொல்ல, சூரபன்மனுக்கு கோபம் அதிகரித்தது. மறுநாள் தானே சென்று போரிடவேண்டுமென்று தீர்மானித்தான்.

இரண்டாம் நாள் அதிகாலை வேளையில் சூரபன்மன் தனது சேனைகளுடன் ஆகாயமார்க்கமாகச் சென்று கொண்டிருந்ததை அறிந்த முருகப்பெருமான் தேரில்

ஏறிப்பூதகணங்கள் சூழ அசுரரது போர்க்களத்தை அடைந்தார். அப்போது சிங்கமுகனுடைய அதிசூரன் என்ற மகன் இரண்டாயிரம் குதிரைகள் பூட்டிய தேரில்



வந்து பூதகணகளைத் தாக்கி அழித்தான். அதைக்கண்ட உக்கிரர் என்ற பூதப்படைத் தலைவர் அதிசூரனை எதிர்த்தார். அவனது தேரை அழித்தார். உடனே அதி சூரன் வேறொருதேரில் ஏறிப் போரிட, உக்கிரர் அதையும் அழித்தார். அதனால் கோபமுற்ற அதிசூரன் அக்கினியை ஏவினான். அதைக்கண்டு அஞ்சாத உக்கிரர் முருகனைத் தொழுதபடி அப்பாணத்தை விழுங்கினார். அதனால் அதிசூரன் யமப்படைக்கலத்தையும், வருணப்படைக்கலத்தையும் ஏவ உக்கிரர் அவற்றையும் விழுங்கினார். அதைக்கண்ட ஆதிசூரன் அதிசக்தி வாய்ந்த பிரமப்படைக்கலத்தை ஏவ, உக்கிரர் அதையும் விழுங்கினார். அதனால் கோபம் கொண்ட அதிசூரன் அதிசக்தி வாய்ந்த சிவப்படைக்கலத்தை ஏவினான். அது நஞ்சையும், பாம்புகளையும், யமனையும், பேய்களையும், அக்கினியையும் உண்டாக்கியது. அதக்கண்டு சகல அண்டத்தவர்களும் நடுநடுங்கினர். அதைக்கண்ட உக்கிரர் தனது கைகளில் இருந்த ஆயுதங்களை எறிந்துவிட்டு நிராயுதபாணியாகச் சிவனை நினைத்து நமசிவாய மந்திரத்தை ஓத அப்படைக்கலம் திரும்பச் சென்று அதிசூரனை அடைந்தது. அதன்பின் உக்கிரர் ஒரு தண்டாயுதத்தால் அதிசூரனைத்தாக்க அவன் இறந்து நிலத்தில் விழுந்தான்.

ஆதிசூரன் இறந்ததைக் கண்ட தாரகாசுரனின் மகன் அசுரேந்திரன் வெகுண்டெழுந்து போர் செய்தான். அவனது தாக்குதலால் பூதர்கள் பலர் இறந்து போனார்கள். பூதப்படைத் தலைவர்கள் பலர்படுகாயமுற்றனர். அதைக்கண்ட சிங்கர் அசுரேந்திரனோடு கடுமையாகப் போர் செய்தார். அசுரேந்திரனது பாணங்கள்

சிங்கரைத்தாக்கின. எனினினும் சிங்கர் தனது பாணங்களால் அசுரேந்திரனின் தேரை உடைத்தார். அத்துடன் அசுரேந்திரனின் வில் நாணையும் அறுத்தார். அதனால் கோபம் கொண்ட அசுரேந்திரன் ஆயிரம் பாணங்களை விட அவை சிங்கரின் மார்பில் பாய்ந்தன. அதனால் அவர் மயங்கிச் சாய்ந்தார். அதைக் கண்ட வீரவாகு தேவர் அசுரேந்திரனோடு போரிட அசுரேந்திரன் வீரவாகு தேவரின் வில் நாணை அறுத்தான். உடனே வீரவாகு தேவர் தனது வாளை எடுத்து அசுரேந்திரனது தலையைத் துண்டித்தார். அசுரேந்திரன் மரணமடைந்ததைக் கேள்விப்பட்ட அசுரர் சிதறி ஓடினார்கள்.

அதைக்கண்ட பாணுகோபன் அவ்விடத்திற்கு வந்து இலட்சக்கணக்கான பாணங்களை விடுத்தான். அவற்றின் ஓசை பயங்கரமாக இருந்தமையால் பூதகணங்கள் சிதறி ஓடின. ஆயிரக்கணக்கான பூதகணங்கள் மடிந்தன. பூதப்படைகளின் சேனாதிபதிகள் பலர் கடுங்காயங்களுக்குள்ளாகி மயங்கினர். பூதப்படையின் பெரும் வீரர்களான வீரமாத்தாண்டர், வீரமகேந்திரர், வீரமாமகேச்சுரர், வீரகேசரி போன்றோர் சூரபன்மனுடன் மோத அவன் அவர்களோடு கடுமையாகப் போராடி அவர்களைக் காயப்படுத்தி மயக்கமடையவைத்தான். தேவர்கள் பயத்தால் நடுங்கினர். அசுரசேனை பூதப்படைக்களைக் கொன்று குவித்தது. விட்டுணுவும் பிரமாவும் செய்வதறியாது திகைத்தனர்.

அப்போது சூரபன்மனின் அருகே வீரவாகு தேவர் வந்தார். அவரைக்கண்டதும் தூதுவனாக வந்து பலரைக் கொன்று வீரமகேந்திரபுரியை அழித்த இவனைக் கொல்வேன் என்று நினைத்து மிக்க கோபத்துடன் சூரபன்மன் வீரவாகு தேவரைத் தாக்கத் தொடங்கினான். அவர்களிருவரது நாண்களின் சத்தம் எல்லா அண்டங்களையும் உலுப்பியது. சூரபன்மன் வீரவாகு தேவரது தேர்ப்பாகனைகயும்,குதிரைகளையும்,தேரையும் கணநேரத்தில்அழித்தான். அதனால் வீரவாகு தேவர் பிறிதொரு தேரில் ஏறி வந்து வாயுப்படைக் கலத்தையும்,

அக்கினிப்படைக்கலத்தையும் ஏவினார். சூரபன்மன் அதைக்கண்டு தான் பாணங்களை ஏவாது நின்றான். அப்படக்கலங்கள், செயலிழந்தன. அதனால் வீரவாகு தேவர் வருணப்படையையும், திருதிப்படையையும் ஏவ அவை சூரபன்மனைத் தாக்கின. அதன் பின் மாயப் படையையும் அசுரப்படையையும் விடுத்தார். அவை சூரபன்மனைத் தாக்காது பொடிப்பொடியாயின. அதனால் திகைப்படைந்த வீரவாகுதேவர் பிரமப்படைக்கலத்தையும் விட்டுணுப் படைக்கலத்தையும் விடுத்தார். அவையும் சூரபன்மனின் அருகே சென்று எரிந்து சாம்பலாகின. அதனால் வீரவாகுதேவர் சிவப்படைக்கலத்தை ஏவினார். சூரபன்மனும் சிவப்படைக்கலத்தை ஏவ இரண்டும் சண்டையிட்டுத்தகர்ந்தன. அதனால் சூரபன்மன் முத்தலையுடைய பதினைந்து பாணங்களை ஏவி வீரவாகு தேவரின்வில்லை உடைத்தான். அதைக்கண்ட முருகப்பெருமான் சூரபன்மனின் அருகே தனது தேரைக் கொண்டு வந்து நிறுத்தினார். அவரைக் கண்ட சூரபன்மன் சொன்னான்,‘‘இதுவிளையாட்டுத்திடல் என்று நினைத்து என்னுடன் ஓடிப்பிடித்து விளையாட வந்தாயா….? சிறுவனே! சகல அண்டங்களையும் ஆளும் மாவீரன் நான். எனது பெயரைக் கேட்டாலே அண்டங்கள் யாவும் நடுங்கும். அப்படியிருக்க பால்மணம் மாறாத சிறுவனான நீ எதற்காக என்னிடத்தே வந்தாய். எனது மூச்சுக்காற்றுப்பட்டாலே நீயும் உனது தேரும் ஆகாய மார்க்கமாகப் பறந்து செல்லும். அதனால் நான் உன்னை மன்னிக்கிறேன் சென்றுவிடு’ என்றான்.

முருகன் கலகலவென்று சிரித்துவிட்டுச் சொன்னான்,‘‘என்னைச் சிறுவன் என்று நினைக்காதே. தேவர்கள் எல்லாரும் எனது தந்தையை நோக்கித் தவம் செய்ததால் உன்னை அழிக்கவென்று என்னைப் பெற்றெடுத்தார் என் தந்தை. இதை நீ அறியவில்லையா…? வீரன் என்பவன் தகுதிதராதரம் பாராது எதிரியுடன் போரிடவேண்டும். நீ என்னைச் சிறுவன் என்று இகழாதே. மோதிப் பார் யாவும்

உனக்குப் புரியும்'' என்றான் முருகன். இதைக்கேட்ட சூரபன்மன் ஆகாயத்தைத் தொடுமளவு ஒரு வில்லை எடுத்து முருகனை நோக்கிப் பல்லாயிரம் பாணங்களைத் தொடுத்தான். அவற்றையெல்லாம் ஒரு கணப்பொழுதில் அழித்த முருகனைக்கண்டு கோபம் கொண்ட சூரபன்மன் ஒரு முத்தலைச்சூலத்தை எடுத்து ஏவினான். முருகன் அதை அழித்ததோடு அவனது வில் நாணை அறுத்துக் கிரீடத்தையும் உடைத்தார். அதைக்கண்ட லட்சோபலட்சம் அசுரசேனைகள் முருகனைச் சூழ்ந்து நின்று பாணமழை பொழிந்தனர். அதைக்கண்ட முருகன் சங்கராயுதத்தை எடுத்து வீச அச் சக்கரம் சுழன்று சுழன்று அசுரர்களது பாணங்களை அழித்து அவர்களது அங்கங்ளையும் துண்டித்தது. அத்துடன் சூரபன்மனது தேரையும் உடைத்து அதனால் சூரபன்மன் நிராயுதபாணியாக நிலத்தில் நின்று பிரம்மப்படைக்கலத்தை வருவித்து அதை விடுத்தான். அதை முருகனது வேல் விழுங்கியது. தனியனாக நின்ற சூரபன்மனைப்பார்த்து முருகப்பெருமான் கூறினார்,''தேவர்களை விடுவிக்கும்படி எனது தூதுவனை அனுப்பினேன். நீ விடுதலை செய்யவில்லை. அதனால் நான் வந்தேன். இப்போதும் நீ தேவர்களை விடுதலை செய்தால் உன்னை மன்னிப்பேன்'' என்றார். முருகனை வெல்ல முடியாது என்று உணர்ந்த சூரபன்மன்,''மறைந்து சென்று படையைத் திரட்டி வந்து முருகனை வெல்வோம்'' என நினைத்து மாயமாய் மறைந்து போனான்.

சூரபன்மன் மறைந்ததும் செய்திகளைச் சொல்ல வந்த உளவாளிகள் பாணுகோபனிடம் வந்து அவனைப்பணிந்து விட்டுச் சொன்னார்கள்''அரச குமாரனே, தங்கள் தந்தை முருகனோடு போர் செய்தபின் மறைந்ததனால் ஆத்திரங்கொண்ட பூதர்கள் நகரின் வடக்குப்பாகத்தை அடைந்து வடக்குக்கோபுரவாசற்காவலனான அதிகேரனைக் கொன்று எம்சேனைகளை அழித்து அங்கு நின்ற சிகரியைப் பிடுங்கி கடலில் வீசிவிட்டு வடதிசை மதில் முழுவதையும் உடைத்து விட்டார்கள்'' என்றனர்.

பாணுகோபன் கதிகலங்கி வடக்கு வாசலைக் காக்க மகாயன் என்ற அரக்கனை அனுப்பி வைத்தான்.

மூன்றாம் நாள் அதிகாலையில் எழுந்த பாணுகோபன் தனது பாட்டியான மாயையிடம் சென்று அவளைத் தொழுது முருகனோடு போர் செய்து தோற்றமையால் அவனை வெல்வதற்கான வழியைக் கூறும் படிகேட்டான். அதைக்கேட்ட மாயை தனது முழுச்சக்தியையும் பயன்படுத்தி ஒரு மாயப்படைக் கலத்தைச் செய்து கொடுத்தாள்.

அப்படைக் கலத்தின் மூலம் தனக்கு வெற்றி கிடைக்கும் என்ற நம்பிக்கையில் பாணுகோபன் தேரில் ஏறி அசுரப்படைகள் சூழப்போர்க்களத்திற்குச் சென்றான். வீரவாகுதேவர் முருகனை வணங்கி ஆசி பெற்றுப் போர்க்களத்திற்கு வந்தார். வீரவாகு தேவரைக்கண்ட பாணுகோபன் இன்று இவனைக் கொல்வேன் எனக்கூறி அம்புகளை விட்டான். வீரவாகு தேவர்விட்ட அம்புகள் பாணுகோபனது தேர்ப்பாகனைக் கொன்று அவனது தேரையும் அழித்தது. அதனால் பாணுகோபன் மற்றொரு தேரில் ஏறி வந்து வருணப்படைக்கலத்தை விட்டான். அதைக்கண்ட வீரவாகு தேவர் நாகப்படைக்கலத்தை ஏவ பாணுகோபன் கருடப்படைக்கலத்தை விட்டான். உக்கிரமாக வீரவாகு தேவர் போர் புரிந்தபோது அதைச் சமாளிக்க முடியாத பாணுகோபன் மாய உருவெடுத்து மறைந்துபோனான்.

மறைந்து நின்ற பாணுகோபனுக்கு வீரவாகுதேவரைக் கொல்லாது செல்வது துக்கத்தைக் கொடுத்தது. அதனால் மாயை கொடுத்த மாய அத்திரத்தை எடுத்து,“நீ சத்தமில்லாமல் சென்று பூதப்படைகளையும், வீரவாகுதேவரையும் மயக்கி அவர்களது உயிரை எடுத்து விடு” என்று கூறி அதை விடுத்தான். அவ் அத்திரம் சத்தமில்லாமற் சென்று பூதகணங்களையும் வீரவாகு தேவரையும் மயக்கி அப்படியே அள்ளிச் சென்று சமுத்திரத்தில் கொட்டியது. இதை மாய உருவில் ஆகாயத்தில் நின்ற பாணுகோபன் பார்த்து மிக்கமகிழ்ச்சி கொண்டு வீரவாகுதேவர் ஒழிந்தான் என

மகிழ்ந்தான். அதை அவன்சூரபன்மனுக்குச் சொல்லச் சூரபன்மன் மட்டில்லாத மகிழ்ச்சியடைந்தான்.

பாணுகோபன் மாயப்படைக்கலத்தைவிடப் பூதகணங்களும் வீரவாகுதேவரும் சமுத்திரத்தை அடைந்த செய்தியைக் கண்ட தேவர்கள் ஓடிச் சென்று முருகனிடம் முறையிட்டார்கள். உடனே முருகப்பெருமான் தனது வேற்படையை எடுத்து சமுத்திரத்தில் தத்தளிக்கும் வீரவாகு தேவரையும், தேவர்களையும் மீட்டு வரும்படி கூற வேல் சென்று அவர்களை மீட்டு வந்து முருகனிடம் அவர்களை ஒப்படைத்தது.

வேற்படைமுன்னே செல்ல வீரவாகுதேவரும் அவரது தம்பிமாரும் பூதசேனைகளும் அவரின் பின்னே சென்றன. மாய உருவை உருவாக்கி ஆகாயத்தில் மறைந்திருந்து தம்மைத்தாக்கிய பாணுகோபனைக் கொல்லாது முருகப் பெருமானைத் தரிசிக்கமாட்டேன் என்ற எண்ணத்துடன் வீரவாகுதேவர் பாணுகோபனை எங்கும் தேடினார். வானத்தில் கூட அவன் இல்லை. அப்போது மாயவளிடம் தோன்றியவனும் யமனிடம் முத்தலைச் சூலத்தைப் பெற்றவனும், வருணனைச் சிறை செய்தவனுமான புலிமுகன் என்பவன் மேற்குத்திசையில் காவலாக நின்றான். அவனைச் சுற்றிப் பல்லாயிரம் அசுரசேனைகள் நின்றன. சிங்கர் தலைமையில் அங்கு வந்த பூதசேனை புலி முகனோடு நின்ற அசுரசேனையை அங்கு நின்ற பெருமரங்களைப் பிடுங்கியும், மலைகளைத் தூக்கிவீசியும் தாக்கப்பலஅசுரவீரர்கள் மாண்டனர். அதைக்கண்ட புலிமுகன் பூதப்படைகளைத்தாக்கிய படிமுன்னேறச் சிங்கர் புலிமுகனின் மார்பில் முத்தலைச் சூலத்தால் குத்த அவன் விலகிச் சிங்கரின் மார்பில் குத்தினான். அதிலிருந்து தப்பிய சிங்கர் புலி முகனைக் காலால் உதைத்துக் கொன்றார் அதைப்பார்த்து மகிழ்ந்த வீரவாகு தேவர் சிங்கரைப் பாராட்டினார்.

வீரவாகுதேவர் அக்கினிப் படைக்கலத்தை எடுத்து ஏவி அந்நகர் முழுவதையும் அழிக்கும்படி கட்டளையிட்டார். அக்கினிஅந்நகரைக் கொளுத்தியது. அதைப்பார்த்த ஒற்றர்களால் சூரபன்மனிடம் சென்று சொன்னார்கள். சூரபன்மன் கடுங்கோபங்கொண்டு,''உடனே வானுலகம் சென்று மேகங்களை அழைத்து வாருங்கள்'' என்றான். தூதுவர்கள் வானுலகம் சென்று மேகங்களை அழைத்து வர சூரபன்மன் அவற்றைப் பார்த்து மகேந்திரபுரியை எரிக்கின்ற அக்கினியை அணையுங்கள்'' என்று கூற மேகங்கள் வீரவாகுதேவருக்குப் பயந்தபோதும் சூரபன்மன் தம்மைக்கடுமையாக வருத்துவானென எண்ணி மழையைப் பொழிந்தன. அதைக்கண்ட வீரவாகு தேவர் உறிஞ்சிக் கலத்தைச் செலுத்தினார். அப்படை மேகத்தில் இருந்த முழு நீரையும் குடித்தது. அதை ஒற்றர்கள் மூலம் அறிந்த சூரபன்மன் வீரவாகுதேவரைக் கொன்றபின் முருகனைக் கொல்வேன் எனச் சபதமிட்டுத் தேரைக் கொண்டு வரும்படி பணித்தான்.

சூரபன்மன் தேரைக் கொண்டுவரும்படி பணித்ததும் சூரபன்மனின் மகனாகிய இரணியன் வந்து சூரபன்மனை வணங்கிய பின் சொன்னான்,''சிவபெருமான் வலியவர் அவரை வெற்றி கொள்ளயாராலும் முடியாது. பிரமா, விட்டுணுபோன்றோர் தாம்தாம் பெரியவர்களென்று எண்ணிச் சண்டையிட்ட போது அவர்களது கர்வத்தை அடக்கியவர். தக்கன் அவரை மதியாது வேள்வி செய்ய வீரபத்திரரைக் கொண்டு தக்கனைக் கொன்றவர். யமனைக் காலால் உதைத்தவர். அப்படியானவர் அசுரரைக் கொல்லவென முருகனைத் தோற்றுவித்துப் போர் செய்யும்படி பணித்துள்ளார். முருகன் போர் செய்யுமுன் தூதுவனை அனுப்பிச் சமாதானம் பேசினான். நீ கேட்கவில்லை. முருகனால் அசுரர்கள் முழப்பேரும் அழிக்கப்படுவர். தற்செயலாக முருகன் தோற்றால் சிவபெருமானே நேரில் வருவர் அதனால் சமாதானம் பேசுவது தான் நல்லது'' என்றான்.

அதைக்கேட்டுக் கோபித்த சூரபன்மன்,‘‘இப்படிப்பேச உனக்கு வெட்கமாக இல்லையா. ஒரு சிறுவனுக்கு அஞ்சி நாம் சமாதானம் பேசலாமா…? சிவபெருமான் யாராலும் என்னை வெல்லமுடியாத வரத்தை எனக்குத் தந்துள்ளார். இதற்குப் பின்பும் பேசினால் உன்னைக் கொல்வேன்’’ என்று கர்ச்சித்தான். அதைக்கேட்ட இரணியன் மறு பேச்சுப்பேசாது தனது அரண்மனைக்குச் சென்று போருக்குச் செல்லத்தாயாரானான். இரணியன் நால்வகைப்படைகளுடன் போர்க்களத்திற்கு வந்தான். அவனைக் கண்ட வீரவாகுதேவர்,‘‘இவன் பெரும்வீரன், மாயங்கள் செய்வதில் வல்லவன்,‘‘எனக்கருதிப் பூத சேனைகளை அசுரர்களுடன் போர்புரியுமாறு கட்டளையிட்டு விட்டுத் தான் இரணியனோடு கடும் யுத்தம் செய்தார். அவரது பாணங்கள் சூறாவளியைப் போலச் சென்று அரக்கர்களைத் தாக்கின. இரணியனது பாணங்கள்பூதகணங்களை நிலை குலையச் செய்த போது, பூதப்படைத்தலைவரான நீலர் என்பவர் கண்டு மரங்களையும் மலைகளையும் பெயர்த்து அசுரர்கள் மீது வீசினார். இரணியன் சளைக்காது தாக்கப் பூதப்படை அழிந்தது. அதனால் கோபம் கொண்ட நீலர் தனது கைகளால் இரணியனின் தேரைத் தூக்கித் தரையில் அடித்து நொருக்கினார். இரணியன் நிலத்தில் விழுந்தான். நீலர் தனது காலால் அவனது நெஞ்சை மிதித்தார். அவனது வாயால் குருதி கொப்பளித்தது. அவன் மாயமாக வேறொரு உருவத்தை எடுக்க முற்பட்ட போது அவனருகே அவனைப் போன்ற ஒரு உருவம் ஆயுதங்களுடன் நின்றது. அம்மாய உருவத்தைக்கண்ட நீலர் தனது தண்டத்தினால் அதன் தலையில் அடிக்க அது வானில் மறைந்தது. பின் அது பல ஆயிரமாகத்

தோற்றம் பெற்றது. அதைக்கண்ட நீலர் இது இரணியனின் மாயவேலையென நினைத்தார். நிலத்தில் விழுந்து கிடந்த இரணியன் எழுந்ததும் நீலர் மயக்கமடைந்தார். அதைக்கண்ட வீரவாகு தேவர் அங்கு வந்து இரணியரின் தேர்ப்பாகனைக் கொன்று தேரை அழித்து அவனது கிரீடத்தையும் உடைத்தார். அதைக்கண்ட இரணியன் தான் இனித்தப்பமாட்டேன் என்று நினைத்து மாய உருவெடுத்து வானில் பறந்து சென்று சமுத்திரத்துள் மறைத்தான்.

அதையறிந்த சூரபன்மன் பெருங்கோபங்கொண்டு இரணியனைத் திட்டினான். அப்போது சூரபன்மனது இன்னொரு மகனான அக்கினி முகாசுரன் தந்தையைக் காண வந்தான். நடந்தவற்றைக்கேட்டுக் கொதித்தெழுந்த அக்கினி முகாசூரன் வீரவாகுவைப் பிடித்து வருவேன் என்று கூறி அசுரப் படைகளுடன் வீரவாகுதேவரைத் தேடிச் சென்றான். பூதப்படையைக் கண்டதும் அக்கினி முகாசூரன் பூதப்படையை அழித்தான். பூதப்படை சிதறி ஓடியது. அதைக்கண்ட வீர புரந்திரர் என்ற பூதப்படைத் தளபதி கையிலுள்ளவில்லை வளைத்து அம்புகளை ஏவி அசுரப் படைத்தலைவர்களின் தேர்களை அழித்தார். பலரின் தலைகளையும் வெட்டினார். அதைக் கண்ட அசுரர்கள் லட்சக்கணக்கில் திரண்டு வீரபுரந்திரரைத் தாக்க அவரின் உடலெங்கும் அம்புகள் தைத்தால் இரத்தம் பெருகியது. இருப்பினும் அவர் தளராது அம்பு மழை பொழிந்தமையால் அசுரர்படை சிதறி ஓடியது. அதைக்கண்ட அக்கினி முகாசூரன் வீரபுரந்தாரின் தேரை உடைத்து வில்நாணையும் அறுத்தான். வீரபுராந்தர் விட்ட அம்புகள் யாவும் அக்கினி முகாசூரனின் உடலில் பட்டுத்தெறித்தனவே தவிரத் தைக்கவில்லை. அவன் சிவப்படைக்கலத்தை ஏவ அது பூதகணங்களின் ஆயுதங்களை விழுங்கியதோடு

பூதப்படையையும் அழித்தது. அதைக்கண்ட வீரவாகுதேவர் அக்கினிமுக சூரனுக்கு முன்னே வந்தார். அவர் வந்ததும் அக்கினி முகன் பாணங்களைத் தொடுத்தான். அதை வீரவாகுதேவர் அழிக்க அக்கினிமுகன் வீரவாகு தேவரின் நெற்றியில் படும்படி ஆயிரம் பாணங்களை விட்டான். அவற்றையும் அக்கினிமுக சூரனது தேரையும் வீரவாகுதேவர் அழிந்தார். அதைக்கண்ட அக்கினி முகாசூரன் ஒரு வாயுப்படைக்கலத்தை விட்டான். அதன்பின்பு யப்படைக்கலத்தையும், சூரியப்படைக்கலத்தையும் விட்டான். வீரவாகுதேவர் அவற்றை இலகுவாக அழித்து நஞ்சுகலந்த அம்புகளை விட்டார். அவை அக்கினிமுக சூரனின் நெஞ்சைப் பிளந்தன. குருதி ஆறாகப் பெருகியது. அப்போது அவன் காளியைத் தொழுது தனக்குதவி செய்யுமாறு கோர, காளி தனது உக்கிரத் தோற்றத்துடன் சிங்க வாகனத்தில் வந்து பூதகணங்களுடன் போரிட்டாள். சூலங்களை அவள் வீசப் பூதகணங்கள் சிதறி ஓடின. காளி ஏவிய சூலங்களை வீரவாகு தேவர் அழித்தார். அதைக்கண்ட காளி வீரவாகு தேவரின் அருகிற்சென்று இன்னொரு சூலத்தை விட்டாள். அதையும், வீரவாகுதேவர் அழித்தார். அதனால் கோபம் கொண்ட காளி உக்கிரமான தோற்றத்துடன் வீரவாகு தேவரைக் கொல்ல முயன்றபோது வீரவாகுதேவர் காளியினது எட்டுக்கைகளையும் தன்கையாற் பிடித்து மற்றக்கையால் மார்பில் ஓங்கிக்குத்த அவளது மார்பு கிழிந்தது. பூமியில் விழுந்தாள். அவளது பலம்முழுவதும் போனமையால் அவளால் எழுந்திருக்க முடியவில்லை. அவள் வீரவாகு தேவரைப்பார்த்து,‘‘அவர்களுக்குநான் வரம் கொடுத்தமையால் ஆராயாது வந்து விட்டேன். முருகப் பெருமானின் சக்தியை இப்போது தான் உணர்ந்தேன். அசுரர்கள் அனைவரும் அழிவார்கள்’’ என்று கூறி மறைந்தாள்.

அதைக்கண்ட அக்கினி முகச்சூரன்மிக்க கோபம் கொண்டு வீரவாகு தேவரின் அருகேவந்து வீரவாகுதேவரோடு போர் செய்தான். அவன் பிரமப் படைக்கலத்தை ஏவ, வீரவாகுதேவர் வீரபத்திரப்படைக்கலத்தை விட்டார். அதைக்கண்ட பிரமபடைக்கலம் அதை எதிர்க்காது வணங்கி வழிவிட வீரபத்திரப்படைக்கலம் அவனது தலையைத் துண்டித்துப் பொடிபொடியாக்கிவிட்டு வீரபாகு தேவரிடம் சென்றது. அக்கினி முகச்சூரன் இறந்ததும் அசுரர்கள் தப்பித்தலை தெறிக்க ஓடினார்கள். அன்றைய போர் முடிந்த பின் வீரவாகுதேவர் தனது தம்பிமார் ஏழுபேரையும் தேடினார். அவர்களைக் காணவில்லை. அப்போது அங்குவந்த உக்கிரர்,‘‘உங்கள் தம்பிமார் ஏழுபேரையும் அக்கினி முகச்சூரன் கொன்று விட்டான்’’ என்று சொன்னார். அதைக்கேட்டுப் பெருந்துயரடைந்த வீரவாகுதேவர் பின்பு ஒருவாறு தேறித் தனது தம்பிமார்களை உயிர்ப்பிக்கும்படி ஒரு கடிதம் எழுதி அதை வில் நாணில் பூட்டி முருகப் பெருமானை நினைத்து அதைவிட்டார். அவ் அம்பு யமமகாராசனின் காலடியில் சென்று விழுந்தது. அதைப் படித்த யமமகாராசன் தனது தூதுவர்கள் அவர்களைக் கவரவில்லையென அறிந்து அவர்கள் கைலாயமலையில் இருப்பதாக அறிந்து எருமைக்கடாவிலேறிக் கைலாய மலையை அடைந்தான். அங்கு வீரவாகுதேவரின் தம்பிமார் ஏழுபேரும் பூதகணங்களும் இருந்தனர். அப்போது வீரவாகுதேவர் அங்குவந்து தனது தம்பிமார் அங்கிருப்பதைக் கண்டு மகிழ்ந்தனர்.

அக்கினி முகச்சூரன் இறந்ததும் சூரபன்மன் தனது குமாரர்களான மூவாயிரம் பேரையும் போருக்கு அனுப்பினான். போர்க்களத்திற்குச் சென்ற மூவாயிரரைப் பூதகணங்கள் பயங்கரமாக எதிர்த்தனர். அவர்கள் சூலங்கள், தண்டங்கள், சக்கரங்களால் கடுமையாகத் தாக்கினர். மூவாயிரவர்

அதைக்கண்டு கடுங்கோபம் கொண்டு பலமாக எதிர்த்தனர். அதனால் பூதப் படைக்குப் பெரும் அழிவு ஏற்பட்டது. அதனால் பூதப்படைத் தலைவர்களான வாசயர், சயர், இடபர், கரவீரர், ஆதிரோரர் போன்றோர் வீரவாகு தேவரிடம் சென்று தாம் மூவாயிரவருடன் போர்செய்ய அனுமதிக்கும்படி வேண்டினர். அதற்கு வீரவாகு தேவர் சம்மதிக்க அவர்கள் பெரும் பூத சேனையுடன் போருக்குப் புறப்பட்டனர்.. மூவாயிரவர் லட்சக்கணக்கான அம்புகளை ஏவ அவற்றைப் பூதப்படைத்தலைவர்களும் சேனையும் அழிந்து ஒழித்தது. இருப்பினும் மூவாயிரவரின் கடுந்தாக்குதலால் பூதசேனை நலிவுற்றது. அதைக்கண்ட விசபர் என்ற பூதப்படைத்தலைவர் கோபித்து பாணமழை பொழிந்தார். அதனால் மூவாயிரவரின் அவயங்கள் துண்டிக்கப்பட்டன. இருந்தபோதும் மூவாயிரவர் பிரமாவிடம் பெற்ற வரத்தின் காரணமாக அவை பொருந்தின. அதனால் எதுவும் செய்ய முடியாதவிசபர் முருகப் பெருமானை வேண்டினார். அப்போது விசபருக்கு மட்டும் தெரியும் படியாக ஆகாயத்தில் தோன்றிய முருகப்பெருமான் மூவாயிரவரை அழிக்க உனக்கு ஒரு ஆயுதம் தருகிறேன் எனக் கூறிவைரவப்படைக்கலத்தை உருவாக்கி விசபருக்குக் கொடுத்தார். அதை விசபர் பிரயோகித்ததும் மூவாயிரவர்கள் ஒரு கணப் பொழுதில் மாண்டனர். அதைக்கண்டு தேவர்கள் பூமழை பொழிந்தார்கள்.

மூவாயிரம் பிள்ளைகளையும் ஒரு நொடிப்பொழுதில் இழந்ததைச் சூரபன்மனால் தாங்கிக் கொள்ள முடியவில்லை. அடுத்து என்ன செய்யலாமென்று கூட அவனால் தீர்மானிக்க முடியவில்லை. அப்போது அங்குவந்த தருமகோபன் என்ற மந்திரி வந்து சூரபன்மனை வணங்கிவிட்டுச் சொன்னான்,“வேந்தர்களுக்கெல்லாம் வேந்தே. நான் எனது யானையிற் சென்று வீரவாகுதேவரை அழித்து மீள்வேன். விடைதாருங்கள்” என்றான்.

சூரபன்மனிடம் விடைபெற்று வந்த தருமகோபனுக்கு பூதகணங்களையும் வீரவாகு தேவரையும் பார்க்கப் பயமாக இருந்தது எனினும் வீராவேசத்துடன் போர் செய்தான். தருமகோபனின் யானை கோபங்கொண்டுக் பூதகணங்களை காலால் மிதித்தும் தும்பிக்கையாலும் வாயாலும் அடித்தும் பலரைக் கொன்றது. யானையினது அட்டகாசத்தைப் பூதகணங்களால் சமாளிக்க முடியாததைக் கண்ட வீரமார்த்தாண்டர் வில்லை வளைத்து யானையின் மீது ஆயிரக்கணக்கான அம்புகளை விட்டதோடு தருமகோபனையும் தாக்கினார். பூதப்படை பின் வாங்கிய போது வீரவாகு தேவர் வந்து ஒரு வேற்படையை எடுத்து விட அது தருமகோபனின் மார்பில் பாய்ந்தது. அப்போது தருமகோபனின் யானை வீரவாகு தேவரைக் கொல்லவந்தது. அது வீரவாகுதேவரின் தேரை உடைத்து அவரைத் தாக்கிய போது வீரவாகு தேவர் யானைவைத் தூக்கி நிலத்தில் அடித்தார். யானையால் விழுந்த தரும கோபன் ஒரு தண்டை எடுத்து வீரவாகுதேவரைத் தாக்க வீரவாகு தேவர் அதைத்தடுத்து இன்னொரு தண்டால் தருமகோபனின் மார்பில் அடிக்க தருமகோபன் இறந்தான். முன்பே வீரவாகுதேவரின் தாக்குதலால் யானையும் இறந்துபோனது.

அவற்றை அறிந்த சூரபன்மன் மிக்க துயரங்கொண்டு அடுத்து என்ன செய்யாலாமெனச் சிந்தித்தான். அப்போது அங்குவந்த பாணுகோபன்,"நால்வகைச் சேனைகளும் போரிடத்தயார் நிலையில் உள்ளன. நான் சென்று மாயங்கள் புரிந்து போராடிவீரவாகுவையும் பூத சேனைகளையும் அழிப்பேன்" என்று கூறிச் சூரபதுமனிடம் ஆசி பெற்றுப் போர்க்களத்திற்குச் சென்றான். பூதப்படையினர் அசுரர்களைக் கொடூரமாகச் தாக்கியழித்துக் கொண்டிருந்தனர். பாணுகோபன் வந்து போராடத்தொடங்கியதும் அவனது பாணங்களை எதிர்கொள்ள முடியாது பூதப்படை சிதறி ஓடியது. அதைக்கண்ட வீரவாகு தேவர் தேரை அவ்விடத்திற்குக் கொண்டு சென்று முருகனைப் பிரார்த்தித்து விட்டுப்பாணங்களைத் தொடுத்தார். அரக்கர்கள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்தெடுத்துத் தாக்கிய போதும் அவற்றால்

வீரவாகுதேவரின் பாணங்களை அழிக்க முடியவில்லை. அவரது பாணங்கள் அசுரர்களை அழித்தது. அதைக்கண்ட பானுகோபன் விரைந்து சென்று வீரவாகுதேவரைத் தாக்க, வீரவாகுதேவர் வில்லை வளைத்து ஆயிரம் பாணங்களைப்பூட்டி பானுகோபனை நோக்கி விட அவை பானுகோபனைத் தாக்கின. பானுகோபன் வீரவாகு தேவரின் வில்லை உடைத்தான். உடனே வீரவாகுதேவர் ஒரு வேலை எடுத்து பானுகோபனின் நெற்றியில் எறிந்தார். அது நெற்றியில் ஏற பானுகோபன் சரிந்தான். உடனே தாமதியாது வீரவாகுதேவர் அக்கினிப்படைக்கலத்தை விட்டார். பின் வாயுப்படைக்கலத்தை விடுத்தார். பானுகோபனும் அக்கினிப் படைக்கலத்தையும் வாயுப்படைக்கலத்தையும் விட்டான். அவற்றை வீரவாகுதேவரின் படைக்கலன்கள் அழிந்தன. அதனால் பானுகோபன் மாயமந்திரத்தை உச்சரித்து மாய உருப்பெற்று வீரவாகுதேவரின் அருகில் சென்று நாற்புறமும் தாக்கினான். உடனே வீரவாகுதேவர் ஞானாஸ்திரத்தை எடுத்து விடுத்தார். அது பானுகோபனின் மாய உருவை அழித்தது பானுகோபன் ஆகாயத்தில் மிதந்தான். உடனே வீரவாகுதேவரும் தேரோடு வானில் பறந்து சென்று ஆயிரக்கணக்கான பாணங்களால் பானுகோபனைத் தாக்கி அவனது தேரை அழித்தார். இருவருக்கும் இடையில் பெரும்போர் நடைபெற்றது. தேர்கள் பல உடைந்தன. பூதப்படைகள் இறந்தன. அசுரரும் இறந்தனர். பானுகோபன் லட்சக்கணக்கான பாணங்களை விடுத்து வீரவாகு தேவரின் தேரை உடைத்தார். அத்துடன் நஞ்சு கலந்த பாணங்களைச் செலுத்த வீரவாகுதேவர் பாணங்களை விட்டு அவனது கிரீடத்தை உடைத்தார். அத்துடன் அவனது வில்லையும் உடைத்தார். அதனால் கோபம் கொண்ட பானுகோபன் தனது வாளை உருவி வீரவாகுதேவரின் தோளில் வெட்டினான். வீரவாகுதேவர் முருகனைத்துதித்து விட்டு தனது வாளை எடுத்து பானுகோபனது வலது தோளைத்துண்டித்தார். அதன்பின் இடது தோளையும் தலையையும் துண்டித்தார். பானுகோபன் நிலத்தில் விழுந்து மரணமானான். அதை

வீரவாகுதேவர் முருகனுக்குத் தெரிவித்த போது முருகன்,‘‘நீ சுத்தவீரன். தேவரின் துயரைத் தீர்த்தவன். அதனால் வேண்டிய வரத்தைக் கேள்’’ என்று சொல்ல வீரவாகுதேவர்,‘‘சுவாமி அடியேன் எப்போதும் உங்கள் நாமத்தை நினைத்துக் கொண்டிருத்தல் வேண்டும்’’ என்றார்.

பாணுகோபன் இறந்ததைக் கேள்விப்பட்டு வேதனையால் துடித்த சூரபன்மன்,‘‘உடனே சென்று எனது தம்பியாகிய சிங்கமுகனை அழைத்து வாருங்கள்’’ என்று கட்டளையிட்டான்.

சிங்கமுகாசுரன் போருக்குப் புறப்பட்டான் என்ற செய்தியைக் கேட்ட தேவர்கள் அச்சமடைந்தனர். அவர்கள் முருகப்பெருமானைத்தரிசித்து,‘‘ஆயிரம் தலைகளையும் இரண்டாயிரம் கைகளையும் உடைய சிங்க முகாசூரன் ஆயிரம் அண்டங்களை வென்றவன். நினைத்தவுடன் நினைத்த மாயஉருவை எடுப்பவன். பூமியையும் ஏழு அண்டங்களையும் விண்ணுலகத்தையும் அதன் அங்கங்களையும் வாரி உண்டவன். அப்படியானவன் இன்று போர் செய்யவருகிறான். அவனோடு சமுத்திரம் போன்ற சேனையும் வருகிறது. அவனிடமிருந்து எம்மைக்காத்தருளல் வேண்டும்’’ என்றனர். அதைக்கேட்ட முருகப் பெருமான் வாயுவைப் பார்த்து,‘‘எனது தேரைக் கொண்டு வாருங்கள்’’ என்றார். அப்போது அருகின் நின்ற வீரவாகுதேவர்,‘‘சிங்கமுகாசூரனை நான் கொல்வேன். அதற்கான அனுமதியைத் தாருங்கள்’’ என்றார். அதற்கு முருகப்பெருமான் சம்மதிக்க வீரவாகு தேவர் இலட்சக்கணக்கான பூதகணங்களுடன் போர்க்களத்தை அடைந்தார்.

பூதகணங்களுக்கும் அசுரர்களுக்கும் இடையே பெரும்போர் மூண்டது. பூதப்படைத்தளபதியான சிங்கர் தனது தண்டினால் அசுரப் படையை அடித்து நொருக்கிச் சின்னாபின்னமாக்கினார். அப்போது தசமுகன் என்னும் ஓர் அரக்கப்

படைத்தலைவன் வந்து சிங்கரை வழிமறித்துக் கடுமையாகத் தாக்கினான். தசமுகன் அக்கினியைக் கக்கும் ஒருவேலை அனுப்ப சிங்கர் சக்கரப்படையை விடுத்தார். தசமுகன் கடுங்கோபம் கொண்டு ஒரு தண்டத்தை எடுத்து சிங்கரின் மார்பைத் தாக்க, சிங்கர் தனது கையால் தசமுகனின் மார்பில் அடிக்க வாயால் இரத்தம் பெருகத்தசமுகன் விழுந்து இறந்தான். அதனால் அசுரர்கள் சிதறி ஓடத் துன்முகன் என்றும் அரக்கன் தப்பி ஓடும் அசுரர்களை அழைத்துக் கொண்டு சென்று பூதர்களைத் தாக்கினான். பூதர்கள் கடுமையாகத் தாக்கியமையால் துன்முகன் ஆயிரக்கணக்கான மாய உருவங்களை எடுத்துப் பூதர்களைத் தாக்கினான். அதனால் பூதகணங்கள் நிலைகுலைய வீரவாகுதேவர் ஞானப் படைக்கலத்தை ஏவ அப்படைக்கலம் துன்முகனின் மாய உருவங்களை அழித்து அவனைத்துரத்தியது. அவன் உயிர்தப்பினால் போதுமென்று எண்ணி ஓடித்தப்பினான்.

துன்முகன் ஓடித்தப்பியதைக் கண்ட சிங்கமுகாசூரன் கோபத்துடன் பூதப்படையை நாலாதிசையிலும் கடுமையாகத்தாக்கினான். அவனது மூச்சுக்காற்று பூதப்படைகளை பின்னே தள்ளி நிலத்தில் விழுத்தியது. அவன் வாயால் ஊத அக்கினி வெளிப்பட்டது. பூதர்கள் மரங்களையும் மலைகளையும் பெயர்த்து வீச, சிங்கமுகாசூரன் பயங்கரமாகத் தாக்கினான். பூமி இருண்டது. அவன் நூற்றுக்கணக்கான பூதர்களை ஒவ்வொரு கைகளிலும் பிடித்துத் தூக்கி நிலத்தில் அடித்தான். ஆயிரக்கணக்கான பூதர்களைத் தூக்கிச் சமுத்திரத்தில் வீசினான். பலரைத் தூக்கி ஆகாய வெளியில் வீசினான். பலரைப் பிரமலோகம்வரை செல்லவீசினான். சிலரை விட்டுணுலோகத்திற்கும் சிலரை இந்திர லோகத்திற்கும் தூக்கிவீசினான். இவ்வாறு பலரை அக்கினி மண்டலத்திற்கும் வாயு மண்டலத்திற்கும் வீசினான். பலரைச் சித்திரவதை செய்து விளையாடுவான். காலால் உதைப்பான். இரண்டாகக் கிழிப்பான். இப்படி அவன் செய்யும் செயல்களைப் பொறுக்க முடியாத அழற்கண்ணன் என்னும் பூதப்படைத்தலைவர் கடுங்கோபம் கொண்டு ஒரு சூலத்தை

ஏவினார். அது சிங்கமுகாசூரனின் மார்பில் சிறுமுள்ளுப் போலத் தைத்தது. அதனால் வியப்படைந்தசிங்கமுகாசூரன் ஒரு தண்டத்தை வீச அது அழற்கண்ணணாருடைய மார்பைப் பிளக்க அழற்கண்ணணார் சோர்வடைந்தார். அதைக்கண்ட சுமாலி, தண்டி ஆகிய பூதப்படை வீரர்கள் எதிர்க்க அவர்களைச் சிங்கமுகாசூரன் தண்டத்தாலும் காலாலும் உதைத்துமயக்கமடையச் செய்தான்.

சிங்கமுகாசூரன் தனது இரண்டாயிரம் கைகளாலும் பல்லாயிரம் பூதப்படைகளைத்தூக்கியெறிந்து கொண்டிருந்த போது வீரவாகு தேவர் அங்கே வந்து ஓடியோடி அசுரர்களைத் தாக்கி அழித்தார். சிங்கமுகாசூரனின் புதல்வர்கள் நூறுபேர் அவ்விடம் வந்து பாணமழை பொழிந்தனர். அப்போது அங்கு வந்த வீரவாகுதேவர் ஆயிரகக்கணக்கான பாணங்களை விட்டார். அவற்றைச் சிங்கமுகாசூரனின் புதல்வர்களால் அழிக்க முடியவில்லை. அதனால் அவர்கள் தமது வாள்களை உருவிவீரவாகு தேவரைச் சூழ நின்று தாக்கினார். வீரவாகுதேவர் சிவபெருமான் கொடுத்த வாளை எடுத்துத் தன்னைச் சூழ நின்று போரிட்ட நூறு பேரையும் வெட்டிக் கொன்றார். அதனால் கோபங்கொண்ட சிங்கமுகாசூரன் முன்பு சிவபெருமானிடம் பெற்ற சிவப்படைக்கலத்தை எடுத்து விட்டான். வீரவாகுதேவரும் சிவப்படைக்கலத்தை ஏவ அவை இரண்டும் மோதாது திரும்பி வந்தன. அதனால் மனம் வருந்திய வீரவாகுதேவர் முருகனைவணங்கிப் பாணங்களைச் செலுத்தினார். அவை தேர்ப்பாகனைக் கொன்று தேரை அழித்தன. அதனால் கோபங்கொண்ட சிங்காமுகாசூரன் தனது ஆயிரம் கைகளில் வில்லை ஏந்தி பாணங்களைச் சரிமாரியாக விடுத்தான். அவற்றை இலகுவாக அழிந்தார் வீரவாகுதேவர். அதனால் வெகுண்ட சிங்கமுகாசூரன் தாயார் கொடுத்த மாயா பாசத்தை எடுத்து வீச அவ்விடம் எங்கும் இருள்படிந்தது. அவ் மாயா பாசம் அனைவரையும் மயக்கித்தூக்கிச் சென்று உதயகிரியில் வைத்திருந்தது. அதைப்பார்த்த வாயுபகவான் முருகப்பெருமானிடம் விரைந்து வந்து நடந்தவற்றைச் சொன்னார். அதைக்கேட்ட

முருகப்பெருமான் பூதசேனைகளுடன் போர்க்களத்திற்கு வந்தார். சிங்கமுகாசூரன் முருகப்பெருமானைக் கண்டு ஏளனமாகச் சிரித்துப் போரைத்தொடக்கினான். அவன் மாயையினால் தனது தலைகள் ஆகாயத்தை முட்டவும், கால்கள் பாதாளத்தை அடையும்படி மாபெரும் உருவை எடுத்து ஆரவாரித்தான். அதைக்கண்ட யமனும் சூரியனும் இந்திரனும் அக்கினியும் நடுநடுங்கி ஓடினர். சிங்கமுகாசூரன் தனது இரண்டாயிரம் கைகளாலும் பூதகணங்களை அள்ளி விழுங்கிக் கொண்டிருந்தான். அதைக்கேள்விப்பட்ட சூரபன்மன் மலையின் உச்சிக்குச் சென்று தனது தம்பியின் வீரதீரச்செயல்களைப் பார்த்து ரசித்து மகிழ்ந்தான். அப்போது முருகப்பெருமான் ஒரு அம்பைவிட அது சிங்கமுகாசூரனின் மார்பைத் தாக்கிப் பெரியதொரு துவாரத்தையிட உள்ளே சென்ற பூதகணங்கள் முண்டியடித்துக் கொண்டு வெளியேறின. அதன்பின் உதயகிரியில் மயக்கமான நிலையில் இருந்த வீரவாகு தேவரையும் அவரது தம்பிமாரையும் பூதகணங்களையும் விடுவிப்பதற்காக மற்றொரு அம்பை உதயகிரியை நோக்கி முருகப்பெருமான் ஏவினார். அது உதயகிரிக்குச் சென்று மயக்கநிலையில் இருந்தவர்களது மாயையைக் கலைத்தது. அவர்கள் மகிழ்வுடன் வந்து முருகப்பெருமானை வணங்கினார்கள். அதன்பின் சிங்கமுகாசூரனுடன் போரிட்ட முருகப் பெருமான் அவனுடன் வந்த கோடிக்கணக்கான அசுரப்படைவீரர்களை அழித்தார். சிங்கமுகாசூரன் போர்க்கத்தில் தனித்து நின்றான். அவன் தனது இரண்டாயிரம் கைகளிலும் விற்களை ஏந்தி முருகப்பெருமானை நோக்கி இலட்சக் கணக்கான பாணங்களைவிட்டான். அவற்றில் ஒன்று முருகப்பெருமானின் தேர்ப்பாகனான வாயு தேவனைத் தாக்கியது. அதைக்கண்ட முருகப்பெருமான் பாணங்களை விட்டு அவனது தேரை அழித்தார். அவனது வில்லையும் உடைத்தார். அதனால் கோபங்கொண்ட சிங்கமுகாசூரன் சூலப்படையை விடுத்தான். முருகப் பெருமான் பாணங்களை விட்டு அவனது கைகளைத் துண்டித்தார். ஆனால் மறுகணம் அவை முன்பு போலப் பொருந்தின. தலைகளும் அவ்வாறே பொருந்தின.

அதனால் அவனது மாயத்தை உடைப்பதற்காக முருகப்பெருமான் குலுசத்தை ஏவினார். குலிசாயுதம் சிங்கமுகாசூரன் ஏவிய ஆயுதங்களையெல்லாம் அழித்துச் சிங்கமுகாசூரனின் நெஞ்சைப் பிளந்தது. சிங்கமுகாசூரன் இறந்ததைக் கேள்விப்பட்ட சூரபன்மன் மிகுந்த கோபங்கொண்டு முருகப் பெருமானோடு போர் செய்யப்புறப்பட்டான்.

சூரபன்மனோடு ஆயிரத்தெட்டு அண்டங்களில் உள்ள அசுரசேனைகள் வந்தன. சூரபன்மன் எழுபதினாயிரம் குதிரைகளையும், எழுபதினாயிரம் பேய்களையும் பூட்டிய தேரில் ஏறினான். அது பூமியைவிடப் பெரியது. அச்சேனையோடு மோதமுடியாது பூதப்படைகள் கலங்கின. பலர்தப்பி ஓடினார்கள். பலர் மடிந்தனர். இதைப்பார்த்த வீரவாகு தேவர் அசுரர்களுடன் சிறிது நேரம் போர்செய்தார். இருப்பினும் அசுரப்படை அழியவில்லை. அதனால் துக்கத்துடன் வீரவாகு தேவர் முருகப் பெருமானுக்கு அருகே வந்தார். பல பூதகணங்கள் தோற்றுப்போய் ஓடிவந்து முருகப் பெருமானைச் சூழ்ந்து நின்றார்கள். அதைக்கண்ட முருகப் பெருமான் வில்லை எடுத்து நாணொலி செய்தார். அந்த ஒலியின் பயங்கரமான சத்தத்தைக் கேட்டு அசுரர்களின் தேர்கள் நடுநடுங்கின. குதிரைகள், யானைகள் யாவும் நிலத்தில் புரண்டன. முருகப்பெருமான் இலட்சக்கணக்கான அம்புகளை விட்டதும் உலகம் கிடுகிடுத்தது அசுரசேனை சிதறி ஓடியது. அசுரர்களது வில்லின் நாண் உடைந்தது. தேர்கள் பொடிப்பொடியாயின. பாகர்கள் கொல்லப்பட்டனர். முருகப்பெருமானது அம்புகள் அசுரரை விரட்டித் தாக்கின. அதன்பின் ஒவ்வொரு அண்டங்களிலும் இருந்து வந்து போரிட்ட அசுரர்களை ஒவ்வொரு அண்டம் அண்டமாகக் கொன்று குவித்தன. அதைக்கண்ட சூரபன்மன் முருகப் பெருமான் முன்தேரில் வந்து நின்றான்.

முருகப்பெருமானின் சிறியதோற்றத்தைக் கண்ட சூரபன்மன் ஆணவத்துடன் சிரித்துப் பாணமழை பொழிந்தான். வீரவாகு தேவரும் அவரது தம்பி மாரும் விட்ட பாணங்கள் எவையும் சூரபன்மனைத் தாக்கவில்லை. சூரபன்மன்விட்ட பாணங்கள்

பூதப்படையைக் கொன்று குவித்தது. வீரவாகுதேவர் சிவபெருமான் கொடுத்த வாளால் சூரபன்மனின் வில்நாணை அறுத்தார். அதைக்கண்ட சூரபன்மன் மிக்ககோபம் கொண்டு வீரவாகுதேவரின் மார்பில் ஓங்கி அடித்தான். அதனால் வீரவாகு தேவர் அறிவு மயங்க அவரைத் தூக்கி ஆகாயத்தில் எறிந்தான். அவர் முருகனை நினைக்க முருகன் அவரை தன்னருகே வரவழைத்தார்.

இவ்வாறு போர் நிகழும்போது சூரபன்மன் முருகப் பெருமான் விடுகின்ற பாணங்களையெல்லாம் விட விட அழித்துக் கொண்டிருந்தான். அத்துடன் அவரது தேர்கொடியையும் அறுத்து வெற்றிச்சங்கை எடுத்து ஊதினான். அதனால் கோபங்கொண்ட அக்கினிதேவன் கொடியாகித் தேரில் ஏறி நின்றான். அப்போது முருகப்பெருமான் பாணங்களை விட்டு அண்டங்களின் வாயில்களை அடைத்தார். சேனைகள் வராமையால் கோபம் கொண்ட சூரபன்மன் இலட்சக்கணக்கான பாணங்களை ஏவி அண்டங்களின் வாசல்களைத்திறந்தான். அதனால் பலகோடி அசுரர்கள் முருகப் பெருமனைச் சூழ்ந்து நின்று போரிட்டனர். முருகப் பெருமான் கடுங்கோபம் கொண்டு உரப்ப அசுரசேனைகள் காற்றில் மிதப்பதைப் போல வானில் மிதந்தன. அதன்பின் முருகப் பெருமான் மழு, சூலம், சக்கரம் தண்டு எழு என்னும் ஐந்து படைக்கலன்களையும் வீச அப்படைக்கலன்கள் சூழநின்ற அசுரப்படைகளைக் கொன்று குவித்தது. அத்துடன் அவை அண்டங்கள் எங்கும் சென்று அசுரர்களைச் சங்காரம் செய்தது. அதனால் சூரபன்மன் தனித்து நின்றான். அப்போது அவனது தாயான மாயா வந்து,''மகனே உனது எண்ணம் நிறைவேற வேண்டுமானால் அமுத சீத மந்தர கூடம் என்றொரு மலை உள்ளது அதைக் கொண்டுவா'' என்று கூறி மறைந்தாள். உடனே சூரபன்மன் இந்திர ஞானத்தேரை நோக்கி,''நீ விரைந்து சென்று அமுத சீத மந்திர மலையைக் கொண்டு வா'' என்று கட்டளை இட அத்தோர் ஓரிரு விநாடிகளில் அம்மலையைக் கொண்டுவந்தது. அதன் காற்றுப்பட்டதும் இறந்த

அனைவரும் உயிர் பெற்றனர். குதிரைகள் யானைகள் யாவும் உயிர்பெற்றன. உயிர் பெற்ற அசுரர்கள் நிலத்தில் கிடந்த ஆயுதங்களைஎடுத்துக் கொண்டு சூரபன்மனுக்குப் பின்னால் வந்து நின்று ஆர்ப்பரித்தனர். அதைக்கண்ட தேவர்களும் பூத கணங்களும் ஆச்சரியப்பட்டுச் செய்வதறியாது திகைத்தனர். அப்போது உருத்திரப் பாசுபதத்தை எடுத்த முருகப் பெருமான்,''உயிர் பெற்றவர்களைச் சங்கரிப்பாய்'' என்று கூறி ஏவ அப்படைக்கலம் அனைவரையும் சங்கரித்து மீண்டது. அதைக்கண்ட சூரபன்மன் மிக்க துயரம்கொண்டு தனியனாக நின்றான். பின்பு ஒருவாறு தேறி இந்திரஞானத் தேரைப் பார்த்து,''விரைந்து சென்று முருகனின் படை அனைத்தையும் கவர்ந்து சென்று அண்டத்தின் உச்சியில் வைத்திரு'' என்றான். உடனே அத்தேர் விரைந்து சென்று வீரவாகு தேவரையும் பூதகணங்களையும் மயக்கி அள்ளிச் சென்று அண்டகோளின் உச்சியில் வைத்திருந்தது. அதைக்கண்டு கோபமுற்ற முருகப் பெருமான் ஓர் அம்பை எடுத்து,''நம் சேனைகளைக் கவர்ந்து சென்று அண்ட கோளின் உச்சியில் வைத்திருக்கும் இந்திரஞானத்தேரைக் கவர்ந்து வந்து என்னிடம் சமர்ப்பிபாயாக'' என்று கூறி அதனைவிட்டார். உடனே அவ் அம்பு சென்று இந்திர ஞானத்தேரையும் பூதகணங்களையும் தூக்கி வந்து முருகப் பெருமானின் காலடியில் சமர்ப்பித்தது.

அதைக்கண்ட சூரபன்மன் கோபம் கொண்டு முருகப்பெருமானை நோக்கி ஆயிரக்கணக்கான அம்புகளை விட முருகப்பெருமான் தனது சிரிப்பாலே அவற்றை அழித்தார். அதன் பின் சூரபன்மன் சிங்கவாகனத்தில் ஏறிச் சிவபெருமான் கொடுத்த முந்தலைச் சூலத்தை ஏவினான். அது அக்கினியைக் கக்கியவாறு முருகப் பெருமானின் படைக்கலன்களை அழித்தது. பூதப்படைகள் பயத்தால் சிதறி ஓடின. முருகப்பெருமான்,''சூரபன்மன் ஏவிய சூலப்படையைப் பிடித்துவா'' எனக்கூறி சூரிசப்படையை ஏவ அது அதைப் பிடித்து வந்து முருகப் பெருமானிடம்

ஒப்படைத்தது. அதனால் ஆத்திரமுற்ற சூரபன்மன் மாயத்தினால் ஒரு சக்கர வாகப்பறவையாக உருவெடுத்துப் பூத சேனைகளை விழுங்கியும், கொத்திக் குதறியும், முருகப்பெருமானின் தேரைத் தாக்கியும் பெரும் அட்டகாசம் செய்தான். குதிரைகள், யானைகள் பூதர்கள் எல்லோரும் அஞ்சி ஓடினர். முருகப் பெருமான் அப்பறவையைக் குறிபார்த்து அம்புகளை விட்டார். அப்பறவை அவற்றையெல்லாம் அழித்துக் கொண்டிருந்தது. அதைக் கண்ட முருகப்பெருமான் இந்திரனைக் கொடூரமான பெரிய மயில் உருவம் பெற்று வருமாறு அருள, அவன் பூமியிலும் பெரிதான மயில் வடிவெடுத்து வந்து சக்கரவாகப் பறவை வடிவெடுத்துப் பூதகணங்களைக் கொத்திக் குதறிக் கொண்டிருந்த சூரபன்மனைக் கலைத்துக் கலைத்துக் கொத்தினான். அதனால் துன்பப்பட்ட சூரபன்மன் பெரும் சமுத்திரமாகி நின்று அட்டகாசம் செய்தான். அதைக்கண்ட முருகப்பெருமான் ஆயிரம் பாணங்களைத் தொடுக்கச் சூரபதுமனின் மாய உருமறைந்தது.

அதன்பின் சூரபன்மன் பல்வேறு விதமான மாய உருவங்களை எடுத்தான். ஒருகணம் மும்மூர்த்திகளாகவும், மறுகணம் இந்திரனாகவும், மறுகணம் பூதப்படைகள் போலவும் வருவான் இப்படி ஆயிரக்கணக்கான மாய உருவங்களை எடுத்து வந்து பூதகணங்களுக்கும் தேவர்களுக்கும் பெரும் துன்பங்களைச் செய்தான். அவனது மாய உருவங்களை அழிக்க நினைத்த முருகப் பெருமான் ஆயிரம் கோடிப் பாணங்களை விட அவை சூரபன்மனின் மாயத்தோற்றங்கள் அனைத்தையும் அழித்தன.

அதன்பின் முருகப் பெருமான் விசுவரூபமெடுத்தார். விசுவரூபத்தைக்கண்டபின்பும் சூரபன்மனது ஆணவம் நீங்கவில்லை. அவன் மாய மந்திரத்தை உச்சரித்து அந்த காரவடிவமெடுத்து அதனுள் மறைந்து நின்றான். அதைக்கண்ட தேவர்கள் தமக்கு முடிவுகாலம் வந்து விட்டதென்று அஞ்சி

நடுநடுங்கியவாறு ஓடிச் சென்று முருகப் பெருமானைத் தரிசித்துத் தமது பயத்தை வெளிப்படுத்தினர். முருகப்பெருமான் வேற்படையை அனுப்ப, சூரபன்மன் பெரியதொரு மாமர வடிவமெடுத்து அதனுள் மறைந்து நின்றான். முருகனது வேல் மாமரத்தை இரண்டாகப் பிளந்தது. சூரபன்மன் தன்பழைய வடிவத்தை எடுத்து முருகப்பெருமானோடு போர் செய்தான். அப்போது முருகப்பெருமான் ஏவிய வேல் அவனை இரண்டாகப் பிளக்க அவ்விரண்டும் சேவலும் மயிலுமாகி ஆகாயத்தில் நின்றன. மயிலைப் பிடித்துத் தனது வாகனமாக்கிய முருகப்பெருமான் சேவலைத் தனது கொடியில் இருத்தினார்.

அதனைக் கண்ட தேவர்கள் மிக்க மகிழ்ச்சி கொண்டு ஆடிப்பாடினர். முருகனே எமது முழுமுதற் கடவுள் எனப்போற்றினார்கள். சூரபன்மன் இறந்ததைக் கேள்விப்பட்ட அவனது மனைவிமார் உடன் கட்டை ஏறினார்கள். சூரபன்மனின் மகனான இரணியன் பெருந்துன்பப்பட்டுத் தமது குருவாகிய சுக்கிராச் சாரியாரிடம் சென்று தகப்பனுக்கும் தாய்க்கும் மற்றும் இறந்த உறவினர்களுக்கும் அசுரர்களுக்கும் உத்தரக் கிரியைகளை முறைப்படி செய்து சிவபெருமானைத் தியானித்துத் தவம் செய்தான். முருகப்பெருமான் தேவ தச்சனைக்கொண்டு ஒரு சிவன் கோவிலை அமைத்து சிவலிங்கத்தைப் பிரதிட்டை செய்து சிவகாமவிதிப்படி பூசை செய்தார். சிறைப்பட்ட தேவர்கள் எல்லோரும் அதில் கலந்து சிவபெருமானை உள்ளன்போடு வணங்கினர்.

**யுத்தகாண்டம் முற்றிற்று.**

## ஐந்து –வேதகாண்டம்

முருகப்பெருமான் சிவபெருமானுக்குப் பூசை செய்து முடித்து விட்டுத் திருச்செந்தூரை விட்டு நீங்கித் தேவர்கள் புடை சூழத்திருப்பெருங்குன்றத்தை வந்தடைந்தார். அப்போது அங்கே தவம் செய்து கொண்டிருந்த பரராச

முனிவர்களது பிள்ளைகள் வந்து அவரைத் தரிசித்துத் திருப்பெருங் குன்றில் வீற்றிருந்தருளும் என வேண்டினர். முருகப்பெருமான் தேவதச்சனை அழைத்து அங்கே ஒரு கோவிலைக்கட்டுமாறு பணிக்கத் தேவதச்சன் பூஞ்சோலைகள், அழகிய பறவைகள், ஆறுபோன்றவற்றுடன் ஒரு கோவிலை அமைத்தான்.

இந்திரன் தனது பகைவனான சூரபன்மனைக் கொன்று பழைய படியும் விண்ணுலக அரசாட்சியை முருகப்பெருமான் கொடுத்தமையால் மிக்க மகிழ்வடைந்த இந்திரன் தனது மகளான தெய்வயானையை முருகனுக்கு விவாகம் செய்து கொடுக்க விரும்பி அதைப் பிரமாவுக்கும் விட்டுணுவுக்கும் சொன்னார். அதன்பின் திருப்பெருங்குன்றுக்குச் சென்று தனது விருப்பத்தைக் கூறினார்,''முன்பே உமது மகள் சரவணப்பொய்கையில் என்னைத் திருமணம் செய்ய நினைத்துத் தவமிருந்தாள். அதை நானும் விரும்பினேன். அதனதால் நாளைக்கே உமது மகளைத் திருமணம் செய்வேன்'' என்றார்.

எல்லா உலகங்களிலும் உள்ள முனிவர்கள், அரசர்கள், ஞானிகள், தேவர்கள் எல்லோரும் திருப்பெருங்குன்றத்தில் நடைபெறவுள்ள முருகப் பெருமானின் திருமணத்திற்கு வந்தனர். முகூர்த்த வேளையில் சிவபெருமானும் உமாதேவியாரும் திருப்பெருங்குன்றத்திற்கு வந்தனர். அவர்கள் வந்ததும் தெய்வயானை அம்மையார் திருமணமண்டபத்திற்கு வந்து இரத்தினச் சிங்காசனத்தில் முருகனுக்கு அருகே அமர்ந்தார். அதன்பின் இந்திரன் தெய்வயானையின் கையைப்பிடித்து,''எனதுமகளைத் தேவரீருக்குத் திருமணம் செய்து தந்தேன்'' என்று கூறினான். அப்போது பிரமதேவர் ஒரு திருமாங்கலியத்தை எடுத்து முருகனிடம் கொடுத்தார். முருகன் தெய்வயானையின் கழுத்தில் திருமாங்கலியத்தைக் கட்டிய பின் மலர்மாலை அணிவித்தார். அப்போது மங்கல மேளங்கள் முழங்கின. மணியோசை கேட்டது. வானத்திலிருந்து தேவர்கள் பூமாரி சொரிந்தனர்.

திருமணம் முடிந்தபின் சிலகாலம் திருப்பெருங் குன்றில் தங்கியிருந்த முருகப்பெருமான் தன்னுடன்கூட இருந்தவர்களை அழைத்துக்கொண்டு விண்ணகம் சென்றார். தேவர்கள் எல்லோரும் முருகப்பெருமானையும் தெய்வயானையையும் மேளதாளங்களுடன் பூமழை பொழிந்து இன்னிசை இசைத்து வரவேற்றார்கள். அதன் பின் முருகப் பெருமான் தெய்வயானையை அழைத்துக் கொண்டு கந்தவெற்பில் குடியேறினார்.

### வேதகாண்டம் முற்றிற்று

## ஆறாவது தாஷகாண்டம்.

பிரமதேவர் முனிவர்கள் தேவர்களோடு இருக்கும் போது அவனது மகனான தக்கன்,‘‘தந்தையே முழுமுதற்கடவுள் யார்’’ என்று கேட்கப் பிரமா சங்காரத்தைச் செய்யும் சிவபெருமானே முழுமுதற்கடவுள்’’ என்று கூறினார். அவரை நினைத்துத் தவம் செய்தால் விரும்பியவற்றை அடையலாம்’’ என்றும் கூறினார். அதன்படி தக்கன் கடுந்தவம் செய்தான். அதனால் மகிழ்ந்த சிவபெருமான் அவன் முன்தோன்றி,‘‘உனக்கு என்ன வரம் வேண்டும்’’? என்று கேட்டார். அதற்குத் தக்கன்,‘‘எம்பெருமானே, இப்பூவுலகமும் விண்ணுலகமும் எனது கட்டளைப்படி நடக்கவேண்டும். உம்மை வந்து வணங்குவோர். என்னையும் வணங்க வேண்டும். அத்துடன் உமாதேவியார் எனக்கு மகளாக வந்து பிறக்கவேண்டும். பின் தாங்கள் வந்து எனது மகளை மணம்புரியவேண்டும்’’ என்றுகேட்டான். சிவபெருமான் அவன்கேட்ட வரங்களைக் கொடுத்தார்.

தக்கன் செய்த தவப்பயனாகச் சிவபெருமான் உமா தேவியாரை ஒரு சங்காக்தி காளிந்தி என்னும் நதிக்கரையில் வைத்தார். அதைத் தக்கன் கண்டெடுக்க அது ஒரு குழந்தையானது. அதற்குத் தக்கன் தாட்சாயினியென நாமம்

சூட்டிப்பாசத்துடன் வளர்த்து வந்தான். தாட்சாயினி உரிய வயது வந்ததும் சிவபெருமானை நினைத்துத் தவம் செய்தாள். அப்போது சிவபெருமான் ஒரு பிராமணவடிவம் பூண்டு உமாதேவியார் தவம் செய்யுமிடத்திற்குவந்தார். உமாதேவியார் பிராமணரை வணங்கினாள். பிராமணர் தனது உருவத்தைக்காட்ட உமாதேவியார் மகிழ்ந்தார். உமாதேவியாரது தோழிகள் வந்தவர் சிவபெருமான் என்றெண்ணாது. தக்கனிடம் சென்று சொல்லத் தக்கன் தனது ஞானத்தால் ஆராய்ந்து வந்தவர் சிவபெருமான் என்றுணர்ந்து மிக்க மகிழ்ச்சியடைந்தான்.

மிக்க மகிழ்ச்சியடைந்த தக்கன் சோதிடர்களை அழைத்துத் தனது மகளின் திருமணத்திற்கான முகூர்த்த நாளைக்குறித்து தரும்படி கேட்க அவர்கள்அன்றே நல்ல முகூர்த்தம் என்றனர். அதனால் மகிழ்ந்த தக்கன் தூதுவர்களை அழைத்துச் சகல அண்டத்தினரையும் அழைத்துவரச் சொன்னான். அன்று மிகக்கோலாகலமாகச் சிவபெருமானுக்கும் உமாதேவியாருக்கும் திருமணம் நடைபெற்றது. அன்றில் இருந்து தக்கனுக்கு ஆணவம் மேலிட்டது. முழுமுதற்கடவுளான சிவபெருமான் தனது மருமகனாகையால் அவர் தன்னை விட உயர்ந்தவர் அல்ல என்று எண்ணி அவரைமதியாது வாழ்ந்தான். அத்துடன் சகல அண்டத்தவர்களுக்கும் தான் சிவபெருமானைவிட மேலானவன் என்று கூறி. இனிமேல் தன்னை வணங்கினால் போதும் சிவபெருமானை வணங்கத்தேவையில்லை என்றான். தேவர்கள் பயமிகுதியாய் தக்கனின் சொற்படி நடந்தனர். சிவபெருமானை மதியாத தக்கன் தனது மகளான உமாதேவியாரையும் சிவபெருமானையும் சந்திக்கக் கைலாயத்திற்குச் சென்ற போது நந்தி அவனை உள்ளே விடவில்லை. அதனால் ஆத்திரம் கொண்ட தக்கன் திரும்பி வந்து பிரமா, விட்டுணு, இந்திரன், ஆகிய தேவர்களை அழைத்து இனிமேல் சிவபெருமானை வணங்கக்கூடாதென்று கட்டளையிட்டான். அதனால் அவர்கள் பயத்தால் நடுநடுங்கினார்.

பிரமதேவர் ஒரு யாகம் செய்ய விரும்பித் திருக்கைலாயத்திற்குச் சென்று சிவனை அழைத்தார். சிவன் மகிழ்ந்து தனது பிரதிநிதியாக நந்திதேவரை அனுப்புவதாகக் கூறினார். பிரமதேவர் மகிழ்ந்து தான் யாகம் செய்யப் போவதைத் தக்கனுக்குக் கூறினார். தக்கன் மகிழ்வுடன் வருவதாகக் கூறினான். யாகம் நடைபெற்றன்று சிவபெருமான் நந்திதேவரை அழைத்துப்பிரமாவின் யாகத்திற்குச் சென்று தனது அவிப்பாகத்தை வாங்கி வருமாறு கூறினார்.

நந்திதேவர்யாகத்திற்கு வந்தபோது தக்கன் தனக்கே அவிப்பாகம் தரப்படல் வேண்டும் என்று ஆணையிட்டான். அதைக்கேட்டுத்தேவர்கள் நடுநடுங்கினார்கள். நந்திதேவர்கோபப்பட்டு,"சிவபெருமானை மதியாது யாகம் செய்தால் அவர்களின் தலை அறுந்து விழும். அத்துடன் நீ பெற்ற வரங்கள் யாவும் செயலிழக்கும்" என்று கூறிவிட்டுச் சென்றார். அதனால் பயந்த பிரமாயாகம் செய்வதை நிறுத்தினார்.

இது நிகழ்ந்து சிலகாலங்களின் பின் தக்கக் மிகப்பெரியதொருயாகத்தைச் செய்ய விரும்பினான். சிவபெருமானைத் தவிர மற்றெல்லோர்க்கும் அழைப்பு அனுப்பப்பட்டது. எல்லோரும் யாகம் நடைெறும் மண்டபத்தில் கூடி இருந்தனர். இலட்சக்கணக்கான முனிவர்களும, பிராமணர்களும், தேவர்களும் கூடி இருக்க யாகம் ஆரம்பமானது. அப்போது தக்கன் யாகத்திற்கு எல்லோரும் வந்தார்களா என்று தூதுவர்களைக் கேட்க, தூதுவனொருவன்,"அகத்தியர் சனகாதி முனிவர், வசிட்டர், அத்திரி, பிருகு, ததீசி, துர்வாசகர், பராசர் ஆகியோர் வரவில்லை" என்று கூறத் தக்கன் கோபமிகுதியால் பயங்கரமாகச் சிரித்தான்.

அப்போது யாகத்திற்கெனவந்த தசீசி முனிவர்,"தக்கா, முழுமுதற் கடவுள் சிவபெருமான் ஒருவரே. அவரை மதிக்காது செய்யும் யாகம் முற்றுப் பெறாது. யாகங்களின் போது அவிப்பாகம் சிவபெருமானுக்குரியது. அதனால் சிவபெருமானுக்கு அவிப்பாகத்தைக்கொடு" என்றார்.

தக்கன் கொடுக்கமறுத்தான். அதனால் தசீசி முனிவர் சிவனது பெருமைகளையெல்லாம் கூறினார். எனினும் அவற்றைக் கேளாது யாகம் செய்த தக்கன் அவிப்பாகத்தை எல்லோருக்கும் கொடுக்க அவர்கள் வாங்கி உண்டனர்.

சிவபெருமானிடம் அனுமதி பெற்றுக் கொண்டு உமாதேவியார் தக்கனது யாகத்திற்குச் சென்றார். தக்கன் உமாதேவியாரை வரவேற்காது அவமதித்தான். தகாத வார்த்தை களைப் பேசினான். அதனால் கோபங்கொண்ட உமாதேவியார் திருக்கைலாயமலைக்குச் சென்று நடந்தவற்றைக் கூறி அதற்குத் தண்டனை வழங்குமாறு கூறினார். அதைக்கேட்டுக் கோபப்பட்ட சிவபெருமானின் நெற்றிக்கண்ணிலிருந்து வீரபத்திரர் வெளிப்பட்டார். அவர் சிவபெருமானையும்உமாதேவியாரையும் வணங்கிப் பின் இலட்சக்கணக்கான பூதகணங்களுடன் தக்கனதுயாகசாலைக்குச் சென்று யாகசாலையையில் உள்ள சகல வாசல்களையும் மூடிப் பூதகணங்களைக் காவலில் இருக்கச் செய்துவிட்டு யாகத்தில் கலந்து கொண்டவர்களைத் தாக்கத் தொடங்கினார். முனிவர்களையும் தேவர்களையும் மிகக்கடுமையாகத்தாக்கினார். பிரமா, விட்டுணு, குபேரன் ஈசான், உருத்திரன், சூரியன் முதலானோர் வீரபத்திரரின் தாக்குதலால் உயிரிழந்தனர். தக்கன் தப்பி ஓடினான். அவனைப் பிடித்த வீரபத்திரர் அவனது தலையை வெட்டி அக்கினியில் போட்டார். இவ்வாறு பலரைக் கொன்று கொண்டிருந்தபோது சிவபெருமான் உமாதேவியாரோடு எழுந்தருளி,“வீரபத்திரா உனது சினத்தைத் தணித்து நீகொன்றவர்களை உயிர்ப்பி” என்றார். சிவபெருமானின் வேண்டுதலுக்கமைய வீரபத்திரரின் சினம் தணிந்தது. இறந்தவர்கள் உயிர்பெற்றனர். உயிர்பெற்றவர்களுள் தனது மகனான தக்கனைக் காணாத பிரமா சிவபெருமானை வேண்ட சிவபெருமான் தக்கனை உயிர்ப்பிக்குமாறு வீரபத்திரரிடம் சொன்னார்.தலையில்லாது இருந்த தக்கனது உடலுக்கு யாகத்தில் பலிட்ட ஆட்டுக்கடாவின் தலையைப் பொருத்தித் தக்கனை வீரபத்திரர் உயிர்ப்பித்தார்.

தவறை உணர்ந்த தக்கன் காசித்திருநகரை அடைந்து சிவலிங்கத்தைத் தாபித்து நெடுங்காலம் தவம் செய்யச் சிவபெருமான் அவன் முன் தோன்றி அவன் செய்த பாவங்களை மன்னித்துப் பூதகணங்களுக்குத் தலைவனாக்கினார்.

தொண்டை நாட்டிலே வள்ளியங்கிரி என்றொரு மலை உள்ளது. அம்மலையில் வேடர்களே வசித்து வந்தனர். அவர்களுக்குத் தலைவன் நம்பி. அம் மலையிலே சிவ முனிவர் தவம் செய்து கொண்டிருந்தார். அவரின் அருகே ஒரு அழகிய மான் வந்தது. அப்போது வள்ளிக் கொடிக்குள் ஒரு குழந்தை இருந்தமையால் அதைப் பார்த்துக் கொண்டு மான் நின்ற போது வேடுவத்தலைவனான நம்பி தனது மனைவி பிள்ளைகளுடன் அவ்வழியாக வந்தான். அவன் அக்குழந்தையைக் கண்டு அதன் அழகில் மயங்கி அது தான் வணங்கும் சிவபெருமானது செயல் என்று நினைத்துத் தனது வீட்டிற்குக்கொண்டு சென்று அன்புடன் வளர்த்தான். உரிய வயது வந்ததும் வள்ளியைத் தோழிகளோடு தினைப்புலம் காக்க அனுப்பினான். முருகப் பெருமான் முன்கொடுத்தவரபப்படி வள்ளியை மணம் புரியவேடுவ வேடத்துடன் வள்ளி காவல் செய்யும். தினைப் புலத்திற்குவந்தார். வள்ளியின் அழகில் மெய்மறந்த முருகப்பெருமான் அவளைத் தன்னைத் திருமணம் செய்யுமாறு வற்புறுத்த வள்ளி அவரை ஏசிக்கலைத்தாள். அப்போது நம்பி வேடுவர்களுடன் அங்கே வந்தான். அவனைக்கண்டதும் முருகன் வேங்கை மரமாக உருமாறி நின்றார். அங்கே புதிதாக ஒரு வேங்கை மரம் நிற்பதைக் கண்ட வேடர்கள்,‘‘இம்மரத்தால் எமது குலத்திற்கு ஆபத்து உண்டாகும். அதனால் இதை வேரோடு தறிக்க வேண்டும்’’ என்று கூற நம்பி,‘‘அதைத் தறிக்க வேண்டாம். அது வள்ளிக்குத்துணையாக இருக்கட்டும்’’ என்று கூறி விட்டுச் சென்றான்.

அவன் சென்றதும் வேங்கை மரமாக நின்ற முருகன் பழையபடி மனித உருப்பெற்றார். அதைக்கண்ட வள்ளி,‘‘வேடுவர்கள் தீயவர்கள். அவர்கள் தம்சாதிப்

பெண்களைப் பிறசாதி ஆண்களுக்குக் கொடுக்கமாட்டார்கள். அதனால் ஓடிப்போய்விடு’’ என்று எச்சரித்தாள். அப்போது நம்பி தனது கூட்டத்தினருடன் அங்கே வந்தான். அவனைக் கண்ட முருகன் முதிய வடிவம் கொண்டு நம்பியைக் கண்டு ஆசீர்வதித்து திருநீறு கொடுத்தார் நம்பி அவரைத் தனது மகளுக்குத் துணையாக இருக்கும் படி கூறிவிட்டுச் சென்றான்.



நம்பி சென்றதும் முதியவடிவில் இருந்த முருகன் வள்ளியின் கையைப் பிடித்துச் சரசமாடினார். வள்ளி கோபம் கொண்டு அவரை ஏசினார். அதனால்,‘‘இவளை ஒத்துக்கொள்ள வைக்க அண்ணனான விநாயகரை வேண்டுவோம்.’’ என நினைத்து வேண்ட விநாயகர் ஒரு பெரிய யானை உருவெடுத்து வந்து வள்ளியைத்துரத்தினார். அதனால் பயந்த வள்ளி,‘‘உங்களை நான் திருமணம் செய்கிறேன். என்னைக் காத்தருள்க’’ என்ற முருகனைக் கட்டிப்பிடித்தாள். அப்போது முருகப் பெருமான் தனது திருவுருவத்தைக் காட்டினார். சிவபக்தனான நம்பி சிவபெருமானின் குமாரனைத் தனது மகள் விரும்புவதை அறிந்து நல்ல நாளில் அவர்களுக்குத் திருமணம் செய்து வைத்தான். அதன் பின் முருகக் கடவுள் நம்பியிடமிருந்து விடை பெற்று செருத்தணி மலையை அடைந்து அங்கே தேவதச்சனால் அமைக்கப்பட்ட கோவிலிலே குடி புகுந்தார்.

திருச்சிற்றம்பலம்.

முற்றும்.